National Museum of Singapore



# Once Upon a Tide

SINGAPORE'S JOURNEY
From Settlement to Global City

24 May 2025 – 9 October 2026

காட்சிக்கூட வழிக்காட்டி

## ஆலோசனை

*காட்சிக்கூடத்தின் முன் பகுதியில் ஒளி வெளிச்சம் குறைவாக உள்ளது. அங்கு ஒளிக்காட்சி ஒளிபரப்பப்பபடுகிறது., மேலும் அங்கு நுணுக்கமான அமைப்புக்களும் உள்ளன.*

*தயவுசெய்து இந்தப் பகுதிகளில் கவனமாகச் செல்லுங்கள்.*

## அரும்பொருளக விதிமுறைகள்

**உணவும் பானமும் உட்கொள்ளக்கூ**



**ஒளிக்கீற்றுடன் புகைப்படம் எடுக்கக்கூடாது**



**காட்சிப்பொருட்களைத் தொடக்கூடாது**



**பெரிய பொருட்களை எடுத்துவரக்கூடாது. உங்கள் முதுகுப்பையை முன்பக்கத்தில் தூக்கிச் செல்லவும்.**



**தயவுசெய்து மெல்லப் பேசுங்கள்**



**தயவுசெய்து பிள்ளைகளைக் கவனியுங்கள்**



# 0100

## *முன்னுரை*

*சிங்கப்பூர் ஒரு நவீன அதிசயம் – பொருளாதார ரீதியாக வெற்றி பெற்ற உலகளாவிய நகரமாகத் திகழும் இது, பல பண்பாட்டு அடையாளங்களிலும் ஆசிய பாரம்பரியத்திலும் உறுதியாக வேரூன்றியுள்ளது. இந்த நிலையை எவ்வாறு நாம் அடைந்தோம்? எவ்வாறு நம்மை மாற்றியமைத்துக் கொண்டோம்? நமது இலக்கை எவ்வாறு வடிவமைத்தோம்? இந்த மாற்றங்களின் மத்தியில், உள்ளூரிலும் உலகளவிலும் வெளிப்படும் நமது அடையாளத்தின் மாறாத தனித்துவம் என்ன?*

*நாடு சுதந்திரம் அடைந்த 60வது ஆண்டை நினைவு கூரும் இந்தச் சிறப்பு கண்காட்சியில், சிங்கப்பூரின் நீண்டகால பயணக்கதையை நாங்கள் கூறுகிறோம் – அதைச் சுற்றியுள்ள கடலுடன் நெருங்கிய பிணைப்பைக்கொண்ட ஒரு தீவாக, நமது கரைகளிலும் அதற்கு அப்பாலும் அலைகளை உருவாக்கி, அதன் அடையாளத்தை வரையறுத்த நதி மற்றும் அதை இன்றைய நிலைக்கு கட்டி எழுப்பிய குடிமக்கள், ஆகிய அனைத்தையும் நாங்கள் உங்களுக்காக கொண்டு வருகிறோம்.*

*ஆராயவும் ஈடுபடவும் சிந்திக்கவும் இந்தப் பயணத்தில் எங்களுடன் சேர உங்களை அழைக்கிறோம். எதிர்காலத்தை நோக்கி சிங்கப்பூர் நகரும் இந்தத் தருணத்தில், உங்களுக்கு வழங்கப்பட்ட கைவளையம் மூலம் கண்காட்சியில் கேட்கப்படும் கேள்விகளுக்கான உங்கள் பதில்கள், உங்களுக்கும் எங்களுக்கும் எதிர்காலப் பாதையை வரையறுக்க உதவும்.*

# 1000

## *அத்தியாயம் 1*
## *என்றும் வரைபடத்தில்*

*சிங்கப்பூர் எப்போதும் வரைபடத்தில் இருந்ததா? அது நாம் "சிங்கப்பூரை" எவ்வாறு வரையறுக்கிறோம் அதன் தோற்றத்தை பின்தொடருகிறோம் என்பதை பொருத்தது. சுதந்திரம் 1965-ல் பெற்றதிலிருந்து கணக்கிட்டால் சிங்கப்பூர் 60 வயதான தேசிய அரசு. ஆனால் அதன் நீண்ட வரலாற்றைப் எடுத்துக்கொண்டால் — அது 158 ஆண்டுகளுக்கு முன் முடியாட்சி ஆட்சி காலத்திலிருந்து துவங்கியதா, 206 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய கிழக்கிந்திய வாணிப நிறுவனம் குடியேறியதிலிருந்து துவங்கியதா, அல்லது 700 ஆண்டுகளுக்கு முன் மலாய் அரசாட்சியிலிருந்து துவங்கியதா?*

*சிங்கப்பூர் எவ்வாறு வரையப்பட்டுள்ளது என்பதை பார்த்து இந்த கேள்விக்கான விடையை அணுக முடியும். புவியியல் வரைபடங்களும் அளவை வரைபடங்களும் எவ்வாறு மக்கள் தனக்கான வழியை கண்டுபிடித்து ஓர் இடத்தை அடைந்தார்கள் என்பதை காட்டுகிறது மற்றும் ஓர் இடம் எவ்வாறு அதன் சுற்றுப்புறத்தோடு தொடர்புடையது என்பதை புரிந்துகொள்வதையும் விளக்குகிறது. இந்த ஆர ம்ப விளக்கக்காட்சியில், ஆசிய மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் வரலாற்று வரைபடங்களை ஓர் தொடக்கமாகக் கொண்டு சிங்கப்பூர் ஆதிகாலத்தில் இருந்ததற்கான தடயங்களை கண்டுபிடிக்க உங்களை அழைக்கிறோம். அப்போது அதன் பெயர்கள் என்ன, அது எங்கே இருந்தது?*

# 1100

## *பாகம் 1*
## *ஆதிகாலங்களிலிருந்து*

*சிங்கப்பூரை குறிக்கும் ஆகப் பழைய வரைபடம் எது? அது, சிங்கப்பூரை நாம் ஒரே பகுதியில் உள்ள இடங்களோடு அல்லது ஒலியில் ஒரே மாதிரி இருக்கும் பெயர்களோடு எவ்வளவு உறுதியாக இணைத்துப் பார்க்கிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது.*

*ஆரம்பகால இணைக்குறிப்புகளின்படி* 2-*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க வானவியலாளர் மற்றும் வரைபடவியலாளர் கிளௌடியஸ் டாலெமி மலாய் தீபகற்பத்தை வரைபடமிட்டதிலிருந்து அப்பெயர்களுடன் தொடர்புபடுத்த முடியும். மிக தெளிவான தோற்றங்களாக,* 16*ஆம் நூற்றாண்டில், ஐரோப்பியர்கள் கிழக்கு இந்தியாவிற்கு மேற்கொண்ட கடற்பயணங்களின் போது உருவாக்கப்பட்ட வரைபடங்களில் சிங்கப்பூர் தென்பட ஆரம்பித்தது. ஆனால் ஒரே கேள்வி நிலவுகிறது: அந்தக் காலக்கட்டத்தில் சிங்கப்பூர் என்னவாக இருந்தது; அதைப் பற்றி அப்போது என்ன தெரிந்திருந்தது?*

# 1101

## 1.

***லிங்சோடென்னின் கிழக்கு இந்திய வரைபடம்***

***1595***

***காகிதத்தின் மீது  செதுக்கப்பட்டுள்ளது***

***2021-00231***

*சிங்கப்பூர் இந்த வரைபடத்தில் "சிங்கப்பூரா" என்று குறிக்கப்பட்டுள்ளது மற்றும் அது மலாய் தீபகற்பத்தின் தென்கோடி முனையில் அதன் மலாய் பெயரினாலேயே குறிக்கப்பட்டுள்ளது. இந்த வரைபடம் ஜான் ஹுய்கென் வான் லின்ஸ்ஹோடட்டன் என்ற டச்சுக்கார், அவர் 5 வருடங்கள் கோவாவில் பேராயராக கழித்தபோது தயாரிக்கப்பட்டது , கோவா அப்போது டச்சுகாரர்களின் ஆட்சியில் இருந்தது. பணியில் இருந்தபோது ,லின்ஸ்ஹோடட்டன் போர்ச்சுக்கீசியர்கள் மூலம் கிழக்கு இந்தியாவிற்கான கடற்பயண வழியின் தகவலை பெற்றார், அவரின் 1596 -ல் வெளியிடப்பட்ட "பயணத்திட்டம்" புத்தகத்தில் இந்த வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது.*

## 1102

### 1.

***புலாவ் உபினில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிகள், சிங்கப்பூர் கூட்டமாக இருப்பது மற்றும் வேட்டையாடுவதை தொழிலாக கொண்டதிலிருந்து எரிமலையில் வெளியாகி குளிர்ந்த மண்ணில் விவசாயத்திற்கு மாறிவரும் சமூகத்தின் காலமாக இருக்கலாம்.***
***எரிமலை குழம்பில் உருவான பாறையாக இருக்கலாம்***
***A-0533-A, A-1734, A-1280-A***

*வரலாற்றிற்கு முந்தைய சிங்கப்பூரைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? இந்த கற்கருவிகள் புலாவ் உபினின் மேற்கு கடைகோடி பகுதியில் உள்ள தஞ்சோங் தாஜாம் கடற்கரையில் சேகரிக்கப்பட்டது. அவை வேட்டையாடுவதிலிருந்து விவசாயத்திற்கு மாறுவதற்கு இடைப்பட்ட காலத்தை சேர்ந்தது (சுமார் 3000 முதல் 5000 ஆண்டுகளுக்கு முந்தையது). இந்த வரலாற்றிற்கு முந்தைய கருவிகள் மேஜர் P.D.R.வில்லியம்ஸ் ஹன்ட் என்பவரால் 1940க்கு பின் 1950க்கு முன் சேகரிக்கப்பட்டவை, அவர் அப்போதைக்கு மலாயா கூட்டமைப்பின் அருங்காட்சியகத்தின் தற்காலிக இயக்குநராக இருந்தார், அப்போது அகழ்வாராய்ச்சி மற்றும் இனக்குழுக்களை பற்றிய களப்பணியில் பங்குபெற்றிருந்தார்.*

### 2.

***டாலமியின் 11-வது ஆசிய வரைபடம்***
***1525-ல் லாரண்ட் ஃபிரைஸ் ஆல் வெளியிடப்பட்டது***
***காகிதத்தில் மரத்தால் செதுக்கப்பட்டது***
***XXXX-01901***

*கிளௌடியஸ் டாலெமி 2-ஆம் நூற்றாண்டின் கிரேக்க வானவிய லார், ஜியோகிரஃபிகா என்ற கட்டுரையால் பிரபலமானவர் , அது அந்த*

*காலகட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்ட மற்றும் விளக்கப்பட்ட தெரிந்த உல கப் பற்றியது. இந்த வரைபடம் 16ஆம் நூற்றாண்டில் உருவானது, ஜெர்மானிய பதிப்பாளர் மார்டின் வால்ட்ஸீமுல்லர் வெளியிட்ட 1513 ஆம் ஆண்டின் "ஜியோகிரஃபிகா" பதிப்பை அடிப்படையாகக் கொண்டது. இது இன்றைய தென்கிழக்கு ஆசியாவை சித்தரிக்கிறது, மலாய் தீபகற்பத்துடன் ''ஔரியா கெர்சோனீஸ்'' (அல்லது பொன்னான தீபகற்பம்) என அடையாளம் காணப்பட்டுள்ளது, மதிப்புமிக்க செல்வந்தர்களால் செழுமையான இடமாக இருந்ததால். தென் முனையில் ''சபானா வர்த்தக நிலையம்'' என்ற பெயரில் ஒரு வர்த்தக நிலையம் சிங்கப்பூரைக் குறித்திருக்கலாம்.*

## 3.
## செபஸ்டியன் முன்ஸ்டர் வெளியிட்ட சுமத்திரா மற்றும் மலாய் தீபகற்ப வரைபடம்

***16 ஆம் நூற்றாண்டு மத்தியிலிருந்து 17 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திற்கு முன்***

***காகிதத்தின் மீது செதுக்கப்பட்டு கையால் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது***

***XXXX-01438***

*ஜெர்மானிய வரைபடவியலாளர் செபஸ்டியன் முன்ஸ்டர் , டாலமியின் ஜியோகிரஃபிகா -வை புதுப்பித்து 1544ல் காஸ்மோகிராஃபிகா என்ற புத்தகத்தை வெளியிட்டார், அது 1628 வரை பல பதிப்புகளாக வெளியிடப்பட்டது. இந்த வரைபடம் சுமத்திராவையும் ''தப்ரோபனா'' (வரலாற்றில் இன்றைய ஸ்ரீலங்காவோடு அதிகம் தொடர்புடைய ஒரு பெயர்) என்று குறிப்பிட்டிருப்பது மற்றும் மலாய் தீபகற்பத்தையும் காட்டுகிறது. தீபகற்பத்தின் தென்கிழக்கு கடற்கரைபகுதியில் ஒரு குடியேற்றம் ''சிங்கடோலா'' -- என்று அடையாளம் காணப்பட்டுள்ளது ஆகத்தென்முனையில் நாம் எதிர்பார்ப்பதுபோல் இல்லாவிட்டாலும்,*

போர்ச்சுக்கீசிய மொழிபெயர்ப்பான இந்தப் பெயர் அந்த காலகட்டத்தில் சிங்கப்பூரின் மலாய் பெயரான சிங்கப்பூரா என்ற பெயரை ஒத்துள்ளது.

# 1200

## *பாகம் 2*
## *ஆசியாவின் உறவுகளின் மையமான சிங்கப்பூர்*

*சிங்கப்பூர் என்றும் தனிமையில் இருந்ததில்லை. மாறாக அது எப்போதும் மிகப்பெரிய, ஒரே நேரத்தில் இணைந்த பல அரசியல் அமைப்புகள், பேரரசுகள் மற்றும் உலகங்களின் பகுதியாகவே இருந்தது. மேலும் உலக வர்த்தகம் மற்றும் கலாச்சாரத்துடன் தொடர்புடையதாக இருந்தது.*

*சிங்கப்பூர்* 14-*ஆம் நுற்றாண்டிலிருந்து சீன வர்த்தக கட்டமைப்பில் அதன் பங்கை வழங்கியது; மலாய் உலகின் தலைநகரங்களில் ஒன்றாகவும், முக்கிய கப்பல் துறைமுக நகரங்களில் ஒன்றாக இருந்ததால், இது ஆசியாவில் நிச்சயமாகவே பொருந்தியது. இம்மாதிரியான சிங்கப்பூரின் வட்டார வடிவமைப்பை, வரைபடங்களிலும் இப்பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளக் காட்சிப்பொருளின் வழியாகவும் காண முடியும்.*

## 1201

### 1.
***மாவ் குன் அச்சிட்ட வரைபடம்***
***20 ஆம் நூற்றாண்டு***
***காகிதம்***
***XXXX-02140***

*இந்த நீரிணைப்பு இரண்டு தான்-மா-ஸி காட்டுமிராண்டி மலைகளுக்கு இடையில் ஓடுகிறது, அது பார்ப்பதற்கு 'டிராகனின் பற்களை' போன்று இருக்கிறது. நடுப்பகுதியில் ஒரு நீர்வழி ஓடுகிறது. வயல்கள் தரிசாக உள்ளன மற்றும் கொஞ்சமாக நெல் கதிர்கள் உள்ளன. வானிலை மிக வெப்பமாகவும் நான்காம் மற்றும் ஐந்தாம் பருவத்தில் மிக கடுமையான மழையோடும் உள்ளது.*

*-வாங் டேயுவான் (汪大淵) டௌயி ஜீலுவில்(岛夷志略) இருந்து , முதல் பதிப்பு 1349*

*சீன கடற்படை உயரதிகாரி செங் ஹீ - வினுடைய (郑和) இராணுவக் கட்டுரை ஊபெய் ஜீ (武備志), மாவ் குன்(茅坤) என்று பொதுவாக அழைக்கப்படும் வரைபடத்தை 17ஆம் நூற்றாண்டில் தொகுத்து வெளியிட்டுள்ளது, அது பின்னால் தொகுத்த* ***மாவ்*** *யூஆன்யீயின் பாட்டனாரின் பெயரால் அழைக்கப்படுகிறது. அந்த வரைபடங்கள் 15-ஆம் நூற்றாண்டு மிங் ஆட்சிகாலத்தில் நடந்த நெடும் பயணத்திலிருந்து திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது, குறிப்பாக செங் வழி நடத்திய பயணங்களில் இருந்து. முதலில் 1422-ல் வரையப்பட்ட வரைபடம் மஞ்சள் கடலின் கடற்கரை நெடுகும், தென்கிழக்கு ஆசியா வழியாக இந்தியப் பெருங்கடல் கடற்கரை , கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை வரை உள்ளடக்கியுள்ளது.*

### 2.
***சீன பயண திசைகாட்டும் கருவி***
***19 ஆம் நூற்றாண்டு***
***மரம், பித்தளை மற்றும் கண்ணாடி***
***2021-00607***
***ஆசிய நாகரீக அரும்பொருளகத்திடமிருந்து இரவலாகப் பெற்றது***

*இதை போன்ற திசைகாட்டும் கருவிகள், வானவியல் மற்றும் நிலப்பரப்பு வழிகாட்ட 24 திசைகளுடன், மாவே குன் (* 茅 坤 *) வரைபடத்தில் குறிப்பிடப்படுள்ளது. அவைகள் 11- ஆம் நூற்றாண்டின் பிறபகுதி முதல் 12 -ஆம் நூற்றாண்டின் முன்பகுதி தொடங்கி சீன கடற்பயணிகளால் பயன்படுத்தப்பட்டது. சீன கடற்படை உயரதிகாரி செங் ஹீ 14 -ஆம் நூற்றாண்டில் கடற்பயணத்திற்கு மேலும் நவீன 48 திசைப்புள்ளிகளை கொண்ட கருவியை பயன்படுத்த விரும்பினார்.*

## 3.

***சீன பச்சைநிறப் பாண்டம், கல்பாண்டம் மற்றும் நீலம்-வெள்ளை சில்லுகள்***
***யுவான் முதல் மிங் வம்ச காலம் வரை***
***2015-02147-054, 022, 035 & 040***
***ஆசிய நாகரீக அரும்பொருளகத்திடமிருந்து இரவலாகப் பெற்றது***

*இந்த பொருள்கள் சிங்கப்பூர் ஆற்றங்கரையில் 1998-ல் 14-ஆம் நூற்றாண்டின் அடர்ந்த அடுக்கான கலைப்பொருள்களிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டவை. இவை அக்காலத்தில் சிங்கப்பூரில் கணிசமான சீன வியாபாரம் நடந்துள்ளதைக் காட்டுகிறது.*

## 4.

***கதிப் செலிபியுடைய சுமத்திராவின் வரைபடம்***
***1732-ல் இப்ராகிம் முட்டெஃபெரிக்காவின் வெளியீடு***
***காகிதத்தின் மீது செதுக்கப்பட்டு கையால் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது***
***2010-01460***

*இந்த வரைபடம் கிதாப் சிகான்னுமாவின் ஒருபகுதி (உலகக்காட்சிப் புத்தகம்) 17-ஆம் நூற்றாண்டின் ஒட்டொமான் மேதை கதிப் செலிபீ உருவாக்கியது. தெளிவில்லாமல் இந்த வரைபடத்தில் மூவார் ஆற்றிற்கு கீழுள்ள மலாய் தீபகற்பத்தின் மொத்த தென்பகுதியும் சிங்கப்பூர் என்று அரேபிய மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காலகட்டத்தில் சரியான புவியியல் எல்லையை சுட்டிக்காட்டுவதில் முரண்பாடுகள் இருந்ததை காட்டுகிறது. ஆனாலும் 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தைய ஐரோப்பிய வரைபடத்தை ஒத்திருந்தது. இந்த வரைபடங்களை தயாரிப்பின் போது ஐரோப்பியர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கலாம்.*

**5.**

***வானியல் அளவைக்கருவி***

***சுமார் 1700***

*தாமிர உலோகக்கலவை*

***1999-01562***

***ஆசிய நாகரிக அரும்பொருளகத்திலிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*இந்த வானியல் அளவைக்கருவி இஸ்லாமிய உலகில் நேரத்தைக் கணக்கிடுவதற்கும் வழிசெலுத்தலுக்கும் நில அளவை செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. இது ஈரானின் இஸ்ஃபஹானில் உள்ள 'அப்துல் அல்-அய்ம்மாஹ்' என்பவரின் பணிமனையால் உருவாக்கப்பட்டது*

# 1202

## 1.

***கிழக்கு இந்தியாவின் ஒரு புதிய கணக்கு-அலெக்ஸாண்டர் ஹமில்டன்(தொகுதி II)***
*1727*
***கன்றின் தோல், காகிதம்***
***2014-01292***

*1703 ஆம் ஆண்டு ஜோகூர் சுல்தான் IV -ஆல் ஸ்காட்லாண்டின் கடல் மாலுமி அலெக்ஸாண்டர் ஹமில்டனுக்கு சிங்கப்பூர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அந்த வாய்ப்பை அவர் மறுத்தார் ஏனென்றால் தனியாருக்கு அந்த தீவு பொருத்தமானது அன்று ஆனால் "நிறுவனங்களுக்கு குடியேற்றத்தை ஏற்படுத்த ஏற்றது, வர்த்தகத்தின் மையத்தில் இருப்பதாலும் பாதுகாப்பான துறைமுகம் மற்றும் நல்ல ஆறுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதாலும், எனவே இந்த ஆறுகளில் அனைத்து காற்றும் பாய்மரக்கப்பலை உள்ளே கொண்டுவரவும் வெளியே செலுத்தவும் வசதியாக அமைந்திருந்தன".*

## 2.

***மானெவில்லட்டின் அளவை வரைபடம் - பன்கா மற்றும் மலாக்கா நீரிணை***
*1745*
***காகிதத்தில் செதுக்கப்பட்டது***
***2023-00512***

*பன்கா மற்றும் மலாக்கா நீரிணை அளவை வரைபடமானது பிரெஞ்ச் நீர்நிலை அளவையியலாளர் ஜீன் - பாப்டிஸ்ட் நிக்கோலஸ் டெனிஸ் தி'அப்ரெஸ் தி மானெவில்லட்டினால் தயாரிக்கப்பட்டது, 22 அளவை வரைபடங்களில் ஒன்றாக லீ நெப்டியூன் ஓரியெண்டலுக்கான பூகோள வரைபடத்திற்காக தொகுக்கப்பட்டு 1745 -ல் வெளியிடப்பட்டது. இந்த பூகோள வரைபடத் தொகுப்பு பிரஞ்ச் அறிவியல் கலைக்கழக உதவியுடன் பிரஞ்ச் கிழக்கிந்திய கம்பெனியால் நிறுவப்பட்டது. சிங்கப்பூர் அந்த வரைபடத்தில் "ஐ.பாஞ்ஜாங்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அது அந்த காலகட்டத்தில் சிங்கப்பூரின் பொது மலாய் பெயர், புலாவ் பாஞ்ஜாங், லிங்காவிற்கு வடக்கே காட்டப்பட்டுள்ளது, மலாய் ஆட்சி அதிகாரம் 18-ஆம் நூற்றாண்டின் மத்தியில் லிங்காவிற்கு மாற்றப்பட்டடிருந்தது.*

## 3.

***ஜென் ஜென்சனின் சுமத்ரா மற்றும் பக்கத்தில் உள்ள தீவுகளின் இடங்களின் புதிய வரைபடம் வால்க் மற்றும் செங்கின் வெளியீடு சுமார்.1780***

***காகிதத்தின் மீது செதுக்கப்பட்டு கையால் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது***

***XXXX-01631***

*இந்த சுமத்ரா மற்றும் மலாய் தீபகற்பத்தின் வரைபடம் ஜென் ஜென்சனின் 17-ஆம் நூற்றாண்டு வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டது. இது கிழக்கை சார்ந்து வடக்கு பக்கம் வரைபடத்தின் இடப்பக்கத்தை நோக்கியிருக்கிறது. குறிப்பிடும்படி சிங்கப்பூர் மலாய் தீபகற்பத்தின் தென்முனையில் "செனாசூர்" என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது, சிங்கப்பூர் நீரிணையுடன் "நியூ ஸ்ரேட்" (or புது நீரிணை) என்று குறிக்கப்பட்டுள்ளது.*

# 1300

## *பாகம் 3*
## *மலாக்கா, சிங்கப்பூர் நீரிணைகளை வரையறுப்பது*

*சிங்கப்பூரின் சரியான புவியியல் அடையாளம் முந்தைய வரைபடங்களில் மாற்றம் அடைந்திருப்பதாகவோ அல்லது சரியாக புரிதல் இல்லாமலோ இருந்தது. ஆனால்* 18*ஆம் நூற்றாண்டின் இறுதியில், சிங்கப்பூரின் வழியாக செல்லும் பல்வேறு நீரிணைகள் அந்த வட்டாரத்தின் கடல் வரைபடங்ளில் தெளிவாக தோன்றத் தொடங்கின. இதற்குப் பின்னணி ஆய்வுப் பயணங்களும், கடல் வரைபடக்கலை முன்னேற்றங்களும் ஆகும். பின்னோக்கிப் பார்க்கும்போது*, 1819-*ல் ராஃபிள்ஸும் கிழக்கிந்திய கம்பெனியும் சிங்கப்பூருக்கு வருவதற்கு முன், சிங்கப்பூரைச் சுற்றிய நீரிணைகள் எவ்வளவு அளவிடப்பட்டு அறியப்பட்டிருந்தன என்பது வியக்க வைப்பதாக உள்ளது.*

## 1301

***மலாக்கா மற்றும் சிங்கப்பூர் நீரிணை அளவை வரைபடம் -ஜான் தோர்ண்டனுடையது***
***சுமார்.1723***
***காகிதத்தின் மேல் செதுக்கப்படுள்ளது***
***2018-00074***

*இதுவே மலாக்கா மற்றும் சிங்கப்பூர் நீரிணையின் ஆக ஆரம்பகால ஆங்கில கடல் வரைபடம். ஜான் தோர்ண்டன் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ நீர்நிலை அளவையியலாளர், முதலில் 1703-ல் அவரின் ஆங்கில மாலுமி என்பதில் வெளியீடானது, ஆசியா சார்ந்த நீர்ப் பயணங்களுக்கு அதுவே முக்கிய ஆங்கில குறிப்பேடாக பயன்பட்டது. சிங்கப்பூர் தீவின் பெயர் குறிப்பிடப்படாமல் இருந்தாலும், கடற்கரை பற்றிய விவரங்கள் கனிசமாக இருப்பதால் தீவை பழைய சிங்கப்பூர் நீரிணையில் பொருத்தி அடையாளம் காணலாம், சிங்கப்பூருக்கும் இன்றய செந்தோசாவிற்கும் இடையில் உள்ள நீர்வழி அதன் முக்கியத்துவத்திற்குச்*

# 1302

## 1.

***லாரி & விட்டிலின் வரைபடம் -கிழக்கத்திய கடல்கள் மற்றும் தீவுகள்***
***தி ஓரியெண்டல் பைலட் வெளியீடு அல்லது** கிழக்கிந்திய கையேடு -1799*
*1794*
***கன்றின் தோல், காகிதம்***
*2018-00081*

*இந்த 1794 ஆம் ஆண்டு கிழக்கிந்தியப் பகுதி பற்றிய வரைபடம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள மானெவில்லட்டின் வரைபடத்துடன் ஒத்தவையாக இருக்கிறது , ஆனால் ஆங்கிலேய கடலோடிகள் தந்த தகவல்கள் மற்றும் டச்சு அளவை வரைபடத்து விபரங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. "சிங்கப்பூர்" என்று அடையாளப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் முக்கிய "சிங்கப்பூர் நீரிணை" என்று குறிப்பிட்டுள்ளது முக்கிய வேறுபாடாகும், மலாக்கா நீரிணையை இணைக்கும் முக்கிய கப்பல் போக்குவரத்திற்கு பங்காற்றுகிறது.*

## 2.

***கேப்டன் ஜோசப் ஹுடார்டின் தி ஓரியெண்டல் நேவிகேட்டர் ( கிழகத்திய கடற்பயணம்)***
*1801*
***கன்றின் தோல், காகிதம்***
*2018-00082*

*"கிழக்கத்திய மாலுமி" க்கு துணைபுரியும் நோக்கில் இந்த வழிகாட்டி ஆங்கிலேய நீர்நிலைவரைவியலாளர் கேப்டன் ஜோசப் ஹுடார்டால் தொகுக்கப்பட்டது. இது இங்கிலாந்துக்கும் சீனாவிற்கும் இடையேயான கிழக்கு இந்தியா வழியாக மேற்கொள்ளப்படும் கடல் பயணத்திற்கான வழிகாட்டுதலை ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவன அதிகாரிகள், வர்த்தகம் செய்யும் கப்பல் தளபதிகள் மற்றும் இதர கடல் பயணிகளால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வழங்கும். "சிங்கப்பூர் நீரிணையின்" வழியாக பயணம் செய்வதற்கான திசை , மலாய் தீபகற்பத்தின் தென் கோடி முனையில் ஜோகூரில் அடையாளப்படுத்தப்படும் இன்றைய தஞ்சுங் பியாய் அல்லது "தஞ்ஜோங் பௌலஸுடனான" உறவு ஆகியவற்றை வழங்கும்.*

# 1303

## 1.

***லாரி & விட்டிலின் வரைபடம் -மலாக்கா நீரிணையின் தெற்கு பகுதி***
***1798***
***காகிதத்தில் செதுக்கப்பட்டது***
***2018-00069***

*இந்த ஆக முந்தைய நீர்நிலை வரைபடங்களில் ஒன்று மலாக்கா நீரிணையின் தெற்கு பகுதிக்காக மட்டுமே செய்யப்பட்டது அங்கே சிங்கப்பூர் இருக்கின்றது. சிங்கப்பூர் பழைய நீரிணை (பெயர் குறிப்பு: "ஓல்டு ஸ்ட்ரெயிட்ஸ்"), சிங்கப்பூர் புதிய நீரிணை (பெயர் குறிப்பு: "சிங்கபூரு அல்லது ஆளுனரின் நீரிணை") ஆக இரண்டும் காட்டப்பட்டுள்ளன, சிங்கப்பூருக்கு அருகே குறிக்கப்பட்டுள்ள "சலாட் பூரு" மற்றும் "டூலி" தற்போதைய முறையே புலாவ் உபின் மற்றும் செந்தோசா தீவுகள்; அளவை ஒப்பிட தவறாக சிறியதாகக் காட்டப்படுள்ளது சிங்கப்பூர்.*

## 1304

***வில்லியம் ஹீதரின் மலாக்கா மற்றும் சிங்கப்பூர் நீரிணையின் புதிய வரைபடம்***

***1803***

***காகிதத்தில் செதுக்கப்பட்டது***

***2021-00233***

*ராஃபிள்ஸ் அவர்கள் தீவிற்கு வருவதற்கு 15க்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன் , 1803 லேயே சிங்கப்பூரின் கடற்கரை மற்றும் அதன் சுற்றியுள்ள நீரிணைகளை பற்றிய விவரங்கள் பொது வெளியில் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. லண்டன் வெளியீட்டாளர், வரைபடத்தயாரிப்பாளர் வில்லியம் ஹீதர் அந்த வரைபடத்தில் "சிங்கப்பூர் நீரிணைகளை" சிறப்பு உள்ளீட்டில் காட்டியிருப்பது அந்த காலகட்டத்தில் அதன் முக்கியத்துவத்திற்குச் சான்றாகும். அதில் சிங்கப்பூரின் முக்கியபகுதி புலாவ் பாஞ்ஜாங் என்று மலாயில் குறிப்பிடப்பட்டுள்ளது , அல்லது "நீளமான தீவு") தானா மேரா தீவின் கிழக்கு கடற்கரையில் "சிவப்பு முகடு" என்ற குறிப்பால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.*

# 1400

## *பாகம் 4*
## *வருகையின் மையப் புள்ளி*

*சிங்கப்பூரிலிருந்த கிழக்கு இந்திய நிறுவனத்திற்கு 1819 ஆம் ஆண்டு ஜனவரி இறுதியில், சர் ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸ் ராணுவத் தலைவர் வில்லியம் ஃபார்குஹார், தலைமை மாலுமி டேனியல் ரோஸ் ஆகியோரது வருகை தீவில் கம்பெனியின் வர்த்தக குடியேற்றத்தின் தொடக்கத்தை அறிவித்தது. இந்த வருகையைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட முதல் வரைபடத்தின் அடிப்படையில், சிங்கப்பூரின் அடையாளம் எவ்வாறு வலுப்பெற்றது என்பதை கவனிக்க முடியும். இது, அதன் கடற்கரை, துறைமுகங்களை ஆழமாக ஆய்வு செய்து வரைபடம் தயாரித்தலின் மூலம் மட்டுமல்ல - ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை அதன் பெயர் தொடர்ந்து அதே எழுத்துப்பொருளுடன் காணப்படுவதும் தொடங்கியது.*

## 1401

***சிங்கப்பூர் துறைமுகத்தின் திட்ட வரைபடம், பிப்ரவரி 1819***
***1 மே 1819***
***தேசிய நூலக வாரியத்தின் சேகரிப்பிலிருந்து மறுஉருவாக்கம்***

*மே 1, 1819 -ல் கல்கத்தா இதழில் அச்சிடப்பட்ட முதல் சிங்கப்பூர் வரைபடம், நட்பு மற்றும் கூட்டணி உடன்படிக்கையில் பிப்ரவரி 1819 கையெழுத்திட்டதால் வெளிவந்தது. அதோடு இணைந்து கேப்டன் டனியல் ரோஸ் விவரித்த சிங்கப்பூர் துறைமுகம் பற்றிய அறிவிப்பு இவ்வாறு தொடங்கியது, "சிங்கப்பூர் துறைமுகம் செயிண்ட் ஜான் தீவின் வடக்கு வடகிழக்கில் 4 மைல் தொலைவில் அமைந்துள்ளது, அது பொதுவாக சிங்கப்பூர் நீரிணை என்று அழைக்கப்படும், எல்லா பருவங்களிலும் பாதுகாப்பாக கப்பல்களை நங்கூரமிட்டு நிறுத்தும் சேவையை வழங்குகிறது, அது மறைமுக அபாயம் ஏதும் இல்லாததால் பகல் அல்லது இரவு என்று எப்போதும் அணுகலாம். இதன் இடமானது நீரிணை பயணத்தை கட்டுப்படுத்துவதற்கு அனுகூலமாக உள்ளது, ஏனெனில் கப்பல்கள் பின்பற்றும் பாதை சுமார் ஐந்து மைல் தொலைவில் உள்ளது. மேலும், மலாய் தீவுகளுக்கும் சீனக் கடலுக்கும் அருகாமையில் இருப்பதால், குறைந்த நேரத்தில் பல கப்பல்கள் வணிக நோக்கத்திற்காக இங்கு வந்தடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது..."*

## 1402

### 1.

***சியாம் மற்றும் கொச்சின் சைனா நீதிமன்றங்களுக்கு இந்திய கவர்னர் ஜெனரலின் தினசரி தூதரகக் கையேடு ஜான் கிராஃர்டு***
***1828***
***கன்றின் தோல், காகிதம்***

***2014-00470***

*வில்லியம் ஃபார்குஹாருக்கு அடுத்து ஜான் கிராஃபர்ட் பதவி ஏற்று 1823 சிங்கப்பூரின் இரண்டாவது குடிமகனானார். இதற்கு முன்னர் 2 வருடங்களுக்கு முன் சிங்கப்பூர் வந்தவர் அவருடைய கடற்பயணத்தை சிங்கப்பூர் நீரிணையிலிருந்து சிங்கப்பூர் துறைமுகத்தை அடைந்ததை இப்படி வர்ணனை செய்கிறார்: "ஜனவரி 19,1821: இன்று 12 மணிக்கு நாங்கள் ரபிட் மற்றும் கோனியின் குறுகிய கால்வாயை கடந்தோம், அது சிங்கப்பூர் நீரிணையின் மேற்கு வாயில், விரைவில் எல்லா திசைகளிலும்*

*அழகான பசுமையான தீவுகள் எங்களை சூழ்ந்ததை கண்டோம், கடல் சீராக இருந்தது, வானம் தெளிவாக இருந்தது,எல்லா வாய்ப்பும் புதுமையாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் இருந்தது. கப்பலின் மேல் தளத்திலிருந்து வேறுபட்ட அளவுகளில் ஐம்பதுக்கும் அறுபதுக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் மரங்களடர்ந்த தீவுகளை பார்க்க முடிந்தது, கொடிமர தளத்திலிருந்து பார்த்தால் எழுபதிற்கும் மேலிருக்கும். இப்படி ஒரு வாய்ப்பை உலகின் வேறு பகுதியால் வழங்க முடியும் என்று நம்ப முடியவில்லை. இந்த வழியாக ,அந்த உயர்ந்த அழகை, உண்மையில் அனைத்து கடலோடிகளும் அதை ரசித்து ஒப்புக்கொள்வர். ஆறு மணிக்கு நாங்கள் சிங்கப்பூர் கரையோரம் நங்கூரமிட்டோம்."*

## 2.

***சிங்கப்பூரின் நகரம் மற்றும் சாலைகளின் காட்சி அரசு மலையிலிருந்து***
***1828***
***ராபர்ட் ஜேம்ஸ் எலியட்டின் அக்குவாடிண்ட் முறையில் தயாரித்த ஓவியம்***
***XXXX-01265***

*இது முதலில் வெளியிடப்பட்ட சிங்கப்பூரின் தோற்றம், கிராஃபர்டின் புத்தகத்தில் இடம் பெற்ற ராபர்ட் ஜேம்ஸ் எலியட்டால் 1822க்கும் 1823க்கும் இடையில் வரையப்பட்ட ஓவியம், அவர் ராயல் கடற்படையில் நிலப்பரப்பு வரைவாளராக பணியாற்றினார். அரசு மலை (இன்றைய ஃபோர்ட் கேனிங் மலை), கடலை நோக்கி பார்க்கும் போது சிங்கப்பூர் ஆறு மத்திய பின்னணியில் தெரிகிறது.*

# 2000

## *அத்தியாயம் 2*
## *அந்த ஆற்றுப் பாதை*

*நமது வரலாற்றில் சிங்கப்பூர் ஆற்றினுடைய இடம் எது? தீவின் வரலாற்றுப் பயணத்தில், சிங்கப்பூர் நீர்ப்பரப்புகள் ஆறுகள் இன்றியமையாப் பங்காற்றி வந்துள்ளன. சிங்கப்பூர், 14 ஆம் நூற்றாண்டிலிருந்து, தென்கிழக்காசியாவின் வர்த்தகப் பயண பாதைகள் மற்றும் கடல்சார் பட்டுப்பாதையில் ஓர் முக்கிய அங்கமாக, இருந்தது. ஆற்றங்கரைகளில் அமைந்த வர்த்தகக் குடியேற்றங்களுடன் கிழக்காசியவிற்கும் ஐரோப்பியாவிற்கும் இடையில் முதன்மை கடல் வழியில் ஓர் முக்கியத் துறைமுகமாகச் சிங்கப்பூர் விளங்கியது.*

*19 ஆம் நூற்றண்டில், சிங்கப்பூரை ஆங்கிலேய உத்திபூர்வ கடல் துறைமுகமாக உருவாக்குவதற்கான சர் ஸ்டம்ஃபோர்டு ரஃபிள்ஸின் முடிவில் இந்தப் பழைமைவாய்ந்த கடல்சார் மரபு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.*

*ராஃபிள்ஸ், 1819 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் ஆற்றின் கரையில் வந்தடைந்ததை தொடர்ந்து, 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் குவிந்திருந்தன. ஆங்கிலேயர்கள் இந்த ஆற்றையும், அதனைச் சூழ்ந்திருந்த நீர்வழிகளையும் (சிங்கப்பூர் சாலைகள் அல்லது சாலையோரங்கள் — Singapore Roads or Roadstead) மற்றும் பின்னர் உருவான துறைமுகத்தையும் வணிகத்திற்கான முக்கிய சொத்துகளாக அங்கீகரித்தனர்.*

*இவை அனைத்தும் தீவின் துரிதமான வளர்ச்சிக்கு வழிவகுத்து, அதை ஒரு செழிப்பான துறைமுகமாக மாற்றின. இந்த நதியின் பரிணாம வளர்ச்சி, சிங்கப்பூரை ஓர் உறுதியான துறைமுகத்திலிருந்து மின்னும் சுற்றுலாத் தலமாக மாறியதைப் பிரதிபலிக்கிறது.*

## 2001

### 1.

***சீனக் கற்பாத்திர குடுவை***
*14-ஆம் நூற்றாண்டு*
***பீங்கான்***
*2002-00401 மற்றும் 2002-00404*

*சியாவ்காவ்பிங்* என்று அறியப்படும் (சீன மொழியில் “குறுவாய் போத்தல்”), இந்தக் கற்பாத்திரக் குடுவைகள் பழைய பாராளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே கண்டெடுக்கப்பட்டன (இன்றைய தி ஆர்ட்ஸ் ஹவுஸ்) , அந்தக் காலகட்டத்தில் பொதுவாக திரவங்களைச் சேமித்து வைக்க இவை பயன்படுத்தப்பட்டன. இவை சீனாவில் தயாரிக்கப்பட்டன. பாதரசத்தைக் கொண்டு செல்வதற்கும், மதுவையும், வெற்றிலை மெல்லுபவர்கள் சுண்ணாம்பையும் சேமித்து வைக்கப் பயன்படுத்தியிருக்கலாம்.

சிங்கப்பூர் ஆற்றைச் சுற்றிப் பல அகழ்வாய்விடங்களில் இந்தக் குடுவைகள் போன்ற பல்வேறு 14 ஆம் நூற்றாண்டு வர்த்தக பொருள்கள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவை அந்தப் பகுதியில் குறிப்பாக ஆற்றின் வடக்கு கரையோரம் நெறுக்கமான குடியிருப்புகளும் வர்த்தக நடவடிக்கைகளும் இருந்ததற்கு சான்றாகிறது.

### 2.

***சீன பச்சைத் தட்டு (Chinese celadon plate) சிங்கப்பூரில் கண்டுபிடிக்கப்பட்டது***
*14-ஆம் நூற்றாண்டு*
***பீங்கான்***
*A-2140*
***ஆசிய நாகரீக அரும்பொருளகத்திலிருந்து இரவலாகப் பெற்றது***

### 3.

***மிங் வம்ச காலத்தைய சீன பூஜாடி - காலாங் ஆற்றுப்படுகையிலிருந்து எடுக்கப்பட்டது***

***1573–1621***
***உயர்தர பீங்கான்***
***2017-01159***
***ஜெஃப்ப்ரி ஓவனின் அன்பளிப்பு***

*இந்த மிங் வம்ச கால பூஜாடி மற்றும் இதே போன்ற இதர நீல உயர் பீங்கான் சில்லுகள் காலாங் நீர்முகப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. 16 ஆம் மற்றும் 17-ஆம் நூற்றாண்டில் முதன்மை வர்த்தக வழி சிங்கப்பூர் ஆற்றிற்கு பதிலாகக் காலாங் ஆறாக இருந்திருக்கலாம் என்று இவை பரிந்துரைக்கின்றன. காலாங் மற்றும் ரோச்சர் ஆறுகள் குடியேற்ற கால சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் கப்பல் கட்டும் செயல்பாடுகளில் தொடர்ந்து முக்கியப்பங்கு வகித்தன.*

## 2002

***ஒரு சந்தை, சிங்கப்பூர் ஆற்றின் மேலைப் பகுதியாக இருக்கலாம்***
***G.R. லம்பர்ட் & கோ.***
***1890-களில்***
***மறு உருவாக்கம்***
***2006-01790***

# 2100

## *பாகம் 1*
## *காலனித்துவத்தின் துவக்கம்*

*1819 ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி, இந்தியானா (Indiana) என்ற பெயருடைய கப்பலில் இருந்த ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸ் தலைமையில், பிரிட்டனின் கிழக்கிந்திய கம்பெனியின் (EIC) கப்பல்படைகள் சிங்கப்பூர் நிலப்பகுதியின் அருகே செயின்ட் ஜான்ஸ் தீவில் நங்கூரமிட்டன.*

*மேஜர் வில்லியம் பார்குஹார் (Major William Farquhar), மற்றும் துப்பாக்கி ஏந்திய சிப்பாய் (படைவீரர்) ஒருவரின் துணையுடன், ராஃபிள்ஸ் சிங்கப்பூர் ஆற்றங்கரைக்கு படகில் பயணம் செய்து உள்ளூர் தலைவர் தெமெங்கோங் அப்துல் ரஹ்மானைச் (Temenggong Abdul Rahman) சந்தித்தார்.*

*EIC ஒரு வலுவான உலகளாவிய வர்த்தக, நிர்வாக மற்றும் இராணுவ அமைப்பாக இருந்ததால் தீவின் கட்டுப்பாட்டுக்காக நடந்த பேரம் இயல்பாகவே சமமானதாக இல்லை. தெமெங்கோங்குடன் ஒப்பந்தத்தை எட்டிய பிறகு, ராஃபிள்ஸ் ஜொகூர் சுல்தான் ஹுசேன் ஷாவை (Sultan Hussein Shah) ரியாவிலிருந்து சிங்கப்பூருக்கு அழைத்துவர ஏற்பாடு செய்தார். பின்னர், மூன்று தரப்பினரும் 1819 பிப்ரவரி 6 அன்று அதிகாரப்பூர்வமான நட்பு மற்றும் கூட்டணி உடன்படிக்கையில்(Treaty of Friendship and Alliance) கையெழுத்திட்டனர்.*

*சிங்கப்பூரை ஒரு ஆங்கிலேய குடியேற்றமாக அறிவித்தபிறகு, EIC விரைவாக ஒரு சுதந்திர வர்த்தக துறைமுகத்தை அமைத்துச் சுற்றியுள்ள கடல் போக்குவரத்து மற்றும் வணிக நடவடிக்கைகளை வரவேற்றது.*

*பார்குஹார் சிங்கப்பூரின் முதல் குடிமகனாகவும் ஆணையராகவும் நியமிக்கப்பட்டார். அவரது நிர்வாகத்தின் கீழ், பயணிகளுக்கும் பன்னாட்டு வர்த்தகர்களுக்கும் துடிப்புமிக்க மையமாக சிங்கப்பூர் ஆறு உருமாறியது.*

## 2101

***இன்டியானா கப்பல் ஓவியம்- இக்கப்பல் ஸ்டாம்போர்ட் ராஃபிள்ஸை முதலில் சிங்கப்பூருக்கு அழைத்து வந்தது.***

***காலம் குறிப்பிடப்படவில்லை***

***துணியில் எண்ணெய் வண்ணம் தீட்டியது***

*1993-00275*

# 2102

## 1.

***கிழக்கு இந்திய நிறுவன அதிகாரியின் வாள்***

***1805***

***பித்தளை முலாம்பூச்சு , எஃகு , தோல், வெள்ளி, தந்தம்***

***2018-00685***

## 2.

***கிழக்கு இந்தியா நிறுவனத் துப்பாக்கி***

***1779***

***மரம், இரும்பு, எஃகு,பித்தளை***

***2018-00686***

*ஆங்கிலேய கிழக்கு இந்திய நிறுவனம் (EIC) உலகளவில் பொருள் போக்குவரத்து மற்றும் வர்த்தகம் செய்யும் பணிகளில் ஈடுபட்ட ஒரு சக்திவாய்ந்த வர்த்தக அமைப்பாக இருந்தது. மதிப்புமிக்க சரக்குகளை கடல் கொள்ளையர்கள் போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்க, அதன் கப்பல்களிலும் அதிகாரிகளிடத்திலும் துப்பாக்கிகள், வாள்கள் போன்ற ஆயுதங்கள் இருந்தன. இத்தகைய ஆயுதங்கள் EIC அதிகாரிகளின் அதிகாரத்தைக் காட்டவும், தேவைப்படும்போது உள்ளூர் மக்களை அச்சுறுத்தி EIC-ன் நலன்களைச் சாதிப்பதற்கும் பயன்பட்டன.*

## 3.

***ஃபோர்ட் கேனிங்கை நோக்கி அமைந்த படகுத் துறை***

*சுமார்.**1880s–1890s***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2007-50889***

*ஆரம்பத்தில் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் சரக்குகளை மாற்றுவதற்கும் ஏற்ற ஒரே நீர்ச்சாலையோரமாக இருந்தது சிங்கப்பூர் ஆறு. கப்பல்கள் நேரடியாக ஆற்றை அணுக முடியாவிட்டாலும், கப்பல் நிற்கும்துறை ஆற்றின் அருகாமையில் அமைந்ததால், மலாய் ரக இலகுப் படகுகளும்(தொங்காங்), சீன ரக இலகு படகுகளும்(துவாவ்காவ்) கப்பல்களுக்கும் ஆற்றங்கரை ஓரங்களில் இருந்த சரக்குக் கிடங்குகளுக்கும் இடையே சரக்குகளை மாற்றுவதற்கு உதவின.*

*ஆற்றின் மிக அகலமான பகுதியான படகுத்துறை, முக்கிய வணிகர்கள் அலெக்ஸாண்டர் லாரி ஜான்ஸ்டன், எட்வர்ட் பௌஸ்டெட், அலெக்ஸாண்டர் குத்ரி, தான் கிம் செங் மற்றும் தான் தோக் செங் போன்றோரால் சரக்குக் கிடங்குகள் வளர்ச்சிக்கான மையமாக உருவானது. சிறிய படகுகள், சம்பான்கள் என அழைக்கப்பட்டவை கூட இங்கு இயங்கி, பயணிகளையும் பொருட்களையும் ஆற்றின் குறுக்கே கொண்டு சென்றன. இதனால், இது ஹோக்கியன் மொழியில் தியாங் பாங் லொ தௌவ் ("சம்பான்களுக்கு செல்லும் இடம்")-என்றும் மாண்டரின் மொழியில் பூ யீ தியான் ("நிறைவில்லா செயல்பாடுகளின் இடம்") என்ற புனைப்பெயரையும் பெற்றது.*

***சுவர் வாசகம்:***

*''[சிங்கப்பூர்] அந்தக் கடல்களின் குறிப்பிடத்தக்க வர்த்தக மையமாக உருவாக ஏதுவாக மிகச் சிறப்பாக அமைந்துள்ளது என் நினைக்கிறேன்; அது மிக விரைவில் பெரும் அளவு வளர்ச்சியும் முக்கியத்துவமும் பெறும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை...''*
*– சார்லஸ் கிராண்டு, கிழக்கு இந்திய நிறுவனத் தலைவர், 1821*

## 4.

***அரசு மலையிலிருந்து (தற்போது ஃபோர்ட் கேனிங் மலை),***
***டாகீரியோடைப் தொழில்நுட்பப் புகைப்படம்-படகுத்துறை மற்றும் சிங்கப்பூர் ஆற்றின் தோற்றம்***
***அல்ஃபோன்ஸ் -யூஜின் - ஜூல்ஸ் ஐடியர்***
***1844***
***மறு உருவாக்கம்***
***2005-00445***

*இந்த டாகீரியோடைப் புகைப்படம், சிங்கப்பூரின் மிகப் பழமையான புகைப்படங்களில் ஒன்றாகும். இது அரசாங்க மலை (தற்போது ஃபோர்ட் கேன்னிங் மலை)பகுதியிலிருந்து படகுத் துறை வணிக மையத்தைப் காட்டுகிறது. சிங்கப்பூர், வர்த்தகப் பொருள்கள் இறக்குமதி செய்து மறு பொதியாக்கி விற்பனைக்கு வேறு இடங்களுக்கு அனுப்படும் ஒரு முக்கிய பரிமாற்ற மையமாகச் செழித்தது - இந்த உலகத்துடனான தொடர்பு, புதிய தொழில்நுட்பங்கள், அவை உருவான நாட்டிலிருந்து குறைந்த காலத்திலேயே இந்தக் கரைக்கு வந்துசேர்ந்தது. இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்ட டாகீரியோடைப் தொழில்நுட்பம், கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள் சிங்கப்பூருக்கு வந்துவிட்டது.*

*டாகீரியோடைப் முறையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், ஒரே ஒரு பிரதியாக மட்டுமே உருவாகும். மேலும், இவை இடமிருந்து வலமாகத் திருப்பப்பட்ட நேர்மறை படங்களாக இருக்கும். அருகில் காணும் சுவரிலுள்ள மீள்பதிவுசெய்யப்பட்ட புகைப்படம், அசல் புகைப்படத்தின் திருத்தப்பட்ட தோற்றமாகும். இது அப்பகுதியைச் சரியான தோற்றத்தில்,*

*நாம் நேரடியாகப் படகுத் துறை காண்பது போன்ற தோற்றத்தைக் காட்டுகிறது.*

## 5.

***மேலே: சிங்கப்பூர் ஆறு மற்றும் பிரசண்ட்மெண்ட் பாலத்தின் அச்சுப் படம்***
***கீழே: மாலாய் சுமை தூக்கும் தொழிலாளிகளுடன் ஒரு சீன வியாபாரி***
***டுனைமீ முறை படம் லூயிஸ் அகஸ்ட் தி செயின்சன் வரைந்த பிறகு***
***1830***
***எஃகுவில் செதுக்கப்பட்டு கையால் வண்ணம் தீட்டப்பட்டது***
***XXXX-01316***

*(மேல்) 1823 ஆம் ஆண்டு பிரசண்ட்மெண்ட் பாலம் கட்டப்படும் முன், சிங்கப்பூர் ஆற்றைக் கடக்க ஒரே வழி படகைப் பயன்படுத்துவதுதான். முதலில், இது மரத்தாலான நடக்கும் பாலமாக ஒரு வளைவுடன் இருந்தது, அந்த வளைவைப் பெரிய கப்பல்கள் செல்லும்போது உயர்த்த முடியும். காலப்போக்கில், இந்தப் பாலம் பலமுறை மாற்றப்பட்டு, இறுதியாக இன்றைய எல்கின் பாலமானது.*

*(கீழ்) சிங்கப்பூர் தடையற்ற துறைமுகமாக (free port) நிர்மாணிக்கப்பட்டவுடன், அதன் சுற்றுப்புற பகுதியிலிருந்து மக்கள் வேலை மற்றும் வர்த்தக வாய்ப்பினால் ஈர்க்கப்பட்டார்கள். இந்த அச்சுப்படம், பிரஞ்சு கலைஞர் லூயிஸ் அகஸ்ட் தி செயின்சன் வரைந்த ஓவியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. படம், ஆற்றின் கரையில் சுமைகளுடன் படகில் ஏறக் காத்திருப்பவர்களைக் காட்டுகிறது.*

## 6.

***சிங்கப்பூர் ஆற்றின் வடக்கு படகுத் துறையைக் காட்டும் ஒரு இத்தாலியன் அஞ்சல் அட்டை***

***20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***கடித அச்சு 'ஹாஃப்டோன்' வகை அச்சுப்படம்***

***2001-04435***

***இங் சீ சன் அன்பளிப்பு***

*இந்த அஞ்சல் அட்டை, எல்கின் பாலத்தின் வலது புறம் உள்ள பௌஸ்டெட் & கோ உள்பட படகுத்துறை பகுதியில் இருந்த சில கிடங்குகளைக் காட்டுகிறது. மேலும், இது இத்தாலிய மருந்தாளர்கள் மற்றும் நறுமண பொருள் தயாரிப்பாளரான பெர்ட்டெல்லி நிறுவனத்தின் சோப்புகள் மற்றும் வாசனைத்திரவியங்களை விளம்பரப்படுத்துகிறது.*

## 7.

***ஆங்கிலேய கிழக்குகிந்திய நிறுவனத்தின் சார்லஸ் கிராண்ட் கப்பலின் (Charles Grant) பதிவேடு***

***1834–1835***

***காகிதம்***

***2018-00683***

*இந்தப் பதிவேடு ஒரு முன்னாள் ஆங்கிலேய கிழக்கிந்திய கப்பலினுடையது (British East Indiaman). அக்கப்பல் பின்னர் 1834-ல் ஹைடே & லென்னாக்ஸிற்கு விற்கப்பட்டது. பின்னர், 12 ஏப்ரல் 1834 அன்று, அது இந்தியாவின் பம்பாய் (தற்போது மும்பை) நகரிலிருந்து சிங்கப்பூருக்கு வந்தது, மூன்று நாட்களுக்குப் பின்னர் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றது. அதன் அடுத்த நிறுத்துமிடங்கள் செயிண்ட் ஹெலெனா மற்றும் இங்கிலாந்து. "Singapore Roads" என்று தலைப்பிட்ட பக்கத்தில் (சிங்கப்பூர் சாலைகள்) மிளகு, வெற்றிலை பாக்கு, மற்றும் பிரம்புகள் உள்பட சிங்கப்பூரில் கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்கள் பதிவிடப்பட்டுள்ளன.*

# 2103

***சிங்கப்பூர்***

***ஜான் டெர்ன்புல் தாம்சன்***

*1851*

***துணியில் எண்ணெய் வண்ணத்தில் தீட்டியது***

*2018-00743*

***சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்திலிருந்து இரவலாகப்பெற்றது***

*இந்த அபூர்வ ஓவியம் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த கப்பல்களைக் காட்டுகிறது. இதில் இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்திலிருந்து வந்த பெரிய கிழக்கு இந்திய கம்பெனி கப்பல்கள், சியாம் (தற்போது தாய்லாந்து) கடல் கலன், மலாய் பகுதி படகுகள் ஆகியவை அடங்கும். சிங்கப்பூர்ச் சாலைகள் மற்றும் சாலை ஓரங்கள் (Singapore Roads அல்லது Roadstead) என அழைக்கப்படும் இந்தப் பகுதியில், சரக்குகளை ஆற்றின் வழியே பயணிக்ககூடிய சிறிய படகுகளுக்கு மாற்றி, அவற்றைக் கிடங்குகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்குக் கொண்டு சென்று இறக்குவதற்காகப் பெரிய கப்பல்கள் நங்கூரமிடப்பட்டிருந்தன. ஓவியத்தின் இடப்புறத்தில் சிங்கப்பூர் ஆற்றின் கரை ஓரத்தில் கிடங்குகள் மற்றும் கடைவீடுகள் வரிசையாகக் காணப்படுகின்றன. இங்கே சரக்குகள் பாதுகாக்கப்ட்டு விற்பனை செய்யப்பட்டன.*

# 2104

## 1.

***கர்னல் வில்லியம் பர்குஹரின் உருவப்படம்***

***ஜான் கிரஹம் பின் M. கௌசி***

***1830***

***லித்தோகிரபி***

***2018-00495***

## 2.

***கர்னல் வில்லியம் பார்குஹாருக்கு வழங்கப்பட்ட கிண்ணம்***

***1823***

***Silver***

***2023-00743-001 to 003***

*சிங்கப்பூரின் முதல் ஆங்கிலேய வசிப்பாளர் தளபதி வில்லியம் பார்குஹார் சிங்கப்பூரை ஒரு முக்கியக் துறைமுக நகரமாக செழிப்பாக்க தேவையான ஆரம்பகால கட்டமைப்புகளை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தார். இந்த வெள்ளிக் கிண்ணம் 1823 டிசம்பர் 27 ஆம் தேதி சிங்கப்பூரின் முக்கிய ஐரோப்பிய மற்றும் ஆர்மேனிய குடியிருப்பாளர்களால் பார்குஹார் நாட்டைவிட்டு பிரிந்து செல்லுமுன் அவர்களின் பாராட்டை தெரிவிக்க பரிசாக அளிக்கப்பட்டது.*

*கோப்பையில் பொறிக்கப்பட்டுள்ள பெயர்களில் சிங்கப்பூரின் ஆரம்ப காலத்தில் குடியேரி பின் வர்த்தகத்தில் செழித்து வளர்ந்த முன்னோடி வணிகர்கள் அடங்குவர். இவர்களில் பலர், பார்குஹாரை பின்பற்றி மலாக்காவிலிருந்து சிங்கப்பூர் வந்தவர்கள். மேலும், சீன வணிகச் சமூகமும் பார்குஹாருக்கு வெள்ளி பூங்கிண்ணம் ஒன்றை அவரது பிரிவின் நினைவாகப் பரிசளித்தது.*

**3.**

***சிங்கப்பூர் ஆற்றில் எல்கின் பாலத்தின்  தென் முனையில் உள்ள கிடங்குகள்***

***மேனார்டு ஓவன் வில்லியம்***

***1937***

***ஜெலாடின் வெள்ளி அச்சுப்படம்***

***2011-00932***

**4.**

***கோலியர் படகுத்துறை ஓரம் அமைந்த அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் கிடங்குகள்***

*சுமார்.**1880***

***ஜெலாடின் வெள்ளி அச்சுப்படம்***

***XXXX-15803***

*1860 களில் முடிவடைந்த நில மீட்பில் உருவான கோல்லியர் குவே என்றழைக்கப்படும் கடற்முகப்பு நீட்சி, கத்ரி & மற்றும் கோ உள்ளிட்ட அலுவலக கட்டிடங்கள் மற்றும் கிடங்குகள் அமைக்க வழிவகுத்தது. ஆரம்ப கால அலுவலகக் கட்டடங்கள் இரண்டாவது மாடியில் உள்ள கூரையுடைய தாழ்வாரத்தால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படிருந்தன. இங்கே அலுவலகப் பணியாட்கள் தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி சரக்குக் கப்பல்களின் வருகையைக் கண்காணித்து, அறிவிப்பார்கள்.*

**5.**

***கத்ரி & கோ நிறுவனத்தின் வரலாற்று கையேடு***

***1950s***

***காகிதம்***

***XXXX-02260***

*வில்லியம் பார்குஹாருக்கு வழங்கப்பட்ட வெள்ளிக்கிண்ணத்தில் கையொப்பமிட்டவர்களில் ஒருவரான ஸ்காட்லாந்து வணிகர் அலெக்ஸாண்டர் கத்ரி 1821 ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் முதல் ஆங்கிலேய வர்த்தக நிறுவனங்களில் ஒன்றை நிறுவினார். அந்நிறுவனம், இங்கிலாந்து மற்றும் சிங்கப்பூர் நீரிணைக் குடியேற்றப் பகுதிகள் என்று இருபக்கமும் பொருள்களை வர்த்தகம் செய்ததுடன், கப்பல் போக்குவரத்து, வங்கி மற்றும் காப்பீடு உள்ளிட்ட முக்கிய துறைகளில் முகவராகச் சேவையையும் வழங்கியது. பின்னர் அந்நிறூவனம், இப்பகுதியிலிருந்த விவசாயம், சுரங்கத் தொழில் உள்ளிட்ட மற்ற இதர முக்கிய துறைகளுக்கும் விரிவடைந்தது.*

## 6.

***வாம்போ மாளிகையின் தோட்ட முகப்பில் ஒரு ஐரோப்பிய விருந்தினருடன் ஹூ ஆ கேய் (வாம்போ)***

***19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***1994-04908***

*வாம்போ என்று பிரபலாமாக அறியப்பட்ட முக்கியச் சீனத் தொழிலதிபர், தூதர் மற்றும் சமூகத் தலைவரான ஹூ ஆ காய், 1840-ஆம் ஆண்டு தற்போதைய சிராங்கூன் சாலையில் ஒரு பிரம்மாண்டமான மாளிகையைக் கட்டினார். அது வாம்போ ஹவுஸ் என்ற பெயரில் பரவலாக அறியப்பட்ட அம்மாளிகை அழகிய தோட்டங்கள், பழம் தரும் மரங்கள் எனப் பறவைகள், விலங்குகள் உலவும் கூடாரமாக இருந்தது. வாம்போ தோட்டங்கள் மிகவும் பிரபலமான சுற்றுலா தளமானது, பல வெளிநாட்டு சுற்றுப் பயணிகள் இம்மாளிகையைச் சுற்றிப்பார்க்கும் அழைப்பிதழைப் பெற ஆர்வம் காட்டினர்.*

## 7.

***அரேபிய சாலையிலிருந்து காலாங் பள்ளத்தாக்கின் தோற்றம்***

*1890s*

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

*1994-04795*

*இங்கே, காலாங் பள்ளத்தாக்கில் நங்கூரமிடப்பட்டுள்ள பாய்மரக் கப்பல்கள், சம்பான் படகுகள் மற்றும் தொங்காங்கு படகுகள் மரங்கள் எனச் சரக்குகளின் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்ட பல்வேறு உள்ளூர் நீர்ப்பயணச் சாதனங்களைக் காணலாம். களிமன் குடுவைகள், பின்னப்பட்ட கூடைகள் போன்ற பல பொருள்கள் ஏற்றி அனுப்பபடத் தயாராகத் துறைமுக மேடைகளில் அடுக்கப்பட்டுள்ளன.*

**8.**

***அரசாங்க மலையிலிருந்து சிங்கப்பூர் நகரத்தின் தோற்றம்***

**டே மற்றும் சன் , ஜான்சன் டேர்ன்புல் தாம்சனுக்கு பின்னர்**

*1856*

***கையால் வண்ணம் தீட்டப்பட்ட லித்தோகிராபி படம்***

*2023-00677*

*இந்த அச்சுப்படம் ஆங்கிலேய கலைஞர் ஜான் டர்ன்புல் தாம்சன் வரைந்த ஓவியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அவர் 1841 முதல் 1853 வரை நீரிணையின் குடியேற்றப்பகுதிக்கான பொறியாளராகவும் அரசாங்க அளவையாளராகவும் பணியாற்றினார். இதில், 31 ஆகஸ்ட் 1846 அன்று நடந்த சடங்குபூர்வ நிகழ்வைக் காணலாம். இப்படத்தில் ஜொகூர் தளபதி டெயிங் இப்ராஹிம் கடற்கொள்ளைகளை அடக்குவதற்காக எடுத்த முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு ஒரு அரச வாளை வழங்குகிறார் நீரிணைப் பகுதிகான ஆளுநர் லெப்டினன்ட்-கர்னல் வில்லியம் ஜே. பட்டர்வொர்த். அனைத்து இன நகர மக்களும் சிறந்த ஆடையுடுத்தி அந்த விழாவில் கூடியிருந்தனர்.*

**9.**

***முத்து மலையிலிருந்து நகரம் மற்றும் துறைமுகத்தின் தோற்றம்***

***ஜான் தாம்சன்***

***1860-களில்***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2018-00704-003***

*ஸ்காட்லாந்து புகைப்படக்காரர் ஜான் தாம்சன் எடுத்த இந்தப் புகைப்படம் வளர்ந்துவரும் சிங்கப்பூரின் வளத்தைப் பிரதிபலிப்பதாகவும் தெலோக் ஆயர் சுற்றி கட்டமைக்கப்பட்ட கட்டிடங்களின் நாகரிக வளர்ச்சியையும் காட்டுகின்றன. பின்னணியில் மிகவும் பரபரப்பாக இருந்த கப்பல் போக்குவரத்து காட்சியையும் காணலாம்.*

**10.**

***“சுமத்திரா தீவு” 1 கெபிங் வியாபாரி நாணயம்***

***19 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***தாமிரம்***

***N-1524-AA***

**11.**

***“சுல்தானா தீவு” 1 கெபிங் வியாபாரி நாணயம்***

***சுமார் 1820 களில் –1930 களில்***

***தாமிரம்***

***N-1618***

**12.**

***நீரிணை குடியேற்றம் ,1 கெபிங் நாணையங்கள் சண்டைக் கோழி சின்னம் ஒரு பக்கமும் மற்றும் "one keping" என்று செதுக்கப்பட்ட வாசகம் அல்லது சூரியகாந்தி பூ மறுபக்கமும்***

***1830 களில்***

***தாமிரம்***

***N-1523-AS, N-1525-C and N-1526-A***

*1858 ஆம் ஆண்டு நீரிணைக் குடியேற்றங்களுக்கான நாணயங்கள் வெளியிடப்படும் வரை, சிங்கப்பூரில் அதிகாரப்பூர்வ உள்ளூர் நாணயம் இல்லை. அதனால், ஸ்பானிஷ் வெள்ளிகள் – பிரதானமாக பயன்படுத்தப்பட்டன, அத்துடன் டச்சு வெள்ளி நாணயங்கள், தாமிர வில்லைகள், சீனாவின் தாமிர நாணயங்களும் பயன்பாட்டில் இருந்தன. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் (EIC) வெளியிட்ட தாமிர 'கேப்பிங்' அல்லது 'பைஸ்ஸே' ஆகியவை புழக்கத்தில் இருந்தன. இந்திய ரூபாய்களைப் புழக்கத்தில் கொண்டு வர EIC முயன்றது, ஆனால் அவை தசம முறையில் அமையாததால் மாற்று நாணயங்களுக்குப் பரிமாற்றம் செய்வது கடினமாக இருந்தது. அதனால், அவை மக்களிடையே பிரபலமடையவில்லை.*

*முதலில் சுமத்ரா தீவுக்கு (Sumatra, இன்றைய இந்தோனீசியாவின் ஒரு பகுதி) உரிய ரூபாயின் சில்லரை நாணயங்களை, EIC 'கேப்பிங்' நாணயமாக உருவாக்கியது. ஆனால், சிங்கப்பூரிலும் இதர பகுதிகளிலும், அவை ஸ்பானிஷ் வெள்ளியின் 1/400 பங்காகப் புழக்கத்தில் இருந்தன. சிறிய அளவிலான பரிவர்த்தனைகளுக்குப் புழக்கத்திலிருந்த 'கேப்பிங்' நாணயங்களின் தேவை அதிகமாக இருந்ததால் ஐரோப்பிய வர்த்தகர்கள் EIC கேப்பிங் மற்றும் டச்சு வெள்ளி நாணயங்களின் அடிப்படையில் தனியாகத் தங்கள் சொந்த நாணயங்களை உருவாக்கினர். போலி நாணயங்களுக்கான தண்டனைக் கட்டணத்தை தவிர்ப்பதற்காக இந்த*

*அதிகாரபூர்வமற்ற நாணயங்கள் சுமத்திரா தீவின் நாணயம் போன்றே சிறிய மாற்றத்துடன் உருவானது.*

*சுமத்திரா தீவு நாணயங்கள் அதிகம் புழங்குவதை கவனித்த டச்சு அதிகாரிகள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயன்றனர். இதற்குப் பதிலாக, சிங்கப்பூர் மற்றும் மலாய் தீபகற்பத்திலிருந்த பிரிட்டிஷ் வணிகர்கள், 'சுமத்திரா' எனும் பெயர் போன்றே ஒலிப்பதனால் சுல்தானா ("Sultana") என்ற கற்பனை பெயரில், "Island of Sultana" என்று பொறிக்கப்பட்ட நாணயங்களைத் தயாரித்தனர். இவை டச்சுப் பிரதேசங்களுக்காக உருவாக்கப்படவில்லையெனவும் வணிகர்கள் தெரிவித்தனர். 1830களில் வெளியிடப்பட்ட நாணயங்களை மேலும் வேறுபடுத்திக் காட்டமலாய் தீபகற்பத்தில் பிரபலமான கோழி சண்டைகளைப் பிரதிபலிக்கும் விதமாக "சண்டைக் கோழி" பொறிக்கப்பட்டிருந்தது.*

***சீன - ஐரோப்பிய நிறுவனங்கள் பெயர் பலகை***
***தேதி குறிப்பிடப்படவில்லை***
***உலோகம், மரம்***
***FL-0156***

## 2105

### 1.

***அச்சிடப்பட்ட 'பிராவோஸ் பூகுயிஸ் எ லா வோய்லே' என்று தலைப்பிட்ட படம் - பூகிஸ் இனமக்களின் படகைக் காட்டுகிறது***

***19ஆம் நுற்றாண்டின் மத்திய பகுதி***

***லூயிஸ் லீ பிரெடன்***

***மறுஉருவாக்கம்***

***XXXX-01043-001***

### 2.

***பூகிஸ் கிராமம்***

***சுமார்.1900***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***1993-00291***

*1819 ஆம் ஆண்டில், ஆங்கிலேய ஆட்சியில் தடையற்ற வர்த்தகக் கொள்கை பல பூகிஸ் மக்கள் இந்தோனீசியாவின் சுலாவேசி பகுதிகளிலிருந்து சிங்கப்பூருக்கு குடிபெயர்வதற்கான தூண்டுதலாக அமைந்தது. அவர்கள் ரோச்சர் மற்றும் காலாங் ஆறுகளுக்கு அருகில் பூகிஸ் கிராமத்தை உருவாக்கினார்கள், அது சிங்கப்பூரில் பூகிஸ் வர்த்தகத் தளமாக ஆனது.*

*ஒவ்வோராண்டும் ஜூன் முதல் நவம்பர் வரை, பூகிஸ் வர்த்தகர்கள் தீவுகளின் மத்தியில் பயணித்து, கடல் வெள்ளரி, ஆமை ஓடு , சுறாத் துடுப்புகள், குருவிக் கூடுகள், பிரம்பு, சந்தன மரம், மசாலாப் பொருள்கள், உயிருள்ள கிளிகள் போன்ற பல்வேறு உள்ளூர் உற்பத்தி பொருள்களைச் சேகரித்து வர்த்தகம் செய்தனர். பயணத்தின் கடைசி கட்டத்தில் அவர்களது சரக்குகளைச் சிங்கப்பூரில் முக்கியமாகச் சீன வியாபாரிகளிடம் விற்பனை செய்வார்கள். அவர்கள் அவற்றைச் சேமிப்பு கிடங்குகளில் சேமித்து, பின் வேற்றிடங்களுக்கு ஏற்றுமதி செய்வர்கள்.*

*பூகிஸ்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய பருத்தி ஆடைகளையும், சீன பட்டாடைகளையும், மேற்கத்தைய துப்பாக்கிகளையும், மலேயாவின் தகர உலோகத்தையும் வாங்கிக்கொண்டு சுலாவேசிக்கு திரும்புவார்கள்.*

*பூகிஸ்களின் கப்பலில் வரும் பொருள்களின் அளவைச் சார்ந்தே சந்தையின் நிலைமை தீர்மானிக்கப்படும் என்பதால், அவற்றின் வருகையைச் சிங்கப்பூர் ஆவலோடு எதிர்நோக்கியிருந்தது. அவர்களின் இருப்பு தீவுகளுக்கிடையே சரக்குகள் பரிமாற்றுவதில் முக்கியத் தூண்டுதலாக இருந்ததுடன் ஒரு மத்திய வர்த்தக மையமாகச் சிங்கப்பூரின் இடத்தை வலுப்படுத்தியது.*

***ரோச்சர் ஆற்றிலுள்ள ஒரு சீனப்படகின் அச்சுப்படம்***
***1866***
***ஃபெடர் ஜகோருக்குப் பின்***
***மறுஉருவாக்கம்***
***XXXX-01270***

## 2106

### 1.

***பூகிஸ் சரோங்***

***20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***பட்டு, தங்க ஜரிகை***

***2018-00969***

***ஆசிய நாகரீக அரும்பொருளகத்திடம் இரவலாகப் பெற்றது***

***நெதர்லாந்தின் டெல்ஃப்ப்ட் சிட்டியின் அன்பளிப்பு.***

### 2.

***பூகிஸ் சரோங்***

***20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***பட்டு***

***2018-01013***

***ஆசிய நாகரீக அரும்பொருளகத்திடம் இரவலாகப் பெற்றது***

***திருமதி. A.C.R. வான் டிர் மண்டலே வெர்மீர் அவர்களின் அன்பளிப்பு, டெல்ஃப்ப்ட் சிட்டி , நெதர்லாந்து ஆசிய நாகரீக அரும்பொருளகத்துக்கு அளித்தது.***

*பூகிஸ் சமூகத்தினரால் நெய்யப்பட்டு ';பூகிஸ் சரோங்' என்று அறியப்படும் ஆடைகள், நீடித்து உழைக்கக்கூடியதாகவும் தரமானதாகவும் இருந்ததால் அதிகப் புகழ் பெற்றிருந்தன. தென்கிழக்கு ஆசியாவின் வெப்பமான வானிலைக்கு ஏற்றதாக இருந்த இவ்வாடை பொதுவாக அடிவயிற்றிற்கு கீழ் அல்லது மார்பில் சுற்றப்பட்டு அணியப்பட்டது. பூகிஸ் வர்த்தகர்கள் இதனை விற்று, திரும்ப வீடு செல்லும்போது நூல் கண்டுகளை வாங்கிச் செல்வர், அவர்களின் குடும்பத்தினர் அடுத்த வர்த்தக பருவத்திற்காக புதிய சரோங் துணிகளை நெய்தனர். அவர்களின் பரந்த வர்த்தக நடவடிக்கை , பட்டு மற்றும் பல்வேறு வகைச் சாயங்கள் என பிராந்தியத்திற்கே உரித்தில்லாத*

பொருட்களை பெறும் வாய்ப்பை வழங்கியது. கண்கவர் வண்ணத்துணிகளை இதர உள்நாட்டு நெசவாளர்களை காட்டிலும் சிறப்பாக உருவாக்க வழிவகுத்தது.

## 2107

### 1.
***ஆஸ்திரேலியாவிலிருந்து உலர்த்தப்பட்ட கடல் வெள்ளரி***

*ட்ரிபாங் அல்லது பெஷ்-டெ-மெர் என்று அழைக்கப்படும் கடல் வெள்ளரி அதன் சுவை காரணமாகச் சீனர்களிடம் மிகப் பிரபலமாக இருந்தது. அதிக விலையுள்ள, தேவையுள்ள பொருள் என்பதால் பூகிஸ் வர்த்தகர்கள் சிங்கப்பூருக்கு வரும் வழியில் ஒரு தனிமையான தீவின் கடற்கரைக்குச் சென்றும், நியூ கினியா மற்றும் ஆஸ்திரேலியா வரை நீண்ட தூரம் பயணம் செய்தும் அவற்றைச் சேகரித்து வருவார்கள்.*

### 2.
***பளபளப்பு செய்யப்பட்ட ஓட்டுடன் இளம் ஹாக்ஸ்பில் ஆமை***
***வருடம் குறிப்பில்லை***
***லீ கொங் சியன் இயற்கை வரலாற்று அரும்பொருளகத்தில் இரவலாகப் பெற்றது***

*ஆமை ஓடுகள், முக்கியமாக ஹாக்ஸ்பில் ஆமையின் ஓடு பலரும் விரும்பும் பொருளாக இருந்ததால் பூகிஸ்கள் அவற்றையும் வியாபாரம் செய்தார்கள். இதில் காட்டப்பட்டுள்ளது போன்ற முழு ஆமையும் சீன மருத்துவத்திற்காகவும் அல்லது அலங்காரப் பொருளாகக் காட்சிப்படுத்துவதற்காகவும் சிங்கப்பூரில் விற்கப்பட்டன. அவற்றின் ஓடுகள் சீப்பு மற்றும் அலங்காரப் பொருள்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டன.*

### 3.
***சாப்பிடத்தகுந்த பறவைக் கூடு மற்றும் அதன் குறிப்பு***
***1937***

***லீ கொங் சியன் இயற்கை வரலாற்று அரும்பொருளகத்தில் இரவலாகப் பெற்றது***

*பறவைகளின் கூடுகள் சீனர்களிடையே மிகவும் பிரபலமான மற்றொரு வர்த்தகப் பொருளாகப் இருந்தது. இவை இந்தோனீசியாவின் ஜாவாவிலிருந்து வந்திருக்கலாம். இக்கூடுகள் 1937ஆம் ஆண்டு சிங்கப்பூரின் சந்தையில் முன்னாள் ராஃபிள்ஸ் அருங்காட்சியகச் சேகரிப்பிற்காக வாங்கப்பட்டன. இந்த வகைப் பொருள்கள் எவ்வாறு பூகிஸ் வர்த்தக குழுக்களால் பரப்பப்பட்டது என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.*

## 2108

***நிலவளத்தை அதீதமாக அழித்தல்***

*இயற்கை வளங்களை லாபத்திறகாக் ஆங்கிலேய குடியேற்ற நிறுவனங்கள் சீர்கேடு செய்தன. சிங்கப்பூர் மற்றும் மலேயாவில் பரந்த நிலப்பரப்பில் இருந்த பிரதான காடுகள், குடியேற்றத்திற்காகவும், மரத் தேவைக்காகவும் தோட்ட வளர்ச்சிக்காகவும் அழிக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் இந்தத் தோட்டங்களை உருவாக்கி அதில் வேலை செய்வதற்காக தென்னிந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர். அந்த சமயத்தில் சிங்கப்பூரின் பூகோளம் உத்திபூர்வமான சாதகத்தை வழங்கியதால் காம்பீர் (Uncaria gambir), மிளகு மற்றும் ரப்பர் போன்றவை வெற்றிகரமாகப் பயிர் செய்யப்பட்டன. அதனால் அவற்றைச் சுற்று வட்டாரங்களில் இருந்து தொகுத்து, வழிமுறையில் பயன்பாட்டிற்கு உகந்ததாக்கி தயாரிப்புகளை மறு ஏற்றுமதி செய்ய முடிந்தது.*

## 1.

**“நீரிணை குடியேற்றங்கள் வளாகத்தில் காட்டின் வழியாக ஆற்றிற்கு உருட்டிச் செல்லப்படும் மரத்துண்டுகள்” ‘தி இல்லஸ்ட்ரேடட்’ லண்டன் செய்திப் பத்திரிக்கையிலிருந்து**

***18 செப்டம்பர் 1886***

***கையால் வண்ணம் தீட்டப்பட்ட மரச் செதுக்கல் ஓவியம்***

***2008-00183***

*இந்த ஓவியம் நீரிணை குடியேற்றங்களின் காடுகளால் ஏற்படக்கூடிய பொருளாதார ஆதாயங்கள்பற்றிய கட்டுரையின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டது. ஆதிக்கக் குடியேற்ற காலத்தில் சிங்கப்பூரின் பல காடுகள் அழிக்கப்பட்டன. மரங்களைச் சொந்த பயன்பாட்டிற்கும்,*

*விற்பனைக்கும் கொண்டு செல்ல எளிதாக மரத்துண்டுகளை ஆறுகளில் மிதக்க வைத்துத் திட்டமிட்ட இடங்களுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டன.*

## 2.

***ஒரு காம்பீர் மற்றும் மிளகு தோட்டம்***

***சுமார்.1900***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***1993-00292***

*ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே சீனத் தோட்ட பயிரீட்டாளர்கள் காம்பீர் விவசாயத்தைச் சிங்கப்பூரில் அறிமுகப்படுத்தினர். தோல் பதனீட்டிற்கும், சாயமிடுவதற்கும், வெற்றிலை பாக்கு மெல்லுவதற்கும் பயன்பட்ட காம்பீர் பொதுவாக மிளகு கொடிகளுடன் பயிரிடப்பட்டன. அவர் மிளகுக் கொடி படர்வதற்கும், உரமாகவும் பயன்பட்டன. 1840-களில் ஆங்கிலேயத் தொழிற்சாலைகளின் தேவை அதிகரிப்பால் காம்பீர் மற்றும் மிளகு தோட்டங்கள் பல்கி பெருகின. எப்படியிருந்தாலும் தீவிர விவசாயம் மண்ணின் வளத்தைக் குன்றச் செய்ததால் இந்த ஏற்றம் குறைந்த காலமே நீடித்தது.*

## 3.

***ஒரு காப்பித் தோட்டம்***

***G.R. லாம்பர்ட் & கோ.***

***1890***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***1995-00579***

*காப்பி , அன்னாசி , தென்னை மற்றும் ஜாதிக்காய் போன்ற மசாலா நறுமணப்பொருள்களின் வளர்ப்பு உள்பட பல வகையான விவசாயங்கள் சிங்கப்பூரில் முயற்சி செய்யப்பட்டன. எனினும் மண்ணின் வளம் குன்றியிருந்ததால் இவைகளில் பல கொஞ்ச காலத்திற்கே நீடித்தன.*

*மேலும், நோய்கள், பூச்சிகளின் தாக்கம் அல்லது குறைவான விவசாய இடம் ஆகியவற்றால் பெரிய அளவில் பொருளாதார வளர்ச்சியையும் அடைய முடியாமல் போனது.*

**4.**

***ஒரு சவ்வூடு மரத் தோட்டம்***

***சுமார் 1880-களில்- 1890s-களில்***

***G.R. லம்பர்ட் & கோ.***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2007-50917***

**5.**

*ஜவ்வரிசித் தொழிற்சாலை, சிங்கப்பூர்*

***ரீஜினால்டு பரோக் ரூட்யேர்டு***

***சுமார் 1870***

***காகிதத்தில் பென்சில் மற்றும் நீர் வண்ணம்***

***HP-0223***

*'சாகோ' அல்லது சவ்வூடு என்பது சில வெப்பமண்டல பனைமரத்தின் தண்டிலிருந்து பிரித்து எடுக்கப்படும் ஒருவகை மாவு பொருள். இது பெருமளவில் இந்தோனீசிய தீவுகளிலும் மற்றும் மலேயாவின் சில பகுதிகளிலும் (தற்போதைய மலேசியா) வளர்ந்தன. சவ்வூடு ஸ்டார்சை மாவாகவும், சவ்வரிசியாகவும் ஆக்குவதில் சிங்கப்பூர் முக்கிய மையமாகத் திகழ்ந்தது. அதற்கு ஐரோப்பாவிலும் மற்றும் இந்தியாவிலும் அதிக கிராக்கி இருந்தது. ரூடியேர்டின் ஓவியம் சிங்கப்பூர் ஆற்றின் கரையில் இருந்த சவ்வரிசித் தொழில்சாலையைக் காட்டுகிறது. பல தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளைத் தயார் செய்யும் செய்முறைகளுக்கு ஏராளமாகத் தண்ணீர் தேவைப்பட்டதால் அவை ஆற்றின் கரைக்கு அருகில் அமைக்கப்பட்டன.*

**6.**

***சிலேத்தார், ட்ரஃபெல்கர் பண்ணையில் இருந்த மரவள்ளி கிழங்கு உலர்த்தும் தட்டுகள்***

*1880களின்–1890களில்*

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

*1996-00073*

*'மரவள்ளி' எனும் மற்றொரு சாப்பிடக்கூடிய மாவுப்பொருளானது, மரவள்ளி மரத்தின் வேரில் இருந்து எடுக்கப்பட்டது. அவற்றை சவ்வூடு போன்ற செய்முறைகளுக்கு உட்படுத்தி மாவு மற்றும் சவ்வரிசிகளை உற்பத்தி செய்யப்பட்டன. சிங்கப்பூரிலிருந்த சீன விவசாயிகளுக்கிடயே மரவள்ளி கிழங்கு விவசாயம் பிரபலமானது, அதனால் மண்ணின் வளம் குன்றியது.*

**7.**

***மலேயாவின் சிலாங்கூரில் உள்ள ஒரு தகரச் சுரங்கத் தொழிற்சாலை***

***காலம்பற்றிய குறிப்பு இல்லை***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

*1999-02292-011*

**8.**

***புலாவ் பிரானியில் உள்ள நீரிணை வர்த்தக நிறுவனத்தினுடய உருக்காலையில் சுத்திகரிக்கப்பட்டத் தகர வார்ப்பு பாளங்களை தொழிலாளர்கள் அடுக்குகிறார்கள்***

***ஜோசப் பேய்லர் ராபர்ட்டின் படம்***

*1953*

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

*2011-03048*

*மலாய் தீபகற்பத்தில் பல நூற்றாண்டுகளாக தகரச் சுரங்கத் தொழில் இருந்தாலும் தொடக்கக்கால உருகு முறைகள் திறன் குன்றியதாக இருந்ததால் அதிக சேதாரம் ஏற்படுத்தியது. ஜெர்மன் வணிகர் ஹெர்மன் முஹ்லிங்ஹாஸ் மற்றும் ஸ்காட்லாந்து வணிகர் ஜேம்ஸ் ஸ்வோர்ட் இருவரும் நிலக்கரி பயன்படுத்தி மையப்படுத்திய உருக்கும் முறை மூலம் லாப வாய்ப்பை அடையாளம் கண்டதால் 1880-களிருந்து இந்நிலை மாறத் தொடங்கியது. அவர்கள் முதலில் பேராக் நதி அருகே ஒரு உருக்கு ஆலையை அமைத்தனர், ஆனால் இணைப்பு வசதிகள் குறைவாக இருந்ததால், பின்னர் சிங்கப்பூரின் புதிய துறைமுகத்திற்கு (தற்போது கெப்பல் துறைமுகம்) மிக அருகில் உள்ள புலாவ் பிரானி தீவில் ஒரு புதிய உற்பத்தி நிலையம் அமைக்கத் தீர்மானித்தனர். துறைமுகப் போக்குவரத்தும் மற்ற வசதிகளும் இருந்ததால் அது மிகச்சரியான இடமாக இருந்தது. இந்தத் திட்டத்தைச் செயலாக்க அவர்கள் தகரம் மற்றும் இதர தாதுக்களை, கனிமங்களை உருக்குதல், தூய்மைப்படுத்துதல் மற்றும் வர்த்தகம் செய்தல் ஆகியவற்றிற்காக ஸ்ட்ரெயிட்ஸ் டிரேடிங் கம்பெனி லிமிட்டேர் நிறுவனத்தைத் தொடங்கினர். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தகரம் சிங்கப்பூரின் மிக முக்கிய ஏற்றுமதிகளில் ஒன்றானது.*

## 9.

***பிரம்பை பின்னும் மலாய் ஆண்கள்***

***G. R. லம்பர்ட் & கோ.***

***சுமார் 1880களின்–1890களில்***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2007-50916***

**10.**

***கான்டோனீஸ் பிரம்பு தொழிற்சாலை கூட்டமைப்பின் 10ஆம் ஆண்டு நிறைவு***

***1919***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***2011-02062***

***சிங்கப்பூர் பிரம்பு தொழிற்சாலை கூட்டமைப்பின் அன்பளிப்பு***

*பிரம்பு பல்வேறு வகையான வெப்பமண்டலப் பனைமரங்களிலிருந்து எடுக்கப்பட்டது. அதனைப் பதப்படுத்தும் செய்முறைக்கு அதிக தண்ணீர் தேவைப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தத் தொழிலில் சீனாவின் குவாண்டோங் பகுதியிலிருந்து வந்த கான்டோனீஸ் இனத்தவர்களின் ஆதிக்கம் அதிகமிருந்தது. 1909- இல் 17 பிரம்பு தொழிற்கூடங்கள் சேர்ந்து 25A, ஹாக் லாம் தெரு, படகுத் துறைக்கு அருகில் கான்டோனீஸ் பிரம்புத் தொழிற்சாலைக் கூட்டமைப்பை உருவாக்கின.*

*தயார்படுத்தப்பட்ட பிரம்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டு அவற்றைப் பல்லின உள்ளூர் கைவினைஞர்கள் பயன்படுத்தினர். இந்தப் படத்தில் காணப்படுவது போல் மலாய் நெசவாளர்களும் அதில் அடங்குவர்.*

**11.**

***செலிட்டாரில் இந்திய ரப்பர் மரப்பால் வடிப்பவர்***

***1900கள்–1930கள்***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***2007-00733***

*சிங்கப்பூர் பூமலையின் முதல் இயக்குநர் ஹென்றி நிக்கோலஸ் ரிட்லே,*

*மலாயாவின் ரப்பர் தொழில்துறையை விரிவான சாகுபடி ஆராய்ச்சியின் முன்னோடியாகவும் தென் அமெரிக்க ஹெவியா பிரேசிலியென்சிஸ் மரத்தைத் தோட்டக்காரர்களுக்கு ஊக்குவிப்பவராகவும் இருந்தார். மேலும் மரங்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் பழைய முறைகளுக்கு மாற்றாக, ரிட்லி கண்டுபிடித்த 'ஹெர்ரிங்போன்' எனும் ரப்பர் வடிக்கும் நுட்பம் அதிக மகசூலைத் தந்தது. இந்தப் படத்தில் ஒரு வடிப்பாளர் பாலை ஒரு கோப்பையில் சேகரிப்பதற்கு V வடிவ வெட்டுகளை உருவாக்கிக் கொண்டிருப்பதைக் காணலாம்.*

## 12.

**ரப்பர் தோட்டத்தில் ரப்பர் மரப்பாலை தூக்கிச் செல்லும் இந்தியத் தொழிலாளர்கள்**

***1928***

**ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்**

***1995-03541***

*விடியும்போது எழுந்திருக்கனும் அடுத்து ரப்பர் பால் வாளிகளைச் சுமக்கனும்,*
*கடினமாக உழைத்து 100 ரப்பர் மரங்களில் பாலை வடிக்கனும்,*
*உழைப்பாளிகளான நாங்கள் கடுமையா உழைக்கிறோம் ஆனால் பட்டினியில் கிடக்கிறோம்,*
*வேலை செய்யாவிட்டால் அவர்கள் தரையில் தள்ளி அடிப்பார்கள்.....*

- *மலாயன் தோட்டத்தொழில் காலத்துத் தமிழ் கிராமியப் பாடல், சாந்தி பிள்ளையின் மொழிப்பெயர்பிலிருந்து எடுக்கப்பட்டது (2013)*

*1920-களில் தகரத்தை முந்தி ரப்பர் முக்கிய ஏற்றுமதிபொருளாக மாறியது. மலாயன் ரப்பர் தோட்டத்தொழிலில் ஈடுபட்ட பெரும்பான்மையான தொழிலாளிகள் தென்னிந்தியர்கள். அவர்கள் இங்கே ஒப்பந்தத்*

*தொழிலாளர்களாகவோ அல்லது கங்காணி முறையிலோ வந்தவர்கள். இங்கே அவர்களின் முதலாளிகள் அல்லது வேலைக்கு அமர்த்தியவர்கள் முழு அதிகாரத்துடன் இருந்ததால் எப்போதும் மிக மோசமான வேலையிட சூழலும் சீரழிவையும் சந்தித்தார்கள்.*

**13.**

***சிங்கப்பூரின் ஓர் தொழிற்சாலையில் ரப்பர் உலர்த்தப்பட்டு சேமித்து வைக்கப்பட்டுள்ளது***

***20-ஆம் நூற்றாண்டின் தொடக்கமுதல் மத்தி வரை***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***XXXX-00215***

**14.**

***குட்யியர் ஓரியண்ட் நிறுவனத்தின் வேலையாட்கள் ரப்பர் ஷீட்டு கட்டுகளை ஏற்றுகிறார்கள்***

***ஜோசப் பேய்லர் ராபர்ட்டின் படம்***

***1952***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***2011-03049***

*20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சிறு தயாரிப்பாளர்களிடமிருந்து வந்த ரப்பர் தரம் குறைந்ததாகவும் மேசமான தயாரிப்பாகவும் இருந்தது. சிங்கப்பூரில் இருந்த ரப்பர் ஆலைகளும், ரப்பர் உலர்த்தும் புகைமண்டபங்களும் இறக்குமதியான ரப்பரை மீண்டும் தர மேம்பாட்டுச் செயல்முறைகளுக்கு உட்படுத்தி மதிப்புக் கூட்டி விற்பனை செய்தன.*

*சிங்கப்பூர், ரப்பர் வளர்ப்பாளர்கள் முகவர்களோடு தொடர்பு கொண்டு அனைத்துலகச் சந்தையில் அவர்களின் ரப்பரை விற்க ஒரு மையச் சந்தையாக விளங்கியது. வாங்குபவர்களுக்கு நியாயமான விலையையும்,*

*உயர்ந்த தரத்தையும் வழங்கி, சிங்கப்பூர் உலகின் உயர்ந்த ரப்பர் சந்தையாகத் தன்னை நிறுவியது. 1930-களில் பெரும்பாலான தென்கிழக்கு ஆசியாவின் ரப்பர் - உலக உற்பத்தியில் 75% க்கு மேல் - சிங்கப்பூரிலிருந்து விற்கப்பட்டது.*

## 15.

***கூட்டமைக்கபட்ட மலாய் மாநிலங்களின் ரப்பர் ஏற்றுமதி செய்வதற்கான கூப்பன்***

***1922–1941***

***காகிதம்***

***2000-01035***

*இந்த வட்டாரத்தில் ரப்பர் பயிரிடுவது பிரபலமானதுடன் பல ரப்பர் மரங்கள் 1910லிருந்து 1920 க்குள் முதிர்ச்சியடைந்தன. அதனால் உற்பத்தி பெருகி விலை வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. தொழிலைப் பாதுகாப்பதற்காக ஆங்கிலேய அரசாங்கம் 1922 லிருந்து ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது. மேலும், வரையறுக்கப்பட்ட அளவு ரப்பர் மட்டுமே ஏற்றுமதி செய்ய மலேயன் ரப்பர் தோட்ட முதலாளிகளுக்குக் கூப்பன்களையும் வெளியிட்டது.*

## 16.

***துண்டாக்கி உலர்த்தப்பட்ட ரப்பர் ஷீட்***

***சுமார்.1940கள்–1970கள்***

***ரப்பர்***

***2007-55107***

*ரப்பர் அதிகமாக ‘லேடெக்ஸ் க்ரெப்’ எனும் தகடுகளாகவோ அல்லது உலர்த்தப்பட்ட தகடுகளாகவோ பல்வேறு தரப்பிரிவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. அவை, தோற்றம், தூய்மை, நீண்டகால உழைக்கும்*

*தன்மை, மீட்ச்சித்திறன் ஆகியவற்றால் தரம் பிரிக்கப்பட்டன. துண்டாக்கி உலர்த்தப்பட்ட ரப்பர் தகடுகளைக் கொண்டு டயர்கள், காலணிகள், குழாய்கள் செய்யப்பட்டன.*

**17.**

***ரப்பர் வடிக்கும் கத்தி***

***சுமார்.1940கள்–1970கள்***

***மரம், உலோகம்***

***2007-55070***

**18.**

***ரப்பர் பாலை சேகரிக்கும் கிண்ணங்கள்***

***காலம்பற்றிய குறிப்பு இல்லை***

***பீங்கான்***

***2001-06645 and 2001-06650***

# 2200

## *பாகம் 2*
## *சிங்கப்பூர்: உலகின்  குறுக்குச் சந்திப்பு*

*19ஆம் நூற்றாண்டின் பாதிவரை சிங்கப்பூர் பரபரப்பான துறைமுக நகரமாக இருந்தது. 1869ல் சூயஸ் கால்வாயின் திறப்பு, கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய  நாடுகளின் சந்திப்பு மையமாக அதனை உறுதியாக்கியது. அதற்கு அடுத்த ஓராண்டுக்குள், சிங்கப்பூர் வர்த்தகத்தின் மதிப்பு 80 விழுக்காட்டுக்கும் மேல் அதிகரித்தது.*

*எகிப்தின் சூயஸ் கால்வாய் வழியில் கேப் ஆஃப் குட் ஹோப்பை தவிர்த்துச் செல்ல முடிந்ததால் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்குமான பயண நேரம் கணிசமாகக் குறைத்தது. பாய்மரக் கப்பல்களைக் கால்வாயில் இழுத்துச் செல்லக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததால், இந்த மாற்றம் ஆசிய - ஐரோப்பிய பயணத்திற்கு பாய்மரக் கப்பல்களைவிட  நீராவி கப்பல்களை அதிகப் பிரபலமாக்கியது. புதிய துறைமுகத்தின் வளர்ச்சி சிங்கப்பூரில் அதிகரித்து வரும் பெரிய கப்பல்களுக்கு இடமளிக்கவும், நிலக்கரி நிரப்புவது, கப்பல் பழுது பார்ப்பது போன்ற சேவைகளை வழங்கவும் உதவியது. அதே சமயத்தில் சிங்கப்பூர் ஆறு, ரப்பர், அரிசி உள்ளிட்ட பளுவான  பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான முக்கிய இடமாக இருந்தது.*

## 2201

### 1.

***பட்டாவியாவில் (தற்போது ஜகார்த்தா) இருந்து சிங்கப்பூர் மற்றும் சூயஸ் கால்வாய் வழியாகச் சிங்கப்பூர் மற்றும் சூயஸ் கால்வாய் வழியாக ஹாலந்துக்கு (தற்போது நெதர்லாந்து) செல்லும் 'ஸ்டூம்வார்ட் மாட்சாப்பிஜ்' நெதர்லாந்து மற்றும் ரோட்டர்டம்ஷி லாய்டு நீராவிக் கப்பலின் பயண அட்டவணை(Schedule).***

***1924***

***காகிதம்***

***2000-07217***

*சிங்கப்பூர் நன்கு இணைக்கப்பட்ட இடம் என்பதைத் தாண்டி, பெரும்பாலான ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணிக்கும் சரக்கு மற்றும் பயணிகள் கப்பல்களுக்கு முக்கிய இடை நிறுத்தத் துறைமுகமாகவும் செயல்பட்டது.*

### 2.

***சூயஸ் காலவாய் வழியாக நீராவி கப்பல்கள் கடப்பதைக் காட்டும் புகைப்படம்***

***20th நூற்றாண்டின் தொடக்கம்***

***சுழல் செதுக்குமுறைப் படம்***

***2014-00171-006 and 2014-00171-008***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அரும்பொருளகச் சேகரிப்பு (கேப்பிட்டா லேண்ட் லிமிட்டெடின் நன்கொடை)***

*ஒரு கால்வாயைச் சூயஸ் கண்டத்தின் வழியாக உருவாக்கும் யோசனை ரோமானிய காலத்திலேயே இருந்தது. ஆனால் 1854- இல் ஃபெர்டினண்டு தி லேஸ்ஸெப்ஸ் எனும் பிரஞ்சுத் தூதர், கால்வாயைக் கட்டும் நோக்கத்தைச் செயலாக்கத் தேவையான நிலத்தை எகிப்திய*

*அதிகாரிகளிடமிருந்து விரும்பத்தக்கச் சலுகைகளுடன் பெற்று தந்தார். அதன் பணிகள் 1859 இல் தொடங்கி 10 ஆண்டுகள் கழித்து அதிகாரப்பூர்வமாகச் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. பத்து ஆண்டுகள் கழித்து 1871- இல் அதன் முழு 8 மீட்டர் ஆழத்தை அடைந்தது.*

*அந்தக் கால்வாய் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்குமான நீராவிக் கப்பல்களின் பயண நேரத்தைக் கணிசமாகக் குறைத்து, ஆப்பிரிக்கக் கடற்கரையைத் தவிர்த்துப் பிரபலமான பயண வழியாக மாறியது. கால்வாய் திறக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் சிங்கப்பூருக்கு வரும் மொத்த கப்பல்களின் எடை 40% க்கு மேல் அதிகரித்து, வர்த்தகத்தைக் குறிப்பிடதக்க அளவு உயர்த்தியது.*

## 3.

***சிங்கப்பூர் ஆங்கிலேய பேரரசின் மையமாகச் செயல்பட்டதைக் காட்டும் விளக்கப்படம் - நையாண்டி சஞ்சிகையான ‘ஸ்ரயிட்ஸ் ப்ரொடியூஸ்’ தொகுதி 1 முதல் 3 வரை***

***2 ஜூலை 1923***

***காகிதம்***

***2007-00856***

*இந்த விளக்கப்படம், சிங்கப்பூரை மையமாகக் கொண்டு செயல்பட்ட ஆங்கிலேயப் பேரரசின் செல்வாக்கைப் ‘பிரிட்டானியா’ எனும் பெயரில் பெண் போர்வீரர்போல உருவகம் செய்யப்பட்டதைக் காட்டுகிறது. அது சிங்கப்பூரைப் பேரரசின் மகுடத்தில் இருக்கும் வைரமாகக் காட்டுகிறது.*

*‘ஸ்டீரியோவியூஸ்’ என்பது புகைப்பட முப்பரிமாண (3 டி) தொழில்நுட்பத்தின் தொடக்ககால வடிவமாக இருந்தது. ‘ஸ்டீரியோஸ்கோப்’ எனும் முப்பரிமாண நோக்கி, கிட்டத்தட்ட ஒரே மாதிரியான இரு புகைப்படங்களைப் பயன்படுத்தி புகைப்படத்தில்*

*ஆழம் இருப்பது போன்ற மாயையை அளிக்கும். அருகே உள்ள முப்பரிமாண நோக்கிகளை பயன்படுத்திப் பாருங்கள்!*

**4.**

***சிங்கப்பூர்:உலகின் சாலை சந்திப்பு -ஆங்கிலேய மலாயாவின் நீரிணை குடியேற்றங்களின் மகாபெரிய கிழக்கத்திய வர்த்தக துறைமுகம் என்ற வாசகத்துடன் கேவ்னாக் பாலத்தின் முப்பரிமாணத் தோற்றம் ("Singapore: The 'Cross Roads' of the world – The Great Eastern Trading Port of the Straits Settlements, British Malaya")***

***19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை***

***கீஸ்டோன் வியூ நிறுவனம்***

***அட்டையின் மீது ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***2008-02273***

*சிங்கப்பூர் ஆற்றின் வடகரையில் உள்ள அரசாங்க குடியிருப்புகளைத் தென்கரையில் உள்ள வணிகச் சதுக்கத்துடன் (இன்றைய ரஃபிள்ஸ் பிலேஸ்) இணைத்த கேவ்னாக் பாலத்தின் முப்பரிமாணத் தோற்றம். இது 1869ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொழிலாளர்களால் கட்டப்பட்டது. முப்பரிமாணத்தோற்றத்தில் தெரியும் வாசகங்கள் கிழக்கிற்கும் மேற்கிற்குமான இடையில் இணைக்கும் சாலைச் சந்திப்பாகச் சிங்கப்பூர் இருந்ததை காட்டுகிறது.*

**5.**

***படகுத்துறையில் தொங்கான் படகு வரிசை முப்பரிமாணத்தோற்றம்***

***சுமார் 1901***

***அண்டர் உட் & அண்டர் உட் வெளியீட்டாளர்கள்***

***அட்டையின் மீது முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2008-02277***

***சூயஸ் காலவாய் வழியாகச் செல்லும் கப்பல்***

***19ஆம் நூற்றாண்டின் இறுதி***

***மறு உருவாக்கம்***

***XXXX-15174-043***

## 2202

### 1.

***“புதிய துறைமுக கட்டுமானம், சிங்கப்பூர்” என்று தலைப்பிட்ட அஞ்சல் அட்டை***

***1880s***

***கால்லைட் என்ற பழைய புகைப்படக்கலைப் படம்***

***1995-03677***

*1840களுக்குள், அதிகரித்து வந்த நீராவி கப்பல் போக்குவரத்தை சிங்கப்பூர் ஆறு மற்றும் கடற்கரை நீர்முகம் ஆதரிக்க முடியாது என்பதால், ஒரு பெரிய துறைமுகம் தேவைப்படுவது தெளிவாந்து. 1848 ஆம் ஆண்டில், அட்மிரல் ஹென்றி கெப்பல் தற்போதைய கெப்பல் வளைகுடா பகுதியில் நீர்நிலைகளை ஆய்வு செய்து, புதிய துறைமுகம் கட்டுவதற்கான இடத்தைப் பரிந்துரைத்தார். அதன் ஆழமான நீரின் சாதகங்கள் பற்றி அவர் எழுதியது:*

*“சிங்கப்பூர் நீர்வழியில் , எந்தவொரு அறியப்பட்ட கப்பல் நிறுத்தத்திலும் இல்லாத அளவிற்கு கப்பலின் அடிப்பகுதி அழுக்காகிறது; இது கப்பலின் அடிப்பகுதி கடலடிக்கு அருகில் இருப்பதாலாகும். ஆனால் புதிய துறைமுகத்தில் இது ஏற்படுவதில்லை, ஏனென்றால் அதில் எப்போதும் ஒரு நீரோட்டம் இருக்கும்…”1*

*1860களில் தஞ்ஜோங் பகார் கப்பல்துறை நிறுவனம் உள்ளிட்ட பல தனியார் நிறுவனங்களால் இத்துறைமுகம் படிப்படியாகக் கட்டப்பட்டது. 1900ஆம் ஆண்டில், ஹென்றி கெப்பலின் பங்களிப்பைக் கௌரவிக்கும் வண்ணம் இது 'கெப்பல் துறைமுகம்' என்று மறுபெயரிடப்பட்டது.*

**2.**

***'கெப்பல்' துறைமுகத்தில் உள்ள அரச கப்பல்துறை***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் மத்தி வரை***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***XXXX-13759***

*1913-இல் கட்டப்பட்டபோது அரச கப்பல்துறை (King's Dock) உலகின் இரண்டாவது ஆக நீளமான கப்பல் துறையாகவும் மற்றும் சூயஸ் கால்வாயிக்கு கிழக்கில் ஆக நீளமான கப்பல் துறையாகவும் இருந்தது.*

**3.**

***கெப்பல் துறைமுகத்தின் துறைமுகச் சரக்கு கையாளப்படும் இடத்தில் சரக்கு மாற்றப்படும் காட்சி***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் மத்தி வரை***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***XXXX-13764***

**4.**

***நாடாளுமன்ற வர்த்தகக் கழகத்தின் தலைவர் வழங்கிய சிங்கப்பூர் துறைமுகம்குறித்த அறிக்கை***

***மே 1929***

***காகிதம்***

***2010-01477***

*சிங்கப்பூர்த் துறைமுகத்தின் செயல்பாடு மற்றும் தேவைகள் குறித்த இந்த அறிக்கையில் கெப்பல் துறைமுகத்தின் தளவமைப்பை விளக்கும் ஓர் உருவப்படம் உள்ளது. இவ்விடம், சிங்கப்பூர் நதி மற்றும் சிங்கப்பூர் நீர்வழிகள் அகியவற்றுடனான தொடர்பைக் காட்டுகிறது. கப்பல்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கிய பயணித்தின் போது தயாரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுவதற்காகத் துறைமுகத்திலுள்ள துறை மேடைகளில்*

*நின்றன. ஆனால், மேற்குப் பயணங்களின்போது மூலப்பொருட்களை ஏற்றும் விதமாகத் துறைமுகக் கட்டணங்களைத் தவிர்க்க, அவை நீர்வழி பகுதிகளில் நங்கூரமிடப்பட்டிருந்தன.*

## 5.

***கூலியாட்கள் நிலக்கரியைக் கப்பலிலிருந்து துறைமுக மேடைக்குச் சுமந்து செல்வதைக் காட்டும் அஞ்சல் அட்டை***

***காலம் குறிப்பிடப்படவில்லை***

***கால்லைட் என்ற பழைய புகைப்படக்கலை படம்***

***1999-02596***

## 6.

***கூலியாட்கள் தஞ்சோங் பகார் கப்பல்துறையில், கப்பலில் நிலக்கரியை ஏற்றுவதைக் காட்டும் அஞ்சல் அட்டை***

***சுமார்.1900***

***'கால்லைட்' எனும் பழைய புகைப்படக்கலைப் படம்***

***1995-01598***

## 7.

***இரவில் சீனக் கூலியாட்கள் நிலக்கரியை கப்பலில் ஏற்றச் சுமந்து செல்லும் காட்சி வரைபடம் (The Graphic)***

***1876***

***மர செதுக்குபடம்***

***XXXX-01279***

*19 ஆம் நூற்றாண்டில், சிங்கப்பூர் விரிவான நிலக்கரி நிரப்பும் வசதிகளைக் கொண்ட ஒரே பிராந்திய துறைமுகமாகவும், உலகின் மிகச் சிறந்ததாகவும் கருதப்பட்டது. ஆயினும்கூட, கூலிகள், நிலக்கரி கூடைகளை தடித்த மூங்கில் கம்புகளில் தொங்கவிட்டு, நிலக்கரி கப்பல்கள், சேமிப்பு கிடங்குகள் மற்றும் எரிபொருள் நிரப்பத் தேவையுடைய நீராவிக்*

*கப்பல்களுக்கும் இடையே சுமந்து சென்றதால் அங்குள்ள வேலைகள் உடலுழைப்பு மிகுந்ததாக இருந்தது.*

**8.**

***கெப்பல் துறைமுகத்தில் "The P&O" நிறுவன துறைமுக சரக்கு கையாளும் இடம்***

***கடித அச்சு பாதிசாயல் அச்சுப்படம்***

***1994-05599***

*1852ஆம் ஆண்டில், பெனின்சுலர் & ஓரியண்டல் ஸ்டீம் நாவிகேஷன் நிறுவனம் (P&O) தனது செயல்பாடுகளைப் புதிய துறைமுகத்திற்கு மாற்றிய முதல் நீராவி கப்பல் நிறுவனம். அந்நிறுவனம் தனது பெரிய கப்பல்கள் நிற்பதற்கு ஆழமான நீர் தேவையாக இருந்ததால் தனது சொந்தச் சரக்கு கையாளும் மேடையையும், கப்பலுக்கு நிலக்கரி நிரப்பும் வசதியையும், சரக்குக் கிடங்குகளையும் கட்டியது. இது அந்த நிறுவனத்தின் கப்பல் போக்குவரத்துக் கட்டமைப்பில் சிங்கப்பூரின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியது.*

**9.**

**சிங்கப்பூரில் திருவிதாங்கூர் நீராவிக் கப்பலில் சரக்கு ஏற்றப்படுவதைக் காட்டும் படம் - 'இல்லஸ்ட்ரேட்டெட்' லண்டன் நியூஸ் பத்திக்கையிலிருந்து**

***1873***

***மரத்தில் செதுக்கப்பட்டது***

***XXXX-01405***

*பம்பாய் (இப்போது மும்பை), கல்கத்தா (இப்போது கொல்கத்தா), பினாங்கு, சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் ஆகியவற்றின் வழி இங்கிலாந்திற்கும் ஆசியாவிற்கும் இடையில் பயணித்த பி&ஓ*

*கடற்படையில் உள்ள நீராவி கப்பல்களில் திருவாங்கூர் எனும் கப்பலும் ஒன்றாகும்.*

***படகுத் துறையில்(Boat Quay) படகிலிருந்து சரக்குகளை இறக்கும் வேலையாட்கள்***

***சுமார்.1950கள்***

***கார்ல் அலக்ஸாண்டர் ஜிப்சொன் - ஹில்***

***மறு உருவாக்கம்***

***XXXX-16577***

# 2203

***கடல்வழி பயணம்***

*பல மக்கள், குறிப்பாகக் கப்பல்களில் பணியாற்றிய கடலோடிகள் எனப்பலரும் ஈடுபட்டு கப்பல் பயணம் மற்றும் கடல் வர்த்தகத்தைச் சாத்தியமாக்கினார்கள்.*

## 1.

***சீனப் பயணிகள் சிங்கப்பூரிலிருந்து ஹாங்ஹாங்கிற்கு பயணிக்கும் காட்சி - 'தி கிராஃபிக்ஸிலிருந்து'***

***1885***

***கையால் வண்ணம் திட்டப்பட்ட மர செதுக்கல் படம்***

***2007-00832***

*இந்தப் படத்தில் சிங்கப்பூரிலிருந்து ஹாங்காங்கிற்கு சீனவகை படகின் மூலம் பயணிக்கும் புலம்பெயர்ந்த சீன இனத்தவர்களைக் காட்டுகிறது. அவர்களில் சிலர் காலம் சிங்கப்பூரில் வேலை செய்தபிறகு வீடு திரும்பும் தொழிலாளர்களாக இருக்கலாம். அவர்களில் பெரும்பாலானவர்கள் கூலித் தொழிலாளர்களாக இருக்கக்கூடும். கீழ்ப்பக்கம் திறந்த மேல்தளத்தில் அவர்களின் வாழ்க்கை மற்றும் உறங்கும் நிலைமைகளைக் காணலாம். படத்தின் மேலே ஒரு வங்கி அதிகாரி, சமையற்காரர், மருத்துவர் ஆகியோர் உள்ளனர். அவர்கள் கப்பலில் பணியாற்றிக் கொண்டிருந்திருக்கலாம்.*

## 2.

***'இல்லுஸ்ட்ரேட்டட்' லண்டன் செய்தியில் வெளியான 'அந்நியர்களைப் பற்றிய ஓவியங்கள்' ஆசியர்கள், ஆப்பிரிக்கர்கள் மற்றும் தென் கடல் தீவுவாசிகளுக்கான உறைவிடம் எனும் தலைப்பில் அமைந்த விளக்கப்படம்***

***1890***

***லித்தோகிரஃபி***

***2007-00821***

*லண்டனில் அமைந்திருந்த ஆசியர்கள், ஆப்பிரிக்கர்கள் மற்றும் தென் கடல் தீவுவாசிகளுக்கான உறைவிடம் என்பது பயணிகளுக்கும், குறிப்பாகப் பிரிட்டிஷ் காலனிகளிலிருந்து வந்த வெளிநாட்டுக் கப்பல் தொழிலாளர்களுக்கும் தற்காலிக தங்குமிடத்தை வழங்கியது. அவர்கள் கிழக்கே திரும்பும் கப்பல்களில் வேலை தேடும் வரை இங்குத் தங்கியிருந்தனர். இந்தப்படம் ஒரு சிங்கப்பூர்க் கடல் பயணி உள்பட அந்த இல்லத்தில் தங்கியிருந்த பலதரப்பட்ட மக்களைக் காட்டுகிறது.*

**3.**

***கோனின்கிலிக்கே பகேடவகார்டி மாச்சாப்ஜி (KPM) கப்பல்களின் பட்டியல்***

***சுமார் .1930கள்***

***காகிதம்***

***2000-07212***

*20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கேபிஎம் மிகப்பெரிய கப்பல் நிறுவனங்களில் ஒன்றாகும். இது தென்கிழக்கு ஆசிய வட்டாரத்தை ஆஸ்திரேலியா, சீனா, தென்னாப்பிரிக்கா மற்றும் நெதர்லாந்துடன் இணைத்தது. கே.பி.எம் கப்பல்கள் சேவையிலிருந்து மீட்கப்படபின் பெரும்பாலும் சிங்கப்பூரில் விற்கப்பட்டதாகப் பதிவுகள் கூறுகின்றன.*

**4.**

***அஞ்சல் அட்டை - சிங்கப்பூரில் பூஸ்டெடு நிறுவனம்***

***சுமார்.1910***

***வில்சன் & கோ. புகைப்படக்கலைஞர்***

***கால்லைட் என்ற பழைய புகைப்படக்கலைப் படம்***

*2008-01121*

*சிங்கப்பூரில், சில அமைப்புகள் கப்பல் தொழிலாளர்களுக்குத் தங்கும் விடுதி, உணவு, மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை வழங்கின. இதில் கடற்பயணிகள் காப்பகம் (Sailors' Home, 1851-லிருந்து), கடற்பயணிகள் ஓய்விடம் (Sailors' Rest,1882-லிருந்து), மற்றும் பூஸ்டெடு நிறுவனம்(Boustead Institute, 1892-லிருந்து) ஆகியவை அடங்கும். பூஸ்டெடு நிறுவனத்தின் பெயர் எட்வர்ட் பூஸ்டெடு என்பவரின் பெயரில் அமைந்தது. சிங்கப்பூரின் வர்த்தகத்திற்கும் மற்றும் செழிப்பிற்கும் கடலோடிகள் முக்கிய பங்கு வகிப்பதாக நம்பினால் பணக்கார வணிகரான அவர் கடலோடிகளுக்குத் தங்குவிடுதி அமைக்க ஒரு தொகையை உயில் எழுதி வைத்திருந்தார்.*

**5.**

***லீ சின் சாய், வோங் கிங் குவாங் , லீ சின் சுன், மற்றும் சாங் ச்சூ ஆகிய கடலோடிகளின் அடையாள அட்டை***

***தேதி குறிப்பிடப்படவில்லை -20ஆம் நூற்றாண்டின் மத்தி***

***சூப்பர் காகிதம்***

***XXXX-02425, XXXX-02422, XXXX-02424 and 2003-00262***

*இந்த அடையாள அட்டைகளில் கப்பல் பணியாளர்களின் துறை, அவர்களின் பிறந்த தேதி, பிறந்த இடம் போன்ற அடிப்படைத் தகவல்களைக் குறிப்பிட்டது. மேலும், சில அட்டைகளில் தொழிலாளர்களின் நிறுவனங்களின் மை முத்திரைகளும் பதிக்கப்பட்டிருந்தன.*

*நீராவி கப்பல்களில் பணியாற்றும் குழுவினர் மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர் – கப்பல் தளப் பிரிவு, இயந்திரப் பிரிவு, பணிவிடைப் பிரிவு. கப்பல் தளப் பிரிவினர் கப்பலின்*

*சுற்றுப்புரத்தை கண்காணிப்பது, கப்பலைச் செல்லுத்துதல், சுத்தம் செய்தல், இயந்திரமில்லாத பகுதிகளைப் பராமரித்தல் மற்றும் சரக்கு ஏற்றுதல், இறக்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டனர். இயந்திரப் பிரிவினர் இயந்திரங்களை இயக்குவது , பராமரிப்பது, நிலக்கரி ஆற்றலில் இயங்கும் நீராவிக்கப்பல் என்றால் நிலக்கரியை கொதிகலனின் எரி உலையில் தள்ளுவது ஆகியவற்றை செய்வர். பணிவிடைப் பிரிவினர் கப்பல் பணிகுழுவினருக்கும், பயணிகளுக்கும் தேவையான உணவு, அறை வசதி மற்றும் பிற அடிப்படை தேவைகளைப் பார்த்துக்கொண்டனர்.*

***சிங்கப்பூர் ஆற்றைச் சுற்றியிருந்த தெருப்பெயர்ப் பலகைகள் 20ஆம் நூற்றாண்டு***

**உலோகம்**

***2010-00320, 2010-00334, 2010-00357, 2010-00290, 2010-00337, 2010-00313, 2010-00343 and 2010-00284***

## 2204

***கப்பல் துறையிலும் படகுத் துறையிலும் வேலை செய்தல்***

*சிங்கப்பூர் ஆற்றிலும் புதிய துறைமுகத்திலும் (பிற்காலத்தில் கெப்பல் துறைமுகம்) நடந்த பரந்த வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பெரிய எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இவர்கள் சரக்குகளை ஏற்றி, இறக்குதல், அவற்றைக் கிடங்குகளுக்குக் கொண்டு செல்லுதல், கிடங்குகளிலிருந்து துறைமுகத்திற்கு கொண்டு வருதல் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றினர்.*

## 1.

***துறைமுகத்தில் B. கோவிந்தசாமி செட்டியார் மற்றும் இந்திய தொழிலாளர் நிறுவனத்தின் உறுப்பினர்களும் இருக்கும் புகைப்படம்***

***சுமார் 1920க்கும் –1930க்கும் இடையில்***

***மறு உருவாக்கம்***

***உதவி மைதிலி எஸ்.எல் பெருமாள்***

*B. கோவிந்தசாமி செட்டியார் இந்தியத் தொழிலாளர் நிறுவனத்தை நடத்தினார். அந்நிறுவனம் சிங்கப்பூர்த் துறைமுக வாரியத்திற்கு (பிற்காலத்தில் இது சிங்கப்பூர் துறைமுக ஆணையமாக (Port of Singapore Authority - PSA) மாறியது. தற்போது PSA இண்டர்னேஷனல் ஆக உள்ளது) முதன்மை ஒப்பந்ததாரராககச் செயலாற்றியது. இந்த நிறுவனம் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளத் தேவைப்படும் தொழிலாளர்களில் பலரை பணிக்கு அனுப்பியது. அவர்களில் பெரும்பாலான இந்திய, சீனத் தொழிலாளர்கள் இருந்தனர்.*

## 2.

***நீரிணை குடியேற்றங்களின் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதற்காக B. கோவிந்தசாமி செட்டியாருக்கு அளிக்கப்பட்ட ஓலைச்சுருள்***

***1938***

***துணி, வெள்ளி***

***மைதிலி எஸ்.எல் பெருமாள் அவர்களிடம் இரவலாகப் பெற்றது***

*B. கோவிந்தசாமி செட்டியார் நீரிணை குடியேற்றங்களின் நீதியரசராக நியமிக்கப்பட்டதை முன்னிட்டு புகழ் பெற்ற தொழிலதிபர்கள் ஏற்பாடு செய்த தேநீர் விருந்தில் அவருக்கு இந்த ஓலைச்சுருள் வழங்கப்பட்டது. இது ஜாதி, மத பேதங்களைப் பார்க்காமல் அனைவரிடமும் சமத்துவமாக நடந்துகொண்ட அவரது உயர்ந்த மனப்பான்மையைப் பாராட்டுகிறது. அவர் இந்து மதத்தைச் சார்ந்தவராக இருந்தும், இஸ்லாமிய மரபுகளை மதித்ததும் பாராட்டியதும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**3.**

***கூலித் தொழிலாளி ஃபி யீ சியாங்- அவர்களுக்குச் சிங்கப்பூர்த் துறைமுக வாரியம் வழங்கிய அடையாள அட்டை***

***1940***

***காகிதம்***

***2000-00010***

**4.**

***சிங்கப்பூர் கப்பல் துறையில் கூலியாட்கள்***

***G.R. லம்பர்ட்t &கோ.***

***1885***

***முட்டை வெள்ளைக்கரு தடவிய காகித அச்சுப்படம்***

***2023-00675***

**5.**

***படகுத் துறையில்(Boat Quay) படகிலிருந்து சரக்குகளை இறக்கும் வேலையாட்கள்***

***சுமார் .1950களில்***

***கார்ல் அலக்ஸாண்டர் ஜிப்சொன் - ஹில்***

***ஜெலாட்டின் வெள்ளி அச்சுப் படம்***

***XXXX-16577***

## 2205

### 1.
***ஒன்றுபட்டு உழைத்தல்***

***லோக் ஹாங் செங்***

***1964, அச்சிடப்பட்டது 2015***

***இங்க் ஜெட் பிரிண்ட் காகிதத்தில்***

***2016-00731***

### 2.
***சரக்கை ஏற்றி இறக்கும் மூவர் குழு***

***லோக் ஹாங் செங்***

***1971, அச்சிடப்பட்டது 2015***

***இங்க் ஜெட் பிரிண்ட் காகிதத்தில்***

***2016-00736***

*இந்தப் புகைப்படங்கள் சிங்கப்பூர் புகைப்படக் கலைஞர் லோக் ஹாங் செங் படம்பிடித்தவை. இவை சிங்கப்பூர் ஆற்றில் தொழிலாளர்கள் ஒன்றாக உழைத்து, சரக்குகளை ஏற்றி இறக்கியதைப் பதிவு செய்கின்றன. இடது பக்கம் – படகுத் துறை பகுதியில் தொழிலாளர்கள் ரப்பர் திண்டுப் பொதிகளை ஏற்றுகிறார்கள். வலது பக்கம் – படகுத் துறைப் பகுதியில் தொழிலாளர்கள் அரிசி மூட்டைகளை மாற்றுகிறார்கள்.*

# 2206

## 1.

***சிறு பஞ்சுத்திண்டு கூலிக்காரர்களால் பயன்படுத்தப்பட்டது***

***20ஆம் நூற்றாண்டின் மத்தியம்***

***சணல்***

***2000-07260***

*இந்தச் சிறு பஞ்சுத்திண்டு, கனமான சுமைகளைக் கூலித் தொழிலாளர்கள் தூக்கும்போது முதுகு, தோள்பட்டைப் பகுதிகளைப் பாதுகாக்க கழுத்தைச் சுற்றி அணியப்படும். குறிப்பாக, இதனை அணியாவிட்டால் சொர சொரப்பான மரப்பெட்டிகளின் கூரான விளிம்புகள் காயம் ஏற்படுத்தும். மேலே உள்ள 'ஒன்றுபட்டு உழைத்தல்' தலைப்பில் அமைந்த புகைப்படத்தில் இது போன்ற ஒரு திண்டைத் தொழிலாளி பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.*

## 2.

***அரிசி மூட்டைகளைத் தூக்குவதற்கும் நகர்த்துவதற்கு பயன்படுத்தப்பட்டும் கொக்கி***

***1950கள்–1970கள்***

***மரம், உலோகம்***

***2016-00583***

***நியோ கிம் தேயின் அன்பளிப்பு***

*இந்தக் கொக்கிகள், 1930களில் குழந்தையாகச் சிங்கப்பூருக்கு வந்து, 1950க்கும் 1970க்கும் இடைபட்ட காலத்தில் கூலித்தொழிலாளியாகப் பணியாற்றிய நியோ கிம் தேயினுடையது. அவருடைய பணி சிங்கப்பூர் ஆற்றில் அரிசி சாக்கு மூட்டைகளை படகுகளிலிருந்து இறக்கி அவற்றைச் சேமிப்பு கிடங்குகளுக்குக் கொண்டு செல்வது. ஜோடியாகப் பயன்படுத்தப்படும் இவை கனமான சாக்கு மூட்டைகளை*

*நகர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும். மூட்டைகளைப் பரிசல்களிலிருந்து படகுகளுக்கு ஏற்றுவது, லாரிகளில் ஏற்றுவது, கிடங்கு வேலையாட்கள் சாக்கு மூட்டைகளை சேமிப்பது வரை விநியோகச் சங்கிலி முழுவதும் பணியாற்றிய அனைத்துத் தொழிலாளர்களும் இந்தக் கருவியை நம்பியிருந்தனர்.*

***சிங்கப்பூர் ஆற்றுப் பகுதியில் வேலையாட்கள் மூட்டைகளை ஏற்றி அவற்றைக் கொக்கிகள் பயன்படுத்திச் சீர் செய்கிறார்கள் 1966***
***தகவல், கலைச் சேகரிப்பு அமைச்சு , சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் உதவியுடன்***

***எல்கின் பாலத்திலிருந்து படகுத் துறையின் தோற்றம்***

***மேனார்டு ஓவன் வில்லியம்ஸ்***

***1937***

***மறுஉருவாக்கம்***

***2011-00943***

# 2300

## *பாகம் 3*
## *அஞ்சல் மற்றும் சுற்றுலா*

*1930களில் விமான அஞ்சல் அதிகமாகப் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்பு வரை ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக, கப்பல்கள் தான் சிங்கப்பூரின் தபால்களை அனுப்புவதற்கும் பெறுவதற்குமான வழியாக இருந்தன. அது வெளிநாட்டில் இருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள், வர்த்தக பங்காளிகள் ஆகியோருடன் தொடர்பு கொள்ள முக்கிய வழியாக இருந்தது. தபால்கள் மக்களுக்கு உலகத் தொடர்புக்கான மிகமுக்கிய இணைப்பை வழங்கியது. குறிப்பாக அது 1860களில் தந்திக் கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை உலகச் செய்திகள் சிங்கப்பூர் வருவதற்கும் உதவியது.*

*நீராவிக் கப்பல்கள் புழக்கத்திற்கு வருவதற்கு முன்புவரை, இங்கிலாந்து, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து கடிதங்கள், செய்திகள் கடல் வழியாக வரச் சில மாதங்கள் ஆகும். 1845 முதல் நீராவி கப்பல்கள் மாதம் ஒருமுறை சிங்கப்பூருக்குக் கடிதங்களைக் கொண்டுவந்தன. இது தொடர்பின் வேகத்தைக் குறிப்பிடதக்க அளவு மேம்படுத்தியது.*

*நீராவிக் கப்பல்களின் வசதியும் நம்பகத்தன்மையும் புதிய கவர்ச்சிகரமான இடங்களைப் பார்க்க விரும்பிய பணக்காரர்களது பொழுதுபோக்கு பயணங்களின் தேவை அதிகரிக்க வழி வகுத்தது. சிங்கப்பூரை நிறுத்தங்களு ள் ஒன்றாகக் கொண்ட பல அஞ்சல், சரக்குக் கப்பல்கள் விரைவில் அனைத்துலகச் சுற்றுலாப் பயணிகளுக்கு இடமளிக்கத் தொடங்கின.*

# 2301

## 1.

***சிங்கப்பூர் வழியாகக் கடல் இணைப்புகளைக் கொண்ட** கிழக்கு **ஆசிய** பயணிகள் **சேவைப்** பயணச் **சுவரொட்டி***

***1930-களில்***

***எட்மண்ட் பில்***

***ஆப்செட் லித்தோகிரஃப்***

***2017-00880***

*டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரிலிருந்துப் புறப்பட்டு தாய்லாந்து நாட்டின் பேங்காக் நகருக்குச் செல்லும் பயணிகள், சரக்கு கப்பலான யுட்லான்டியாவின் பயணப்பாதையைக் காட்டும் சுவரொட்டி. அது சூயஸ் கால்வாய் ,இலங்கை, சிங்கப்பூரை முக்கியத் துறைமுகமாகக் கொண்ட நீரிணை குடியேற்றங்கள் வழியாகச் சென்றது தெரிகிறது. அந்தக் கப்பல் கோபன்ஹேகனில் 1897-இல் ஹான்ஸ் நீல் ஆண்டர்சன் நிறுவிய கிழக்கு ஆசியாடிக் நிறுவனத்தால் (EAC) இயக்கப்பட்டது. அவர், பாங்காக்கில் தனது வர்த்தகத்தை நிலைநாட்டியதன் வழி ஆண்டர்சன் டென்மார்க்கிற்கும் ஆசியாவிற்கும் இடையே வர்த்தக பாதைகளின் முன்னோடியானார். EAC நிறுவனம் உலகின் முதல் டீசல் ஆற்றலில் இயங்கும் செலாண்டியா கப்பலை 1912-ல் தொடங்கியதால் புகழ் பெற்றது.*

## 2.

***சிங்கப்பூர் கெப்பல் துறைமுகத்தின் வழியாகச் செல்லும் அஞ்சல் கப்பல் போக்குவரத்து பாதையைக் காட்டும் டச்சு வரைபடம்***

***சுமார் 1920கள் –1930கள்***

***காகிதம்***

***2007-50832***

## 3.

***சிங்கப்பூர் வழியாக, பாம்பாயிலிருந்து (தற்போது - மும்பாய்) சீனாவிற்கு பயணிக்கும் P&O நீராவி கப்பலின் உட்புறம், வெளிப்புறம் ஆகியவற்றைக் காட்டும் அச்சுப்படம் - 'இல்லுஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ் பத்திரிக்கைச் செய்தி***

***சுமார்.1886***

***கையால் வண்ணம் தீட்டப்பட்ட மரச் செதுக்கல் படம்***

***2007-00822***

*P&O இயக்கிய இந்த நீராவிக்கப்பல் முதன்மையாக ஒரு சரக்குக் கப்பலாக இருந்தாலும் தபால் மூட்டைகளையும் கொண்டு சென்றது. அந்த அஞ்சல்கள் பெரும்பாலும் பயணிக்கும் வழியிலேயே வகைபடுத்தப்பட்டன. அக்கப்பல் சீலோன் (தற்போதைய இலங்கை), பினாங்கு, சிங்கப்பூர், ஹாங்காங் , ஷாங்காய் அஞ்சல் பாதையில் பயணித்தது. 1853-ல் P&O அஞ்சல் சேவை மாதத்திற்கு இருமுறையாக அதிகரிக்கப்பட்டது. சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டபின் சிங்கப்பூர் தென்கிழக்கு ஆசியாவைத் தாண்டிய பகுதிகளுக்கு முக்கிய அஞ்சல் விநியோக மையமாக மாறியது.*

## 4.

***எஸ்பிலனேடில் இருந்த தி எல் ஐரோப்பா ஹோட்டலுக்கு வெளியில் தபால்கள் கொண்டுவரும் ஐரோப்பிய கப்பல் "கிழக்கிந்திய தீவுக்கூட்டங்கள் வழியாக வந்தடைந்தவுடனான காட்சியைக் காட்டும் அச்சுப்படம்.***

***ஹீகோ வில்ஃபிரெடு பெடர்சென்***

***1902***

***கையால் வண்ணம் தீட்டப்பட்ட லித்தோகிரஃப்***

***XXXX-01420***

*டேனிஷ் கலைஞர் ஹூகோ வில்ஃபிரெடு பெடர்சென் வரைந்த இந்த அச்சுப்படம் தி எல் ஐரோப்பா ஹோட்டலுக்கு அஞ்சல் கப்பல் வருகையால் மகிழ்ந்து, ஒருவர் மீது ஒருவர் விழுந்து தங்கள் தபால்களைப் பெற முந்திக்கொண்டு செல்லும் மக்களைக் காட்டுகிறது. அஞ்சல் கப்பல்களின் வருகை அரசாங்க மலையின் (இப்போது ஃபோர்ட் கேனிங் மலை) மேலிருந்து கொடியேற்றி அறிவிக்கப்பட்டது. கப்பல் ஐரோப்பாவிலிருந்து வந்தால் சிவப்பு கொடியும், சீனாவிலிருந்து வந்தால் மஞ்சள் கொடியும் ஏற்றி அறிவிக்கப்பட்டது. இரவில் அஞ்சல் கப்பல் வந்தால் ஒரு துப்பாக்கி வெடித்து அறிவித்தனர். மக்கள் தங்கள் கடிதங்களைப் பெறுவதற்கும், அனுப்புவதற்கும் வசதியாகக் கப்பல் குறைந்தது 48 மணிநேரம் சிங்கப்பூரில் நிற்கும்.*

## 5.

***ஹாங்ஹாங்கிலிருந்து அனுப்பப்பட்ட அஞ்சல் உறைகள்***
***1864***
***காகிதம்***
***1996-01045***

*குடும்பத்தினர், நண்பர்களுடன் தொடர்புகொள்ள, வணிகத் தொடர்பிற்காக, பணம் கேட்பதற்காக, பணம் அனுப்புவதைச் சொல்வதற்காக, நினைவுச் சின்னங்களை அஞ்சல் அட்டைகளாகப் பகிர்ந்து கொள்வதற்காக எனப் பல்வேறு காரணங்களுக்காக அஞ்சல் அனுப்பப்பட்டன. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தாம் எழுத வேண்டியதை சொல்லச் சொல்ல எழுத்தர்கள் எழுதுவார்கள்.*

## 6.

***கெப்பல் துறைமுகத்தின் போர்னியோ சரக்கு கையாளும் துறையில் ஜெர்மானிய அஞ்சல் நீராவிக்கப்பல் நிற்கும் காட்சி அஞ்சல் அட்டை***

***1907***

***கொலொடைப் பழைய அச்சுமுறைப்படம்***

***2011-02896***

**7.**

***கெப்பல் துறைமுகத்தில் ஜெர்மானிய அஞ்சல் நீராவிக்கப்பல் நிற்கும் காட்சி -அஞ்சல் அட்டை***

***1906***

***கொலொடைப் பழைய அச்சுமுறைப்படம்***

***2014-00217***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலிருந்து (கேப்பிட்டா லேண்டு லிமிட்டெட் நிறுனத்தின் நன்கொடை)***

*சூயேஸ் கால்வாய் திறக்கப்பட்டதிலிருந்து ஜெர்மன் கப்பல்களுக்குச் சிங்கப்பூர் வந்துபோகும் துறைமுகமாக இருந்தாலும் கிழக்கு ஆசிய வர்த்தகர்கள் நம்பகமான, தொடர்ச்சியான கப்பல் சேவைகளை விரும்பினர். இதற்கு ஏற்ப ஜெர்மன் அரசு கடந்த 1885 ஆண்டு நார்டியூட்சர் லாய்டு (Norddeutscher Lloyd) என்ற கப்பல் நிறுவனத்திற்கு மானியத்துடன் இயங்கக்கூடிய இம்பீரியல் அஞ்சல் சேவை நீராவி கப்பல் (Imperial Mail Steamer Service) ஒப்பந்தம் ஒன்றை வழங்கியது. 1900களில் இந்த அஞ்சல் நீராவி கப்பல்களின் படத்தை க்கொண்ட அஞ்சல் அட்டைகள் சிங்கப்பூர்த் தபால்களாக அனுப்பப்பட்டன.*

**8.**

***சிங்கப்பூரிலிருந்து இங்கிலாந்திற்கு அஞ்சல் அட்டைகளாக அனுப்பப்பட்ட வர்த்தக சதுக்கத்தின் படம் - அஞ்சல் அட்டை***

***1906***

***கொலொடைப் பழைய அச்சுமுறைப்படம்***

***1999-02580***

**9.**

***இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் தபால் உறைகள்***

***சுமார் 1909***

***காகிதம்***

*1999-00580-001*

**10.**

***சிங்கப்பூரிலிருந்து தமிழ் நாட்டிற்கு(இந்தியா) அனுப்பப்பட்ட தபால் உறைகள் - அது வணிகக் கடிதமாக இருக்கலாம்.***

*1933*

***காகிதம்***

*1999-00590*

***தெருவோரச் சீனக் கடித எழுத்தர்***

***ஜூலியஸ் ஃப்ரண்டு***

*1934*

***மறுஉருவாக்கம்***

*2011-00927*

# 2302

## 1.

***வெப்பமண்டல ஹாலந்து, கோடையின் தீவுக்கூட்டம்: டச்சு கிழக்கு இந்திய தீவுகளுக்குச் செல்லும் பயணிகளுக்கான தகவல்" கோனின்கிலிக்கே பகேடவகார்டி மாச்சாப்ஜி (KPM)) கப்பல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது***

***1925***

***காகிதம்***

***2000-07219***

*டச்சு கிழக்கு இந்திய தீவுகள் (தற்போது இந்தோனீசியா) மேற்கத்திய பயணிகளுக்குக் கிழக்கின் பிரபலமான சுற்றுலாத் தளமாகும். அத்தகைய சுற்றுலாப் பயணிகளுக்குப் பயணத்திட்டம் பெரும்பாலும் சிங்கப்பூர் வழியாகச் சென்றதால் இது ஒரு முக்கியச் சுற்றுலாத்தளமாக மாறியது.*

## 2.

***வயலின் கலைஞர் "ஜோஸ்" வில்சனுடை கைப்பை***

***சுமார் 1930கள்***

***தோல், உலோகம்***

***2014-00190-001***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலிருந்து (கேப்பிட்டா லேண்ட் லிமிட்டெட் நிறுனத்தின் நன்கொடை)***

*அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரை சேர்ந்த வில்சன் ஓர் திறமையான வயலின் கலைஞர். அவர் 1930களில் எஸ் எஸ் பிசிடெண்ட் கார்ஃபீல்டு எனும் பயணிகள் கப்பலின் இசைக்குழு உறுப்பினராக ஆசியாவிற்குப் பயணம் செய்தார். அவரது பயணப்பெட்டியில் உள்ள சில பயண அடையாள ஒட்டுவில்லைகள் அவர் சென்ற இடங்களைப்*

*பிரதிபலிக்கின்றன. பின்னர், இந்தப் பயணப்பெட்டி சிங்கப்பூரின் ராஃபிள்ஸ் ஹோட்டலுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.*

**3.**

***உலகத்தைச் சுற்றி பயணிக்கும் கப்பல் குனார்டு வொய்ட் ஸ்டார் நிறுவனத்தின் RMS ஃபிரன்கோனியா கப்பலின் பதிவுப் புத்தகம்***

***7 ஜனவரி முதல் 29 மே 1936 வரை***

***காகிதம், உலோகம்***

***2014-00002***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலிருந்து (கேப்பிட்டா லேண்ட் லிமிட்டெட் நிறுவனத்தின் நன்கொடை)***

*பயணிகள் பதிவுப் புத்தகம் நியூயார்க்கில் தொடங்கி தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, இந்தியா, தென்கிழக்காசியா (சிங்கப்பூர் உட்பட), சீனா , ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் வழி உலகை சுற்றிய கடல் பயணத்தைப் பதிவு செய்கிறது. இது ஒரு வழிகாட்டியாகவும் சஞ்சிகையாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. பயணிகள் சிறு-கையேடுகளையும் புகைப்படங்களையும், அவர்களின் பயணத்தைப் பற்றிய குறிப்புகளையும் சேர்க்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**4.**

***இசெபெல்லா எல் பேர்டின் புத்தகம்- தி கோல்டன் கர்ஷினீஸ் அண்டு வே தீதெர்***

***காகிதம்***

***2010-01682***

*தி கோல்டன் கர்ஷினீஸ் (மலாய் தீபகற்பத்தின் பழங்காலப் பெயர்) புத்தகம் பல கண்டங்களைப் பெரும்பாலும் தனியாகப் பயணித்து ஆய்வு செய்த துணிச்சலான பெண் பயணியான எழுத்தாளர் எழுதியது. அதில் சிங்கப்பூரை பற்றிய எழுத்தாளர் பேர்டின் அனுபவம் இப்படி தொடங்கியது - “அங்கு வெப்பமாக இருந்தது - மிக வெப்பமாக*

*இருந்தது!- ஆனால் திணரடிக்கும்படி இல்லை, வெப்பமண்டலத்திற்கே உரிய சுவை மிகுந்த வண்ணமயமான பழங்கள் இங்கே இருந்தன.”*

## 5.

***கிழக்கு கடல்கள் வழி ஒரு சொகுசுக் கப்பல்: பயணிகள் தூரகிழக்கில் பார்க்க வேண்டிய ஆர்வமான பொருள்கள்பற்றிய கையேடு -A. G. பிலேட்***

***1906***

***காகிதம்***

***2014-00039***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலிருந்து (கேப்பிட்டா லேண்ட் லிமிட்டெட் நிறுனத்தின் நன்கொடை)***

*20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கடல் வழியாக நீண்ட பயணங்கள் பிரபலமடைய தொடங்கியதும், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருக்கும் வருங்கால சுற்றுலாப் பயணிகள் புதிய நாடுகளைப் பற்றி அறிய ஏதுவாக வழிகாட்டிப் புத்தகங்களின் வெளியீடுகள் பெருகின. இந்த வழிகாட்டியில் சிங்கப்பூர் பற்றிய தனிப்பட்ட அத்தியாயமும் விளக்கப்படங்களும் அடங்கும்.*

## 6.

***ஒரு உலகக் கப்பலின் நினைவுக் குறிப்புகள்-எழுதியவர் ஃபுளோரா மற்றும் மார்டின் டீமுத்***

***1931–1932***

***காகிதம்***

***2014-00046***

***ராஃபிள்ஸ் ஹோட்டல் அருங்காட்சியகத்தின் சேகரிப்பிலிருந்து (கேப்பிட்டா லேண்ட் லிமிட்டெட் நிறுவனத்தின் நன்கொடை)***

*ஒருங்கிணைந்த தகவல் வரைகலை விளக்கப்படங்கள், எழுத்துக்கள் ஆகியவை அடங்கிய இந்தத் தொகுக்கப்பட்ட பயண நினைவுகள் முதல் உலகச் சுற்றுப் பயணத்தில் இருந்த "பிரிட்டனின்" ("Empress of Britain") என்ற கப்பலில் பயணித்த இரண்டு கலைஞர்களின் அனுபவங்களைப் படம்பிடித்துக்காட்டுகிறது. அவை பயணிகள் நினைவுப் பொருள்களாக வைத்திருப்பதற்காகப் படியெடுக்கப்பட்டன. அவற்றில் பயண நாட்களின் விபரங்களோடு என்ன நடவடிக்கை நடந்தது என்ற விபரமான குறிப்புகள், ஒவ்வொரு இடத்தைப் பற்றிய உண்மைகளும் இருக்கின்றன.*

## 7.

***உலகை சுற்றி ஓர் பயணம் - ஜார்ஜ் மோர்லையின் எழுதியது***

***1886***

***காகிதம்***

***2009-01630***

*19ஆம் நூற்றாண்டில், பணக்கார பயணிகள் தங்களின் அனுபவங்களைப் பகிரும் நோக்கில் பயணக் குறிப்புகளலெழுதத் தொடங்கினர். இந்தப் புத்தகத்தில், அமெரிக்க எழுத்தாளர் ஜார்ஜ் மோர்லையின் அழகிய இடங்களைப் பார்ப்பதற்கும். அவரின் உடல் நலத்தை மேம்படுத்திகொள்ளவும் என இரு நோக்கங்களுக்காகத் தனது உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டதாக விளக்குகிறார். சிங்கப்பூரின் வானிலை "குறிப்பிடத் தக்க அளவு ஆரோக்கியமானது" என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் தங்கியிருந்த தி எல் ஐரோப்பா ஹோட்டலில் , பல்லிகள், எறும்புகள், கொசுக்கள் போன்ற பூச்சிகள் தன்னைப் பெரிதும் தொந்தரவு செய்ததாகவும் புலம்பியுள்ளார்.*

## 8.

***தலைமை கப்பல் ஊழியர் C. Q. G. கிராபோர்டுக்கு ரஷ்யாவின் சார்விட்ச் நிக்கோலஸ் நினைவுப் வழங்கிய சிகரெட் பெட்டி***

***1891***

**வெள்ளிமுலாம், பட்டைதீட்டப்பட்ட நீலக்கல், வைரம்**

***2022-00363***

*இந்த சிகரெட் பெட்டி, சார்விட்ச் நிக்கோலஸ் II, தனது பெரும் பயணத்தின் ஒருபகுதியாக 1891-ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு வந்தபோது அக்கப்பலின் தலைமைக் கப்பல் ஊழியர் C. Q. G. கிராபோர்டுக்கு வழங்கியது.*

*விலாடிவாஸ்டாக்கில் டிரன்ஸ்-சைபீரியன் ரயில்வேயின் கிழக்கு பிரிவின் கட்டிடவேலைகளை துவக்கி வைக்க, காட்சினா (Gatchina) என்ற செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கு அருகில் உள்ள ஊரிலிருந்து புறப்பட்டு பயணித்தபோது சிங்கப்பூருக்கு வருகை தந்தார். ரஷ்யாவின் எதிர்கால பேரரசரான அவரின் பெரும் பயணத்தில் அவர் சிங்கப்பூர் வருகையளித்தது, சிங்கப்பூர் 19 நூற்றாண்டின் முக்கிய கடல்சார் மையமாகப் பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த சிகரெட் பெட்டி தலைமை ஊழியரின் முக்கியத்துவத்தையும், கப்பல் போக்குவரத்து நிர்வாகம், வர்த்தக ஊக்குவிப்பு ஆகியவற்றில் அவரின் பங்கையும் உயர்த்திக்காட்டுகிறது.*

**புதிய துறைமுகத்திலிருந்து (பின்னர் - கெப்பல் துறைமுகம்) புறப்படும் ஒரு அஞ்சல் கப்பல்**

***C. J. கிலிங்ரோத்***

***1907***

**மறுஉருவாக்கம்**

***XXXX-14796-004***

# 2400

## *பாகம் 4*
## *நீர்முனை உருமாற்றங்கள்*

*சிங்கப்பூர் ஆறு மற்றும் அதன் கரைகள் 20ஆம் நூற்றாண்டு முழுவதும் வியக்கத்தகு மாற்றங்களுக்கு உள்ளானது. அவை நாட்டின் வேகமான வளர்ச்சி, பொருளாதார முன்னுரிமை மாற்றங்களைப் பிரதிபலித்தன. 1900களின் தொடக்கத்தில் பரபரப்பான வர்த்தகப் பெரு வழியாக இருந்த ஆற்றில், முக்கிய பலசரக்கு பொருள்களைச் சுமந்திருக்கும் படகுகள் (Bumboats) கூட்டமாக நின்றன. அதன் கரைகளில் கடைவீடுகளும் பொருள் கிடங்குகளும் வரிசையாக இருந்தன. நூற்றாண்டின் நடுப்பகுதியில் சிங்கப்பூரின் நிதி, சுற்றுலாத் துறைகளின் வளர்ச்சியுடன் இணைந்து பெரிய அலுவலகங்கள், வங்கிகள், தங்கும் ஹோட்டல்கள் வரத் தொடங்கின.*

*நகர்ப்புற மறுசீரமைப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக, 1970களில் நீர்முனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தொடங்கின. 1977 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் லீ குவான் யூ ஆற்றின் பத்து ஆண்டுகால மிகப்பெரிய சுத்திகரிப்பு நடவடிக்கையைத் தொடங்கினார். அதன்கீழ், படகுகள், வீதி உணவங்காடிகள், புறம்போக்குக் குடிசைகள், பன்றி வளர்ப்பு போன்ற மாசுபாடு மிகுந்த தொழில்கள் ஆகியவை படிப்படியாக அகற்றப்படுவதும் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதும் நிகழ்ந்தன.*

*1990களுக்குள், சிங்கப்பூர் ஆறு ஒரு துடிப்பான வாழ்வியலுடன், சுற்றுலாதலமாக மாறிவிட்டது. போட் கீ, கிளார்க் கீ போன்ற வரலாற்றுப் பகுதிகள் புத்துணர்ச்சியூட்டப்பட்டன, பழைய கடைவீடுகள், உணவகங்களாகவும், மதுபானக்கூடங்களாகவும், பொழுதுபோக்கு இடங்களாகவும் மாற்றப்பட்டன. மெரினா பே, எஸ்பிலனேட் போன்ற*

*புதிய மேம்பாடுகள், மாநகர் உருவாக்கம், வானுயர் கட்டடங்கள் ஆகியவை நீர்முனை பகுதியை உலகம் அடையாளம் காணக்கூடிய பிரபல வடிவமைப்புகளாக மாற்றிவிட்டது.*

## 2401

### 1.

***ஆற்றின் முகத்துவாரம், சிங்கப்பூர்***

***கேதரின் கே மௌட்***

***சுமார் 1930***

***லித்தோகிராஃப்***

***2010-01547-010***

### 2.

***சிங்கப்பூரின் நீர்முகப்பின்(waterfront) தோற்றம்***

***கேதரின் கே மௌட் (Katherine Kay-Mouat)***

***சுமார் 1930***

***லித்தோகிராஃப்***

***2010-01547-012***

### 3.

***துறைமுகம், சிங்கப்பூர்***

***கேதரின் கே மௌட்***

***சுமார் 1930***

***லித்தோகிராஃப்***

***2010-01547-015***

*இந்த நீர்முகப்புப் பகுதிகளின் தோற்றத்தைக் காட்டும் 14 லித்தோகிராஃப் படங்கள் சிங்கப்பூரின் தேசிய அடையாளங்கள், இடங்களின் படங்கள் கேதரின் கே மௌட்  என்ற பெண் கலைஞர் வரைந்தவையாகும். அவர் 1921 முதல் 1935 வரை சிங்கப்பூரில் வசித்தார். இவை சிங்கப்பூரின் கடல் அணுகுமுறையையும், சிங்கப்பூர் நதி மற்றும் கெப்பல் துறைமுகம் ஆகிய இரண்டு முதன்மை வர்த்தக இடங்களையும் படம்பிடித்துக் காட்டுகிறது.*

**4.**

***சிங்கப்பூர் உப்பங்கழியிலிருந்து கடல் நீர்முனை***

***லீ சௌ லிம்***

***1963***

***ஜெலாடின் வெள்ளி அச்சுப்படம்***

***2006-00076***

*உள்ளூர்ப் புகைப்படக் கலைஞர் லீ சோ லிம் கோலியர் படகுத்துறையில் 1963 இல் இருந்த பெரும்பான்மையான கட்டிடங்களின் ரம்யமான காட்சியைப் படம் பிடித்தார். 1970களில் அந்தப்பகுதி நிதி மையமாகத் துரித வளர்ச்சி அடைவதற்கு முன்பான தோற்றம் அது. சிங்கப்பூரின் அடையாளமாகப் பார்க்கப்பட்ட பல கட்டிடங்கள் நவீன வானுயர் கட்டிடங்களாக மாற்றப்பட்டன. அவற்றில் ஷெல் மாளிகை (தற்போது கோலியர் படகுத்துறை மையம்), பெருங்கடல் கட்டிடம்-Ocean Building (தற்போது பெருங்கடல் நிதி மையம்- Ocean Financial Centre), ஹாங்ஹாங் ஷங்காய் வங்கி கட்டிடம் the Hongkong and Shanghai Bank Building (தற்போது 21 கோலியர் படகுத்துறை - 21 Collyer Quay) ஆகியவை அடங்கும்.*

***சிங்கப்பூர் ஆற்றின் வான்வழிக் காட்சி***

***c.1970***

***மறு உருவாகம்***

***2008-04096***

***படகுத் துறையின் ரம்யமான தோற்றம்***

***1900 தொடக்கம்***

***மறு உருவாக்கம்***

***1999-00369-005***

***சிங்கப்பூர் ஆறு***

***Late 19ஆம் நூற்றாண்டு பிற்பகுதி முதல்  20ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை***

***மறு உருவாக்கம்***

***2000-06806***

***செல்வி இங் சீ சன் நன்கொடை***

# 2402

***“தூய தண்ணீர், புதிய தொடக்கம்”***
***காணொளி (3 நிமிடங்கள் 42 நொடிகள்)***
***2025***

*தொழில் செயல்பாடுகளாலும், வேலைகளாலும் மாசடைந்த சிங்கப்பூர் ஆறு, மகிழ்ச்சியான பொழுதுபோக்கு மையமாக மாறிய பயணத்தைக் காணுங்கள். 1977ஆம் ஆண்டில், முன்னாள் பிரதமர் லீ குவான் யூ அவர்கள் அழுக்கான ஆற்றைப் பத்து ஆண்டுகளுக்குள் தூய்மையாக்கும் சவாலைக் கையிலெடுத்து அதற்கான ஒரு தீர்க்கமான திட்டத்தையும் வெளியிட்டார்.*

*ஆவணப் பொருட்களுக்கு நன்றி:*

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட், தகவல் கலைகள் அமைச்சின் தொகுப்பு, வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்*

**பழைய இலகுரகப் படகுகளின் சிதைவுகள் சிங்கப்பூர் ஆற்றிலிருந்து அகற்றப்படுதல்**
***1977***

*ஆதாரம்: தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் (The Straits Times, SPH ஊடக நிறுவனம்)*
*© SPH Media Limited. அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டது*

## 2403

***ரம்யமான சிங்கப்பூர்***

***ஸ்டீஃபன் வில்ட்ஷயர்***

*20 ஜூலை 2014*

***பென்சில் மற்றும் மையால் வரையப்பட்ட காகித ஓவியம்***

***2015-00155***

*ஆங்கிலேயக் கலைஞர் ஸ்டீஃபன் வில்ட்ஷயர் , ஒரு மணி நேர ஹெலிகாப்டர் பயணத்திற்கு பிறகு, சிங்கப்பூரின் நகரக் காட்சியை முழுமையாக நினைவில் வைத்து உருவாகிய ரம்ய காட்சி. அவர் முதன்முறையாக நாட்டிற்கு வந்திருந்தபோதிலும், நகர அமைப்பை ஆளுமையுடன் காட்சிப்படுத்தினார். அவர் இப்படத்தில் சிங்கப்பூர் ஆறு, மெரினா விரிகுடா ஆகியவற்றுடன் அடையாளச் சின்னமாக மாறிய வானுயர் கட்டிடங்களையும் வரைந்துள்ளார்.*

*தொடர்புத்திறன் குறைபாடுள்ள கலைஞரான (autism spectrum), வில்ட்ஷயரின் செயல் அவரின் அசாதாரணத் திறமையைக் காட்சிப்படுத்துகிறது. அத்துடன் இவரது படத்தின் பிரதிகள் விற்கப்பட்டு தொடர்புத்திறன் குறைபாட்டுக்கான வளமை நிலையத்திற்கும் (Autism Resource Centre), அதிபர் சவால் (President's Challenge) நிகழ்ச்சிக்கும் நிதி திரட்டப்பட்டது, தொடர்புத்திறன் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது .*

# 3000

## *அத்தியாயம் 3*
## *விரிவடையும் எல்லைகள்*

*சிங்கப்பூர் எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளது? 1819ஆம் ஆண்டில் ஆங்கிலேய கிழக்கு இந்திய நிறுவன (EIC) குடியேற்றமாக நிறுவப்பட்டதிலிருந்து, சிங்கப்பூரின் நிலப்பரப்பு சுமார் 25 விழுக்காடு வளர்ந்துள்ளது. நிலமீட்பு மூலம் நிலப்பரப்பளவு 578 சதுர கிலோமீட்டரிலிருந்து 736 சதுர கிலோமீட்டராக அதிகரித்துள்ளது.*

*நிலப்பற்றாக்குறையைத் தொடர்ந்து எதிர்கொள்கின்ற ஒரு சிறிய தீவிற்கு, இத்தகைய விரிவாக்கம் சிங்கப்பூரின் வளர்ச்சி வாய்ப்புகளை பெருக்கி, கடலுடன் உள்ள நமது தொடர்பை மறுவடிவமைத்துள்ளது.*

*EIC குடியேற்றமாக நாட்டின் ஆரம்ப நாட்களில் சிங்கப்பூர் நதியில் நிலமீட்புடன் இவ்விரிவாக்கம் தொடங்கி, காலனித்துவ காலம் முழுதும் தெலுக் ஆயர் முதல் காலாங் வரை பரவியிருந்த நீர்முகப்புப் பகுதியில் நிலமீட்பு தொடர்ந்தது. எவ்வாறாயினும் 1965ல் சுதந்திரம் பெற்ற பிறகே சிங்கப்பூரின் நிலப்பரப்பை அதிகமாக்குவதற்கான நிலமீட்பு முயற்சிகள் கணிசமான அளவில் அதிகரித்தன.*

*சிங்கப்பூர் தன் நில அடையாளத்தை மறுவடிவமைக்கும் இப்பயணத்தில், முன்பைவிட இன்று இன்னும் முக்கியக் கேள்வியாக "இக்காலத்திலும் எதிர்காலத்திலும் சிங்கப்பூரின் நிலத்தை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்தலாம்?" என்பது தொடர்கிறது.*

# 3100

## *பாகம் 1*
## *ஆரம்பகால சிங்கப்பூரை அளவீடு செய்தல்*

*1819ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் நீர் நிலைகள், கடற்கரைகள் மற்றும் உள்பகுதிகள் எந்த அளவிற்கு அறியப்பட்டு பதிவுசெய்யப்பட்டன? சிங்கப்பூர் நதியைச் சுற்றியுள்ள துறைமுகக் குடியேற்றத்தை மேம்படுத்தியபோது 1819க்கு பிந்தைய தசாப்தங்களில் ஆங்கிலேய கிழக்கு இந்திய நிறுவனம் (EIC) தீவின் துறைமுகம், கடற்கரை, நிலப்பரப்பை வரைபடமாக்கும் தொடக்க அளவீடுகளையும் நிறுவியது.*

*இந்த அளவீடுகள் முதலில் EIC அதிகாரிகளால் நடத்தப்பட்டன. பின்னர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பொதுப் பணிக் கண்காணிப்பாளர்கள், நில அளவையர்களால் தொடரப்பட்டது. இவ்வாய்வுகளின் மூலம் சேகரிக்கப்பட்ட, வரைபடமாக்கப்பட்ட தகவல்கள் ஆரம்பகால சிங்கப்பூர் நகரத்தின் திட்டமிடலுக்கு மிக முக்கியமானதாய் அமைந்தன.. அது உள்ளூர் மக்களின் நலன்கள் பாதிக்கப்படும் அளவுக்கு இருந்தாலும் கூட இது சிங்கப்பூரின் நிலத்தையும் அதைச் சூழ்ந்த கடல்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பெரிய காலனித்துவ முயற்சியின் ஒரு பகுதியாக இருந்தது.*

## 3101

### 1.

***அருகிலுள்ள நீர்வழிகளுடன் சிங்கப்பூர்த் துறைமுகங்கள் , சாலைகள்***

***1827 (1845 ஆம் ஆண்டின் சேர்க்கைகளுடன்)***

***காகிதத்தில் கல்லச்சு***

***XXXX-01999***

*1819ஆம் ஆண்டு ராஃபிள்ஸுடன் சிங்கப்பூருக்கு வந்தவரான 'பம்பாய் மெரீன்' (Bombay Marine) அதிகாரி கேப்டன் டேனியல் ராஸ், 1827ஆம் ஆண்டில் சிங்கப்பூர் நீரிணையின் (Singapore Straits) அதிகாரப்பூர்வ நில அளவீட்டை மேற்கொண்டார்.*

*1845ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த பிரிட்டிஷ் அட்மிரால்டி வரைபடம் (British Admiralty Chart), ராஸ் மேற்கொண்ட அளவீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அரசாங்க நில அளவையாளர் ஜான் டர்ன்புல் தாம்சன் 1842இல் மேற்கொண்ட கூடுதல் அளவீடுகளிலிருந்து புதிய உள்ளீடுகளும் இதில் உள்ளன.*

*இவ்வரைபடம், தென் சிங்கப்பூரின் கடற்கரைகளில் உள்ள ஆழமான பகுதிகள், நீருக்கீழ் நிலவமைப்புகள், கடல்நீரடிப்பாறைகள், சேற்றுத்திட்டுகள், குறைந்த நீர்மட்டத்தில் வெளியே காணப்படும் மணல் பகுதிகள ஆகியவற்றை விரிவாகக் குறிக்கிறது.*
*மேலும், புலாவ் பிரானி (Pulau Brani), பிளக்காங் மாத்தி (இன்றைய சென்டோசா) போன்ற தெற்கிலுள்ள தீவுகள் பற்றிய விவரங்களையும் இதில் காணலாம்.*

## 2.

***சிங்கப்பூர் தீவு, அதன் உட்பிரதேசங்களின் வரைபடம்***

*1898*

***கையால் வண்ணம் பூசப்பட்ட கல்லச்சு***

*XXXX-02085*

*இந்த விரிவான வரைபடம் 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திற்குள் சிங்கப்பூர் கண்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. தீவு முழுவதுமுள்ள முக்கியச் சாலைகள் சிவப்பு நிறத்தில் வரையப்பட்டுள்ளன. ரயில் தடங்களுக்கான திட்டங்கள் செம்மஞ்சள் நிறத்தில் குறிக்கப்பட்டுள்ளன – இவை ஐந்து ஆண்டுகள் கழித்து 1903 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. பச்சை நிறத்துடன் தோன்றும் பகுதிகள், 1883 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் பூமலையின் கண்காணிப்பாளராக இருந்த நத்தானியல் கான்ட்லி முதன்மைக் காடுகளின் அழிவை பற்றி வெளியிட்ட அறிக்கையின் பின்னணியில் காப்பகங்களாக ஒதுக்கப்பட்ட காட்டுப் பகுதிகளைக் குறிக்கின்றன.*

*இந்த வரைபடம் 1903 முதல் 1905 வரை ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில்மென்ட்ஸ் (Straits Settlements) படைகளின் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜெனரல் ஆர்தர் டோர்வர்டுக்குச் சொந்தமானதாகும் என்பது இராணுவக் கண்ணோட்டத்திலிருந்து இவ்வரைபடத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.*

## 3102

***சிங்கப்பூரில் இடையிலேயே குறுக்கீடுகண்ட சாலை அளவீடு***

***(Unterbrochene Straßenmessung auf Singapore)***

***ஹெயின்ரிச் லோய்டமன் உருவாக்கிய படத்தை அடிப்படையாகக் கொண்டது***

***c.1865***

***காகிதத்தில் கையால் வண்ணம் பூசப்பட்ட செதுக்கு வேலைப்பாடு***
***2000-06610***

*ஜார்ஜ் டிரோம்கோல்ட் கோல்மன் 1822 ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்கு வந்தார். அங்கு பல ஆரம்பகாலக் கட்டிடங்களின் தலைமை வடிவமைப்பாளராக இருந்தார்.*
*1829 ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் முதல் நிலவரைபட ஆய்வை மேற்கொண்ட பின்னர், 1833 ஆம் ஆண்டில் முதலாவது அரசாங்க பொதுப் பணிகள் கண்காணிப்பாளராக (Government Superintendent of Public Works) நியமிக்கப்பட்டார்.*

*இந்த அச்சு, 1865 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஜெர்மானிய செய்தித்தாள் Die Gartenlaube-இல் இடம்பெற்றதாகும். இது 1835 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுவாரசியமான ஒரு நிகழ்வை விவரிக்கிறது. அதில், கோல்மனும் அவருடைய உள்ளூர் உதவியாளர்களும் அடர்ந்த சதுப்புநிலம் கொண்ட காடொன்றில் புதிய சாலை அமைக்க முற்பட்டபோது, ஒரு புலி அவர்களைத் தாக்கும் அதிர்ச்சிகரமான தருணம் படைக்கப்படுகிறது.*
*செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் கோணங்களை அளவிடுவதற்காக கோல்மன் வைத்திருந்த முக்கிய நில அளவீட்டுக் கருவியான தியோடொலைட் (Theodolite) மீது புலி மோதும் காட்சி சித்திரிக்கப்படுகிறது.*

## 3103

### 1.
***சிங்கப்பூர் பிரிட்டிஷ் குடியேற்றத்தின் திட்டம் – கேப்டன் ஃபிராங்க்லின், லெஃப்டினன்ட் ஜாக்சன்***

***சிங்கப்பூர் நகரத் திட்டம் – லெஃப்டினன்ட் ஜாக்சன்***

***1828ல் வெளியிடப்பட்டது***

***காகிதத்தில் பொறிக்கப்பட்ட வரைபடம்***

***XXXX-02072***

*பிரிட்டிஷ் கிழக்கு இந்தியா நிறுவனத்தின் 1ஆம் பெங்கால் குதிரைப் படையின் கேப்டன் ஜேம்ஸ் ஃபிராங்க்லின், 1822ஆம் ஆண்டில் சிங்கப்பூரின் முதல் துல்லியமான வரைபடத்தை உருவாக்கினார். அதே ஆண்டில், பெங்கால் பீரங்கிப் படையில் பொது நில அளவையராகவும் உதவிப் பொறியாளராகவும் பொறுப்பு வகித்த லெஃப்டினன்ட் ஃபிலிப் ஜாக்சன், நகரத் திட்டக் குழுவுக்கு சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் விடுத்த உத்தரவுகளின் அடிப்படையில் சிங்கப்பூர் நகரத் திட்டத்தை உருவாக்கினார்.*

*வெவ்வேறு இனத்தாருக்குத் தெளிவாக ஒதுக்கப்பட்ட பகுதிகளோடு ஒழுங்குமிக்கக் குடியேற்றமாக சிங்கப்பூரை வடிவமைக்கும் ராஃபிள்ஸ்ஸின் நோக்கத்தை இத்திட்டம் பிரதிபலித்தது.*

### 2.
***சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் நகரத் திட்டக் குழுவுககு எழுதியக் கடிதம்***

***4 நவம்பர் 1822***

***காகிதத்தில் மை எழுத்து***

***XXXX-02674-002***

*"மாணியர்களே, – சிங்கப்பூரில் ஏற்கெனவே உள்ளூர் மக்கள்தொகை அதிகமாகச் செறிந்துள்ளது. அது அன்றாடம் வேகமாகவும் அதிகரித்துவருகிறது. இதனால், மக்கள் தங்குவதற்கான வசதிகளை ஏற்பாடுசெய்யும்போது இடத்தின் சூழலையும் சமூகத்தினரின் வெவ்வேறு பிரிவினரின் தனிப்பட்ட பண்புகள், பழக்கவழக்கங்களையும் கருத்தில் கொண்டு நகரின் எதிர்கால நிர்வாகத்துக்கான முறையான திட்டமிடல் அவசியமாகிறது."*

*இது, சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் கேப்டன் சார்லஸ் எட்வர்ட் டேவிஸ், சாமுவேல் ஜார்ஜ் பொன்ஹேம், அலெக்ஸாண்டர் லாரி ஜான்ஸ்டன் ஆகிய நகரத் திட்ட குழு உறுப்பினர்களிடம் எழுதிய கடிதத்தின் தொடக்க வரியாகும்.*
*சிங்கப்பூருக்கான நகரத் திட்டத்தின் நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வையிட 1823 ஆம் ஆண்டில் ராஃபிள்ஸ் இக்குழுவை அமைத்தார்.*

*சிங்கப்பூரை "முக்கியத்துவம் வாய்ந்த, மிகப்பெரிய இடமாக" உருவாக்குவதை அவர் இலக்காகக் கொண்டிருந்ததால் இத்திட்டங்கள் அவசியம் என அவர் கருதினார். அரசாங்க மற்றும் வர்த்தக பயன்பாட்டிற்கான நில ஒதுக்கீடு, இனத்திற்கேற்பவும் அவ்வப்போது மாகாணத்திற்கு ஏற்பவும் மக்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட குடியிருப்புகளின் உருவாக்கம் ஆகியவையே அவரது திட்டத்தின் ஆகக் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.*

## 3.
***சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் அலெக்ஸாண்டர் லாரி ஜான்ஸ்டனுக்கு எழுதிய கடிதம்***
***மே 1823***

***காகிதத்தில் மை எழுத்து***

***XXXX-02481***

*"நீங்கள் உங்கள் வளாகத்தின் ஆட்சேபனைக்குரிய பகுதியில் செங்கல் கட்டடத்தைக் கட்டிவருவதைக் கண்டறிய நான் வருந்துகிறேன். உங்களை இப்பணிகளைத் தொடராமல் நிறுத்தும் கட்டாயம் எனக்கு உள்ளது."*

*இந்த குறுகிய கடிதத்தில், சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ், அலெக்ஸாண்டர் லாரி ஜான்ஸ்டனை அவரது வளாகத்தில் ஒரு செங்கல் கட்டடம் எழுப்பியதற்காகக் கடுமையாக விமர்சிக்கிறார்.*

*ஜான்ஸ்டன், 1820 ஆம் ஆண்டில் A. L. Johnston and Co. என்ற வர்த்தக நிறுவனத்தை நிறுவிய சிங்கப்பூரின் ஆரம்பக் குடியேறிகளில் ஒருவராக இருந்தார். மேலும், ராஃபிள்ஸின் நம்பிக்கைக்குரிய, நெருங்கிய நபராக இருந்த அவரை ராஃபிள்ஸ் 1822 அக்டோபரில் நகரத் திட்ட குழுவின் உறுப்பினராக நியமித்தார்.*

*1823 தொடக்கத்தில், ராஃபிள்ஸ் தனது நகரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். ஜான்ஸ்டனின் கட்டடத் திட்டம், ராஃபிள்ஸின் திட்டங்களுக்கு முரண்பட்டதாக இருந்திருக்கலாம். இருப்பினும், அவர்கள் திட்டமிட்ட சந்திப்பிற்குப் பிறகு ஜான்ஸ்டன் கட்டுமானப் பணிகளை நிறுத்தினாரா என்பது தெரியவில்லை.*

## 3104

### 1.

***சிங்கப்பூர் தீவின் வரைபடம்***

***1830ல் வெளியிடப்பட்டது***

***காகிதத்தில் கையால் வண்ணம் பூசப்பட்ட செதுக்கு வேலைப்பாடு***

***2014-00111***

***கேபிடாலாண்டின் பரிசு***

*இந்த சிங்கப்பூர் தீவின் வரைபடம், லேடி சோஃபியா ராஃபிள்ஸின் Memoir of the Life and Public Services of Sir Thomas Stamford Raffles என்ற நூலில் 1830ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.*

*இது கேப்டன் ஃபிராங்க்லினின் 1822ஆம் ஆண்டுத் திட்டத்தை நெருக்கமாகப் பின்பற்றி உருவாக்கப்பட்டாலும், தீவின் கடற்கரைப் பகுதிகளிலும் துறைமுகத்துக்கு அருகிலுள்ள குன்றுகளிலும் உள்ள தாவரங்கள் குறித்த கூடுதல் விவரங்களை கொண்டுள்ளது. மேலும், சிங்கப்பூர் நீரிணை (Straits of Singapore) பற்றிய விரிவாக்கப்பட்ட கண்ணோட்டமும் இதில் இடம்பெற்றுள்ளது.*

### 2.

***ஜே. டி. தாம்சன் உருவாக்கிய ‘சிங்கப்பூர் நகரத் திட்டம்’***

***1843***

***கையால் வண்ணம் பூசப்பட்ட கல்லச்சு***

***XXXX-02115***

*இது சிங்கப்பூரில் அச்சிடப்பட்ட தாக அறியப்படும் முதல் வரைபடமாகும். 1843 ஆம் ஆண்டில் அரசாங்க நில அளவையாளர் ஜான் டர்ன்புல் தாம்சன் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டது.*

*இந்த வரைபடம், நகரத்தின் உள் பகுதிகளை நோக்கிய விரிவாக்கம், சாலைப் பணிகள், தீவின் பல்வேறு குன்றுகளின் சரிவுகள், உயரங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. மேலும், 1843 ஆம் ஆண்டளவில் சிங்கப்பூரின் மக்கள் தொகை 50,000த்தை எட்டிவிட்டதை இவ்வரைபடம் குறிக்கிறது.*

*இவ்வரைபடம் மத்ராஸ் பொறியியலாளர்களில் (Madras Engineers) ஒருவரான கேப்டன் ஜேம்ஸ் பெஸ்ட் என்பவரின் உடமையாக இருந்தது. அவர் 1843 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் இருந்தபோது, நகரம் மற்றும் துறைமுகத்திற்கான ராணுவக் கோட்டைகளின் உருவாக்கம் குறித்து முன்மொழிந்திருந்தார்.*

# 3105

## 1.

***ஆங்கஸ் சுதர்லாண்ட் பயன்படுத்திய பயண மேசை, மைதொட்டி மற்றும் முத்திரை***
*19ஆம் நூற்றாண்டின் இறுதி*
***மரம், தோல், கண்ணாடி, உலோகம்***
*2021-01169-001 to 005, 006, 092 and 093*

*இந்த பயண மேசை 1890 முதல் 1894 வரை சிங்கப்பூரில் பணியாற்றிய காலனித்துவ நில அளவையாளர் ஆங்கஸ் சுதர்லாண்டிற்குச் சொந்தமானது. சிங்கப்பூருக்கு வருவதற்கு முன்பு, சுதர்லாண்ட் ஆறு ஆண்டுகளுக்கு சைப்ரஸில் பணியாற்றினார், அங்கு அவர் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியும் காலனித்துவ நிர்வாகியுமான லார்ட் கிட்சனருடன் மத்தியதரைக் கடல் தீவை வரைபடமாக்கினார். முதல் உலகப்போர் ஆள்சேர்ப்பு விளம்பரங்களில் இடம்பெற்றதற்காகப் பெரிதும் அறியப்பட்ட கிட்சனர், 1886 ஆம் ஆண்டு சுதர்லாண்ட் தனது பணியை முடித்துக்கொண்டு சைப்ரஸை விட்டு வெளியேறியபோது இந்த பயண மேசையை பரிசளித்தார்.*

*சிங்கப்பூரில் சுதர்லாண்ட் பீச் ரோட்டில் வசித்தார். அங்கு அவர் ஒரு நில அளவையாளர் பயிற்சி பள்ளியில் மாணவர்களைப் பயிற்றுவித்தார். காலனியின் வளர்ச்சியுடன் நில அளவையாளர்களின் தேவை அதிகரித்ததால், அப்பள்ளியைத் தொடங்க காலனித்துவ பொறியாளர் ஹென்றி மெக்கல்லம் பரிந்துரைத்திருந்தார். ஆரம்பகட்டமாக, பள்ளியில் 20 மாணவர்கள் சேர்க்கப்படுவதே நோக்கமாக இருந்தது. அவர்கள் காலை நேரங்களில் வரைதல் மற்றும் கணக்கீடுசெய்தல் போன்ற பாடங்களைப் பயில்வதுடன், பிற்பகலில் வெளிப்புறப் பணிகளில் ஈடுபடுவார்கள் என திட்டமிடப்பட்டது.*

## 2.

***ஆங்கஸ் சுதர்லாண்ட் மற்றும் அவரது குடும்பத்தின் அலமாரிப் புகைப்படம்***

***19ஆம் நூற்றாண்டின் இறுதி***

***ஆல்புமன் அச்சு, அட்டையில் பொருத்தப்பட்டது***

***2021-01169-023***

## 3.

***சிங்கப்பூருடன் பரிமாற்றப்பட்ட தந்திச் சமிக்ஞைகள்வழி நிர்ணயிக்கப்பட்ட பினாங், ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில்மென்ட்ஸின் நீளாக்கோணம். கமாண்டர் A. M. ஃபீல்ட், லெப்டினன்ட் W. H. D. மார்கெசன், ஆங்கஸ் சுதர்லாண்ட் ஆகியோரால் வெளியிடப்பட்டது.***

***1894***

***காகிதம்***

***2021-01169-073***

*சுதர்லாண்ட், நில அளவியல் கல்வியில் காலனித்துவப் பயிற்றுவிப்பாளராக தனது அதிகாரப்பூர்வ நிலையைப் பயன்படுத்தி, பிரிட்டிஷ் கடற்படையை நிர்வகிக்கும் அரசாங்க அமைப்பின் (Admiralty) நீரியல்புப் பிரிவு வெளியிட்ட இந்த ஆய்வில் முக்கியப் பங்காற்றினார். இந்த வெளியீட்டின் பிரதியில், எழுதுபொருள் அலுவலகத்தின்மூலம் இந்த அறிக்கையைத் தமது குறிப்புக்காக வழங்கியமைக்கு சுதர்லாண்டுக்கு நன்றி தெரிவிக்க பிரிட்டிஷ் போர் அலுவலகம் (British War Office) வெளியிட்ட ஒரு குறிப்பும் அடங்கியுள்ளது.*

## 4.

***சிங்கப்பூர் வானியல் ஆய்வகத்தில் பயன்பாட்டிற்கான படிவங்கள், அட்டவணைகள் மற்றும் மாறிலிகள், சிங்கப்பூர் – ஆங்கஸ் சுதர்லாண்ட் கணக்கீடு செய்து தொகுத்தது***

***1893***

***காகிதம்***

***2021-01169-013***

## 5.

***லார்ட் கிட்சனர் ஆங்கஸ் சுதர்லாண்டுக்கு எழுதிய கடிதம்***

***28 ஆகஸ்ட் 1883***

***காகிதத்தில் மை எழுத்து***

***2021-01169-024***

*இக்கடிதத்தில், லார்ட் கிட்சனர் 1883ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் அரேபியா வளைகுடா (Gulf of Arabia) மற்றும் மரண சமுத்திரத்தின் (Dead Sea) மீதான ஓர் ஆய்வுப் பணியை மேற்கொள்ள அழைக்கப்பட்டுள்ளதாக பகிர்ந்து கொள்கிறார். இந்தக் கடிதம் சுதர்லாண்டிற்காக எழுதப்பட்டதாகும். இதில் அவரை நில அளவியல்*

## 6.

***சுதர்லாண்டின் கோணமானியைப் பற்றிய துண்டுப்பிரசுரம், C. F. Casella & Co. வெளியிட்டது***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***காகிதம்***

***2021-01169-060***

*சுதர்லாண்ட் நில அளவியல் பணிக்காக ஒரு சிறப்பு வகை கோணமானியை (Protractor) வடிவமைத்தார். அவரின் பெயரில் அழைக்கப்படும் இந்தக் கோணமானி, கோண கருவிகளுடன் (Angular Instruments) இணைந்து பயன்படுத்தப்படுவதற்காக உருவாக்கப்பட்டது. இந்த கருவி உடன் இணைக்கப்பட்டிருந்த தடம் வரையும் காகிதத்தில், நேரில் பார்க்கும் இடத்திலேயே அளவீட்டு வரைபடம் வரைந்து பதிவு செய்யலாம்.*

## 7.

***காட் டிரேசர், அதன் பெட்டியுடன்***

***P. Orr & Sons***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம்***

***மரம், உலோகம்***

***XXXX-09114-001 மற்றும் XXXX-09114-002***

*காட் டிரேசர் (Ghat Tracer) என்பது நில அளவீட்டில் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும். குன்றையோ சாலையையோ அளவீடு செய்யும்போது குறிப்பிட்ட சரிவிலுள்ள இடங்களைக் குறிக்கும் சமவெளிக் கோட்டை வரைவதிலும் ஒரு சரிவின் கோணத்தை அளவிடுவதிலும் இக்கருவி பயன்படுகிறது.*

*இக்கருவி, மதராசிலிருந்து P. Orr & Sons நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதாகும்.*

# 3200

## *பாகம் 2*
## *சமதளமாக்கலும் விரிவாக்கமும்*

*நாம் நில மீட்பை (Land Reclamation) ஒரு சமகால நடைமுறையாக கருதினாலும், இது 19ஆம் நூற்றாண்டிலிருந்தே சிங்கப்பூரில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. 1822ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஆற்றின் தென்கரையை மீட்டபதன் மூலம் இது தொடங்கியது. 1870களில், தெலுக் ஆயர் கரையோரத்தில் (Telok Ayer Bay) சிங்கப்பூர் தனது முதல் மிகப்பெரிய நிலமீட்புத் திட்டத்தை தொடங்கியது.*

*இந்த சமதளமாக்கல்,மற்றும்  விரிவாக்கப் பணியின் ஒரு பகுதியாக, ஒரு காலத்தில் கடலை நோக்கியிருந்த தெலுக் ஆயர்  வீதியைத்  (Telok Ayer Street) தாண்டி கடற்கரையை விரிவாக்க சுற்றியுள்ள மலைகள் சமநிலைப்படுத்தப்பட்டன. இதன்வழி, ஒரு காலத்தில் கடலை நோக்கியிருந்த தெலுக் ஆயர் வீதியையும் (Telok Ayer Street) தாண்டி கடற்கரையை விரிவாக்கினர். இன்று அங்குள்ள பெரும்பகுதி இடம் மத்திய வணிக மையம் (Central Business District - CBD) ஆக உள்ளது.*

*பின்னர், சிங்கப்பூரின் காலனித்துவ காலத்தில், காலாங் நீர்வடிநிலப் பகுதி (Kallang Basin) மற்றும் பீச் ரோடு (Beach Road) கடற்கரையை மீட்பதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. கரையோரங்களை விரிவாக்கியது வளர்ச்சிக்கான பயனுள்ள நிலங்களை வழங்கினாலும், இது சில சூழல்களில் மூத்தகுடி சமூகங்களையும் உயிரியல் பன்மையையும் இடம்பெயர வைத்தது.*

*திரு ராஃபிள்ஸ்  மற்றும் கர்னல் ஃபார்குஹார்  இணைந்து குடியேற்றத்தை விரிவுபடுத்துவதற்கான சிறந்த வழியை விவாதித்ததாக ஒரு கதை உண்டு...*

*அந்த நேரத்தில் திரு ராஃபிள்ஸுக்கு தஞ்சோங் சிங்கப்பூரா அருகிலுள்ள சிறிய மலையை உடைத் து, அதன் மண்ணைப் பயன்படுத்தி ஆற்றின் அருகில் கரையை ஏற்படுத்தி நிலம் உருவாக்கலாம் என தோன்றியது... அடுத்த நாள் திரு ராஃபிள்ஸ் மற்றும் கர்னல் ஃபார்குஹார் ஆணையின் கீழ் உள்ள ஆட்கள், சீன, மலாய் மற்றும் இந்திய தொழிலாளர்களை அழைத்து வந்தார்கள், சுமார் இருநூறு அல்லது முந்நூறு தொழிலாளர்களுக்கு, மண்ணைத் தோண்டி சுமந்து செல்வதற்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கூலியாகக் கொடு க்கப்பட்டது."*

*– முன்ஷி அப்துல்லா, "ஹிகாயத் அப்துல்லா", முதன்முதலாக 1849ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது*

# 3201

## 1.

***சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் நகர திட்டக் குழுவிற்கு எழுதிய கடிதம்***

***4 நவம்பர் 1822***

***காகிதத்தில் மை எழுத்து***

***XXXX-02674-005***

*"ஆற்றின் தென்-மேற்கு பகுதியில் உள்ள நிலத்தை வடிகட்டுவதைத் தவிர்க்க முடியாது. இது குடியேற்றத்தின் (Settlement) ஆரோக்கியத்திற்கு மட்டும் அல்ல, அங்கு நிரந்தரக் கட்டிடங்களின் அடித்தளங்களை உறுதிப்படுத்துவதற்கும் மிக அவசியமானதாகும். எனவே, இது மிகக் குறைந்த கால தாமதத்துடன் நடைமுறைப்படுத்தப்படும்."*

*முதலில், சிங்கப்பூர் (Singapore) ஆற்றின் வடகரையை (North Bank) முழுமையாக வணிக நடவடிக்கைகளுக்காக ஒதுக்க வேண்டும் என்று சர் ஸ்டாம்ஃபர்ட் ராஃபிள்ஸ் (Sir Stamford Raffles) திட்டமிட்டிருந்தார். ஆனால், இது நடைமுறையில் சாத்தியமாகவில்லை. மேலும், குடியிருப்பாளர் வில்லியம் ஃபார்குஹார் (William Farquhar) உடன் பெரும் கருத்து வேறுபாட்டிற்கு வழிவகுத்தது.*

*நகர திட்டக்குழுவிற்கான ராஃபிள்ஸின் உத்தரவுகளின்படி இப்பகுதியில், தென்கரையையும் (South Bank) பயன்படுத்துவது அவசியம் என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார். ஆகவே, முதலில் நிலத்தை வடிகட்டுவதன் மூலம் அந்தப் பகுதியை நிலைப்படுத்தலாம் என்று அவர் தீர்மானிக்கிறார்.*

*பின்னர், ராஃபிள்ஸ் (Raffles) ஆற்றின் முகப்பிற்குள் (River Mouth) இருக்கும் ஒரு மலையை (Hill) சமப்படுத்தி, தென்கரையை (South Bank) உயர்த்தி, சதுப்புநிலத்தை (Marshland) மூடுவதற்கான திட்டங்களை வகுத்தார். இந்த நிலமீதிப்பு திட்டத்தின் விளைவாகவே, இன்று வரலாற்று*

*முக்கியத்துவம் வாய்ந்த வணிக மையமாக (Commercial Area) விளங்கும் "ராஃபிள்ஸ் பிளேஸ்" (Raffles Place) உருவானது.*

## 2.

***ஜாக்சன் பாலம், அரசாங்கக் குன்றுடன் சிங்கப்பூர் ஆற்றின் காட்சி சிகிஸ்மாண்ட் ஹிமெல்லி, 1830 ஆம் ஆண்டில் பிரான்சுவா-எட்மண்ட் பாரிஸின் சித்திரத்தின் படி***

***1835***

***ஆக்வாடின்ட்***

***XXXX-01263***

*1819 ஆம் ஆண்டில், சிங்கப்பூர் ஆற்றின் தென்கரை தாழ்வான சதுப்புநிலமாக இருந்தது. அடிக்கடி வெள்ளங்களுடன் கப்பல்களை நிறுத்துவதற்கு உகந்ததாக இருக்கவில்லை. 1822 ஆம் ஆண்டில், தற்போதைய பேட்டரி சாலைக்கு அருகிலுள்ள ஒரு குன்றை சமப்படுத்தும் பணியில் சுமார் 300 கூலிகள் ஈடுபட்டனர். இதன் மூலம் ஆற்றங்கரையில் ஒரு மேட்டுக்கரை நிர்மாணிக்கப்பட்டது. இது இன்றைய போட் கீயாக (Boat Quay) மாறியது.*

*1830 ஆம் ஆண்டில் இந்தக் காட்சி அந்த மேட்டுக்கரையிலிருந்துதான் பதிவு செய்யப்பட்டது. அந்த காலத்திற்குள், போட் கீ சிறிய கப்பல்களை நிறுத்துவதற்கான இடமாகிவிட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. ‘சிங்கப்பூர்’ (Sincapour) என பெயரிடப்பட்ட இந்த அச்சு, பிரெஞ்சு போர்க்கப்பல் La Favorite -ன் ஓவியர் ஃபிரான்சுவா-எட்மண்ட் பாரிஸ் வரைந்த ஓவியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஆகஸ்ட் 1830 இல் சிரில் லாப்லாஸ் (Cyrille Laplace) தலைமையிலான உலகச் சுற்றுப்பயணத்தின் போது அக்கப்பல் சிங்கப்பூரிலும் நின்றது.*

*பின்னணியில் பிரசென்ட்மென்ட் பாலம் (Presentment Bridge) தென்படுகிறது. இது 1823 ஆம் ஆண்டில் லெப்டினெண்ட் ஃபிலிப் ஜாக்சன் கட்டிய முதல் பாலமாகும்.*

## 3202

### 1.

***மவுண்ட் பாமர் மலையிலிருந்து தெலுக் ஆயர் நீர்வடிநிலப் பகுதியின் காட்சி***

***ஜான் தாம்சன்***

***1862–1865***

***ஆல்புமன் அச்சு***

***2001-02535***

*இப்புகைப்படம், தெலுக் ஆயர் நீர்வடிநிலப் பகுதியின் நில மீட்பிற்கு முன்பு எடுக்கப்பட்டதாகும். இதில் கடற்கரையோரத்தில் பல கப்பல்கள் நங்கூரமிடப்பட்டுள்ளன. இது மவுண்ட் பாமர் (Mount Palmer) பகுதியிலிருந்து எடுத்தது.*

*1870களுக்குள் மவுண்ட் பாமர் நகர்ப்பகுதிக்கு அணுகலை மறைக்கும் இடையூறாக கருதப்பட்டது. அதனால், தெலுக் ஆயர் மணல் மீட்புத் திட்டத்திற்காக, குன்றின் சில பகுதிகள் வெடிக்கச் செய்யப்பட்டன.*

### 2.

***தெலுக் ஆயர் கரையோர நில மீட்பு***

***1880களின் தொடக்கம்***

***ஆல்புமென் பிரிண்ட்***

***1995-01566***

*இந்த புகைப்படம் 1879-ல் தொடங்கிய தெலுக் ஆயர் கரையோர நில மீட்பு பணிகளை காட்டுகிறது. சிங்கப்பூர் ஆற்றங்கரையின் அருகிலிருந்த வர்த்தக மையத்தை, தஞ்சோங் பகாரில் இருந்த புதிய துறைமுகத்துடன் இணைக்கக் கூடுதல் நிலத்தை உருவாக்க இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.*

*இதற்காக, மவுண்ட் எர்ஸ்கின் (Mount Erskine), மவுண்ட் பாமர் (Mount Palmer), மவுண்ட் வாலிக் (Mount Wallich) ஆகிய மலைகள் சமன் செய்யப்பட்டன. இதன்மூலம், தெலுக் ஆயர் கடற்கரை 42 ஏக்கர் (சுமார் 0.17 சதுர கிலோமீட்டர்) அளவில் விரிவுபடுத்தப்பட்டது.*
*இந்த நில மீட்பு செய்யப்பட்ட பகுதி தற்போது சிங்கப்பூரின் மத்திய வணிக மாவட்டம் (Central Business District - CBD) ஆக மாற்றப்பட்டுள்ளது. சிசில் ஸ்திரீட் (Cecil Street), ராபின்சன் சாலை (Robinson Road) ஆகியவை இதில் உள்ளடங்குகின்றன.*

**3.**

***சிங்கப்பூரின் காட்சி***

***1880கள்***

***ஆல்புமன் அச்சு***

***2018-00692/1996-00058***

*இந்த புகைப்படம் தெலுக் ஆயர் கரையோரத்தின் நில மீட்புப் பணிகளின் தொடர்ச்சியைப் பதிவு செய்கிறது. இங்கே தெளிவாக காணக்கூடியது, மீட்கப்பட்ட நிலத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிசில் ஸ்திரீட் (Cecil Street). கடற்கரை மேலும் விரிவாக்கப்பட்டதை இது உறுதிப்படுத்துகிறது.*

**4.**

***புதிய தெலுக் ஆயர் சந்தைக் கட்டுமானம்***

***c.1890***

***ஆல்புமன் அச்சு***

***2007-50642***

*1825ஆம் ஆண்டில் முதன்முதலில் கட்டப்பட்ட தெலுக் ஆயர் சந்தையின் பிரசித்திபெற்ற எண்கோணக் கட்டிடம், ஆரம்பத்தில் ஒரு மீன்*

*சந்தையாக இருந்தது. முதலில் கட்டப்பட்டது பாதுகாப்பற்றதாகக் கருதப்பட்டதால் 1833ஆம் ஆண்டில் ஜார்ஜ் டிரோம்கோல்ட் கோல்மேன் அதனை மீண்டும் கட்டினார். எனினும், 1879ஆம் ஆண்டில் தெலுக் ஆயர் கரையோர நில மீட்பு பணிகளின் ஒரு பகுதியாக, அவரது கட்டடம் இடிக்கப்பட்டது.*

*இந்த புகைப்படம் புதிய தெலுக் ஆயர் சந்தையின் கட்டுமானத்தைக் காட்டுகிறது. ஜேம்ஸ் மேக்ரிட்சி (James MacRitchie) தலைமையில் கட்டப்பட்ட இந்த புதிய கட்டடம் 1890ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. இது மாநகராட்சி ஆணையத்தால் (Municipal Commission) கட்டப்பட்ட முதல் சந்தையாக இருந்தது, கிளாஸ்கோவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான வார்ப்பிரும்பு, தேனிரும்பினால் கட்டப்பட்டது.*

## 3203

***சிங்கப்பூர்த் திட்டம்***

***1910***

***நிறமுள்ள லித்தோகிராப்***

***2007-00842***

*ராஃபிள்ஸ் கீயைத் தாண்டி துறைமுகத்தை விரிவுபடுத்த தெலுக் ஆயரில் இரண்டாவது நில மீட்டெடுப்பு 1899ல் முன்மொழியப்பட்டது. கப்பல் போக்குவரத்தில் கணிசமான அதிகரிப்பை சமாளிப்பதே இதன் நோக்கமாக அமைந்தது. ஏனெனில், புதிய துறைமுகம் (1900ல் கெப்பல் துறைமுகம் என பெயர் மாற்றப்பட்டது) இருந்தபோதிலும், பல சிறிய கப்பல்கள் இன்னும் சிங்கப்பூர் ஆற்றுப் பகுதியில் நிறுத்த விரும்பின. இந்த நகரத் திட்டம், இந்த இரண்டாவது நில மீட்டெடுப்புக்காக ஒதுக்கப்பட்ட பகுதியை காண்பிக்கிறது. இது 83 ஏக்கர் (சுமார் 0.34 சதுர கிலோமீட்டர்) விரிவாக்கத்தைக் குறிக்கிறது. இந்த மீட்டெடுப்பு பல பிரச்சினைகளால் தடையுற்றதால், 1932லேயே முழுமையாக நிறைவு பெற்றது.*

## 3204

### 1.

***கட்டிட ஒதுக்கீடுகள், கிரவுன் குத்தகைகளின் பதிவு எண்களைக் காட்டும் சிங்கப்பூர் நகரின் வரைபடம்***

***எச். இ. மெக்கல்லம்***

***1881***

***காகிதத்தில் மையுடன் கல்லச்சு***

***2018-00084***

*இந்த சிங்கப்பூர் நகரின் வரைபடத்தைத் தற்காலிகக் காலனித்துறைப் பொறியாளர் ஹென்றி எட்வர்ட் மெக்கல்லம் (Henry Edward McCallum)1881 ஆம் ஆண்டில் தயாரித்தார். தாம்போ பீட்டர் (Thambo Peter) வரைந்தார். இந்த வரைபடம் இடதுபுறத்தில் தஞ்சோங் பகாரிலிருந்து (Tanjong Pagar) வலதுபுறத்தில் காலாங் (Kallang) வரை சிங்கப்பூர் நகரின் நுண்ணிய நிலப்பரப்பு, கட்டிட ஒதுக்கீடுகளைக் காண்பிக்கிறது.*

*இந்த வரைபடம், நில வரி வசூலிப்பாளரும் பத்திரங்களின் பதிவாளருமான (Collector of Land Revenues & Registrar of Deeds) ஹான்காக் தோமஸ் ஹாஹ்டனுக்குச் (Hancock Thomas Haughton) சொந்தமானதாகும். தெலுக் ஆயர் (Telok Ayer) நீர்வடிநிலப் பகுதியின் ஓரமாக மீட்கப்படவிருந்த நிலத்தின் பயன்பாட்டுத் திட்டங்களை இது காட்டுகிறது.*

*மேலும், அநேகமாக ஹாஹ்டனின் கையால் வரையப்பட்ட சில சாலைகள் - உதாரணமாக, அச்சில் "ராபின்சன் கீ" (Robinson Quay) என பதிவுசெய்யப்பட்டிருந்ததை அவர் மை பயன்படுத்தி "ராபின்சன் ரோடு" (Robinson Road) என திருத்தியுள்ளார். இச்சாலைப் பெயர் இன்றும் பயன்பாட்டில் உள்ளது.*

## 2.

***தெலுக் ஆயரில் சேகரிக்கப்பட்ட பார்னியா மநிலென்சிஸ் (மூலமாகப் பதிவு செய்யப்பட்ட பெயர்: ஃபோலாஸ் மமில்லே)***
***நவம்பர் 1900***
***லீ கோங் சியான் இயற்கை வரலாறு அருங்காட்சியகத்திலிருந்து கடன் பெறப்பட்டது***

*மண்ணை மீட்டெடுப்பதன் சுற்றுச்சூழல் பாதிப்பு என்ன? இந்த ஓடுகளையும் மொல்லஸ்க் மாதிரிகளையும், 1870களிலிருந்து 1900கள் வரை ராஃபிள்ஸ் அருங்காட்சியகம் தெலுக் ஐயரில் சேகரித்ததாகக் கருதப்படுகிறது. இவை, அந்த காலகட்டத்தில் தெலுக் ஆயர் கரையோரத்தின் கடல் உயிரியல் விவரங்களை விளக்குகின்றன. பார்னியா மநிலென்சிஸ் (பிட்டோக்ஸ் என்று பொதுவாக அழைக்கப்படும்) இந்த இரட்டை ஓடு உயிரினங்கள், ஒரு காலத்தில் தெலுக் ஆயரில் மென்மையான கற்களிலும் களிமண் நிறைந்த இருப்பிடங்களிலும் வாழ்ந்தன. ஆனால் இவைத் தற்போது மிகக் குறைவாக காணப்படுகின்றன.*

# 3205

## 1.
***சிங்கப்பூர் நகரமும் பெருநகரமும்***

*1938*

***வண்ண கல்லச்சு***

*XXXX-02137-004*

*1930களில், சிங்கப்பூரின் காலனித்துவ அரசு காலாங் நீர்வடிநிலப் பகுதி, பீச் ரோடு பகுதிகளில் நில மீட்புப் பணிகளைத் தொடங்கியது. காலாங் நீர்வடிநிலப் பகுதி 1937ல் திறக்கப்பட்ட காலாங் விமான நிலையத்தின் கட்டுமானத்திற்காக ஒதுக்கப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட பீச் ரோடுப் பகுதியில் புதிய நீர்முகப்பை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. 1950-களில் மெர்டேக்கா பாலம் கட்டப்பட்டதையும், குவீன் எலிசபெத் பூங்காவினுள் (தற்போதைய எஸ்பிளனேட் பூங்கா) எஸ்பிளனேட் நிலமீட்கப்பட்டதையும் அடுத்தே புதிய நீர்முகப்பு உருவாக்கப்பட்டது. 1938ஆம் ஆண்டின் நகர மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்த வரைபடம் இவ்விரண்டுக்குமான திட்டங்களையும் காட்டுகிறது. காலனித்துவ அரசு மேற்கொண்ட முக்கிய நில மீட்டெடுப்பு முயற்சிகளில் இதுவே கடைசியானதாகும்.*

## 2.
***காலாங் விமான நிலையத் திறப்பு விழா***

*1937*

***மறுஉறுவாக்கம்***

***எம். எல். மைதிலி தேவி அவர்களின் கொடை***

## 3.

***காலாங் விமான நிலையத் திறப்பு விழா***

***1937***

***மறுஉறுவாக்கம்***

***எம். எல். மைதிலி தேவி அவர்களின் கொடை***

***கலாங் விமான நிலையம் 12 ஜூன் 1937 அன்று ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மென்ட்ஸ் ஆளுநர் சர் ஷென்டன் தோமஸ் (Sir Shenton Thomas) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது***. *அதன் திறப்பு விழாவில்* ***எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தில் இந்திய தொழிலாளர் நிறுவனத்தின் (Indian Labour Company) உரிமையாளராக இருந்த பி. கோவிந்தசாமி செட்டியார் (B. Govindasamy Chettiar), சர் ஷென்டன் தோமஸுடன் அமர்ந்துள்ளார்.***

## 4.

***சிங்கப்பூர்*** *நீர் முகப்பு* ***மேல்நோக்குப் புகைப்படம்***

***1947***

***ஜெலட்டின் சில்வர் பிரிண்ட்***

***1998-00612***

*ஓவென் எலிசன் அன்பளிப்பு*

*1840-களில் பீச் ரோட்டின் சில பகுதிகளில் நில மீட்புப் பணிகள் தொடங்கியிருந்தாலும், நீர்முகப்பு வட்டாரத்தை உருவாக்கிய பிரபலாமன நில மீட்புப் பணிகள் 1930-களில் தொடங்கப்பட்டன. இரண்டாம் உலகப்போரினால் இத்திட்டத்திற்கு இடையூறு ஏற்பட்டாலும், திட்டத்தின் ஒரு பகுதி இப்புகைப்படம் எடுக்கப்பட்ட நேரத்தில் முடிவடைந்திருந்தது. ராயல் ஏர் ஃபோர்ஸில் பணியாற்றிய சிசில் ஓவென் எலிசன் எடுத்த இப்புகைப்படம், எஸ்பிளனேடில் இருந்து பீச் ரோடு, கலாங் பகுதி வரையிலான கரையோர நீட்டிப்பைத் தெளிவாகக் காட்டுகிறது. இங்கு ஸ்டாம்ஃபர்ட் நதியின்*

நுழைவாயிலைக் காணலாம். அதன் மீதமுள்ள பகுதி கால்வாயாக மாற்றப்பட்டது.

## 5.

***சிங்கப்பூர் நீர்முகப்பு***

***கார்ல் அலெக்சாண்டர் கிப்சன் ஹில்***

***c.1950s***

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

***XXXX-13602***

*ராஃபிள்ஸ் அரும்பொருளகத்தின் (Raffles Museum) அப்போதைய தொகுப்பாளராகவும் இயக்குநராகவும் பணியாற்றிய கார்ல் அலெக்சாண்டர் கிப்சன் ஹில் எடுத்த இப்புகைப்படம், கலாங் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்றைக் காட்டுகிறது. பின்னணியில் ஃபுல்லர்ட்டன் கட்டடம் கடற்கரையில் நங்கூரமிடப்படுள்ள சில கப்பல்கள் தென்படுகின்றன.*

## 3206

***தேசிய விளையாட்டரங்க இடிப்பு, Project 37 இலிருந்து***

***சௌ சீ யோங்***

***2010***

***போலராய்டு புகைப்படம்***

***2012-00133***

*1955-ல் கலாங் விமான நிலையம் மூடப்பட்ட பின்னர், அந்த மீட்கப்பட்ட நிலப்பகுதி புதிய தேசிய விளையாட்டரங்கம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டது. அது பின்னர் 1973-ல் திறக்கப்பட்டது. இந்த விளையாட்டரங்கில் மூன்று தென்கிழக்கு ஆசிய விளையாட்டுகள் (SEA Games), மலேசியக் கிண்ணக் காற்பந்துப் போட்டி, பல தேசிய தின அணிவகுப்புகள் நடைபெற்றுள்ளன. 2010- ஆம் ஆண்டு இந்த அரங்கம் இடிக்கப்படும் போது, புகைப்படக் கலைஞர் சௌ சீ யோங் எடுத்த இப்புகைப்படம் அரங்கின் இறுதிக் கட்டங்களைப் பதிவு செய்தது.*

## 3207

***சிங்கப்பூர் நகர வரைபடம்***

***செப்டம்பர் 1958***

***வண்ணக் கல்லச்சு***

***2018-00085***

***இந்த வரைபடம் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தெலுக் ஆயர் முதல் பீச் ரோடு, கலாங் விமான நிலையத் தளம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற நில மீட்பு பணிகள், நகர மையத்தின் வளர்ச்சி உள்ளிட்டவற்றைக் காட்டுகிறது. இந்த ஒருங்கிணைந்த வரைபடம் 1958 ஆம் ஆண்டு சிங்கப்பூர்ச் சீன புத்தக விற்பனையாளர் சங்கத்தால் வெளியிடப்பட்டது.***

## 3208

### 1.

***சிங்கப்பூர்*** *நீர் முகப்பு* ***மேல்நோக்குப் புகைப்படம்***

***1947***

***ஜெலட்டின் சில்வர் பிரிண்ட்***

***1998-00612***

*ஓவென் எலிசன் அன்பளிப்பு*

*1840-களில் பீச் ரோட்டின் சில பகுதிகளில் நில மீட்புப் பணிகள் தொடங்கியிருந்தாலும், நீர்முகப்பு வட்டாரத்தை உருவாக்கிய பிரபலாமன நில மீட்புப் பணிகள் 1930-களில் தொடங்கப்பட்டன. இரண்டாம் உலகப்போரினால் இத்திட்டத்திற்கு இடையூறு ஏற்பட்டாலும், திட்டத்தின் ஒரு பகுதி இப்புகைப்படம் எடுக்கப்பட்ட நேரத்தில் முடிவடைந்திருந்தது. ராயல் ஏர் ஃபோர்ஸில் பணியாற்றிய சிசில் ஓவென் எலிசன் எடுத்த இப்புகைப்படம், எஸ்பிளனேடில் இருந்து பீச் ரோடு, கலாங் பகுதி வரையிலான கரையோர நீட்டிப்பைத்*

*தெளிவாகக் காட்டுகிறது. இங்கு ஸ்டாம்ஃபர்ட் நதியின் நுழைவாயிலைக் காணலாம். அதன் மீதமுள்ள பகுதி கால்வாயாக மாற்றப்பட்டது.*

**2.**

***சிங்கப்பூர் நீர்முகப்புத் தோற்றம்***

***கார்ல் அலெக்சாண்டர் கிப்சன்-ஹில்***

***1940களின் இறுதி - 1950களின் தொடக்கம்***

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

***XXXX-16356***

*கார்ல் ஏ. கிப்சன்-ஹில் எடுத்த இப்புகைப்படம், கடல்மட்டத்திற்கு மிக அருகிலிருந்து எடுக்கப்பட்ட சிங்கப்பூர் நீர்முகப்புக் காட்சியைக் காட்டுகிறது. இது இரண்டாம் உலகப்போரின்போது, ஜப்பானியர்களால் பகுதியளவு மீட்கப்பட்ட நிலமான தஞ்சோங் ரூவிலிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். இப்பணிகளில் டச்சு நாட்டின் போர்க் குற்றவாளிகள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த காட்சி நீர்முகப்பில் மரக்கட்டைகளை ஏற்றிச் செல்லும் பாய்மரக்கப்பல்களைக் காட்டுகிறது. பின்னணியில் கேத்தே கட்டடம், 7வது மாடி ஹோட்டல் கட்டடம் ஆகியவற்றைக் காணலாம்.*

**3.**

***ஜார்ஜ் லோவிக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்ட புகைப்பட ஆல்பம்***

***1953***

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

***2017-01039***

*ராணி எலிஸபெத் II- இன் மகுடம் சூடும் விழா நாளான மே 30, 1953 அன்று குயின் எலிஸபெத் வாக் திறக்கப்பட்டது. அதே நேரத்தில் பீச்*

*ரோடு, எஸ்பிளனேட் பகுதி நிலமீட்புத் திட்டம் முழுமையாக நிறைவுக்கு வந்தது. புதுப்பிக்கப்பட்ட நடைபாதை, அந்தப் புகைப்பட ஆல்பத்தில் இடம்பெற்றுள்ளது. பின்னாளில் இந்த ஆல்பம், அதே ஆண்டு சர் எட்மண்ட் ஹிலாரியுடன் இணைந்து எவரஸ்ட் சிகரத்திற்குப் பயணித்து மே 29ஆம் தேதி சிகரத்தை அடைந்த ஜார்ஜ் லோவிக்கு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. ஜார்ஜ் லோவி, சர் ஹிலாரியுடன் இணைந்து சிங்கப்பூரில் பள்ளி மாணவர்களிடையே சொற்பொழிவாற்ற வந்தபோது இந்த ஆல்பம் அவருக்கு வழங்கப்பட்டது.*

# 3300

## *பாகம் 3*
## *புதிய தொடக்கம்*

*மேலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசாங்கத்தின் நிலமீட்புப் பணிகளின் பயனால், 1965க்கும் 2015க்கும்  இடையில் 138 சதுர கிலோமீட்டர் நிலம் சேர்க்கப்பட்டது. இதில் 'ஆகப்பெரிய நில மீட்பாகக்' கருதப்படும் ஈஸ்ட் கோஸ்ட் திட்டம் அதிலிருந்து எழுந்த மரீன் பரேட் குடியிருப்புப் பேட்டை, ஈஸ்ட் கோஸ்ட் பூங்கா, ஈஸ்ட் கோஸ்ட் பார்க் நெடுஞ்சாலை, நகர மைய  விரிவாக்கத்திற்காக மரினா பே நிலமீட்பு ஆகியவை அடங்கும்.*

*இந்தத் திட்டங்களின் அளவு, அக்காலகட்டத்தில் சிங்கப்பூரில் நடைபெற்ற விரைவான வளர்ச்சியையும், அதிகரித்த தேவைகளுக்காக ஒரு சிறிய தீவு  எதிர்கொண்ட சவால்களையும் பிரதிபலிக்கிறது.*

*இன்றும் எதிர்காலத்திலும் சிங்கப்பூரின் வெற்றிக்கும் வாழ்வாதாரத்திற்கும் நிலையான கேள்வியாக விளங்கும் நிலமீட்பின் செலவுகளையும் வரம்புகளையும் கருத்தில்கொண்டு, முழுமையான, உகந்த வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிலப்பயன்பாட்டை எவ்வாறு அமைக்கலாம் என்பதை இந்தப் பகுதி ஆராய்கிறது.*

## 3301

***சிங்கப்பூர் இயற்கை நில அமைப்பு வரைபடம் – பிரதமர் லீ குவான் யூவின் இஸ்தானா அலுவலகத்திலிருந்து***

***1970களின் தொடக்கம்***

***காகிதம்***

***2022-00596***

***பிரதமர் அலுவலகத்தின் நன்கொடை***

*சிங்கப்பூரின் இயற்கை நில அமைப்பைக் காட்டும் இந்த நிலவரைபடம், 1970களில் இஸ்தானாவில் இருந்த பிரதமர் லீ குவான் இயூவின் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டது. இந்த வரைபடம் தேசிய நிலப் பயன்பாடு, திட்டமிடலை மேற்பார்வையிடும் தேசிய வளர்ச்சி அமைச்சின் கீழ் செயல்பட்ட (தற்போது நகர மறுசீரமைப்பு ஆணையத்துடன் (URA) இணைக்கப்பட்டுள்ள) திட்டமிடல் துறையால் தயாரிக்கப்பட்டது.*

*இந்த வரைபடத்தில் ஈஸ்ட் கோஸ்ட், வெஸ்ட் கோஸ்ட் வட்டாரங்களில் நிலமீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள், எதிர்காலத்தில் நில மீட்புப் பணிகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட மரினா பே உள்ளிட்ட புதிய பகுதிகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

## 3302

***சிங்கப்பூர் கருத்துருவாக்கத் திட்ட வரைபடம் B***

***1971***

***காகிதம்***

***2015-02025***

*கருத்துருவாக்கத் திட்டம் (தற்போது நீண்டகால திட்டம் என்றழைக்கப்படுகிறது) என்பது சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு வழிகாட்டும்*

*வகையில் அமைந்த உத்திப்பூர்வ நிலப் பயன்பாடு, போக்குவரத்துத் திட்டமாகும். இது நீண்டகால மக்கள் தொகை, பொருளியல் வளர்ச்சித் தேவைகள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய போதுமான நிலம் இருப்பதை உறுதி செய்யவும், சிறந்த வாழ்க்கைச் சூழலை அமைக்கும் நோக்கிலும் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனை செய்யப்படுகிறது.*

*இந்த வரைபடம், புதிய தேசத்தின் உள்கட்டமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 1971 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட சிங்கப்பூரின் முதல் கருத்துருவாக்கத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது. இதில் பெருவிரைவு ரயில் பாதைகள் (Mass Rapid Transit - MRT), மீட்கப்பட்ட நிலத்தில் கட்டப்படவிருந்த சாங்கி விமான நிலையம் உள்ளிட்ட முக்கியப் போக்குவரத்து அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

## 3303

***பெரித்தா சிங்கப்பூரா: முன்னேற்றப் பாதையில் நாடு 1965***

***தகவல்: கலாசார அமைச்சு,***

***நன்றி: சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்***

*பெரித்தா சிங்கப்பூரா என்ற இந்த செய்திச் சுருளில் இடம்பெறும் காட்சிகள், 1965ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின் கண்ணோட்டத்தை வழங்குகின்றன. பொது வீடமைப்புக்காக காலாங்கில் நிலத்தை மீட்டது, போக்குவரத்து நெரிசலை குறைக்க சாலைகளை அகலமாக்கியது, ரயில் பாதைகளை ஜூரோங் நோக்கி அமைத்தது போன்றவை இதில் உள்ளடங்கும்.*

# 3304

## 1.

***இயந்திர அலை அளவி (Mechanical Tide Gauge)***

***c.1985***

***மரம், உலோகம், காகிதம்***

***2013-00650***

*இந்த இயந்திர அலை அலவி, நீர்மட்டங்களை அளவிடப் பயன்பட்டது. இது, துறைமுக மேம்பாடு, படகுத்துறைக் கட்டுமானம், தூர்வாரல் பணிகள், நிலமீட்புப் பணிகள் உள்ளிட்டவற்றுக்கான நீர்ப்பரப்பு ஆய்வுகளை மேற்கொள்ளும் யுனைட்டெட் சர்வேயர்ஸ் (United Surveyors) எனும் நிறுவனத்திற்குச் சொந்தமானது.*

## 2.

***மரீன் பதின் கடந்த காலக் காட்சி***

***லிம் க்வோங் லிங்***

***1970கள்***

***சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத் தொகுப்புலிருந்து மறுஉருவாக்கம் செய்யப்பட்டது***

***2019-00010***

***லிம் க்வோங் லிங் & குடும்பத்தினரின் பரிசு***

*மரீன் பரேட் (Marine Parade), முழுவதுமாக மீட்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்ட சிங்கப்பூரின் முதல் குடியிருப்புப் பேட்டையாகும். ஈஸ்ட் கோஸ்ட் நில மீட்பு 1966ல் தொடங்கப்பட்டு, 1973 ஆம் ஆண்டின் இறுதியில் மரீன் பரேட் குடியிருப்புப் பேட்டையின் முதற்கட்டக் கட்டுமானம் முடிவடைந்தது. புகைப்படக் கலைஞர்* ***லிம் க்வோங் லிங்*** *எடுத்த இந்த புகைப்படம், அதன் ஆரம்ப கட்ட வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 1976-இல் இத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு, அதில்*

*உணவங்காடி நிலையம், பள்ளிகள், தபால் அலுவலகம், நூலகம் போன்ற பொது வசதிகளும் உருவாக்கப்பட்டன.*

**3.**

***கிழக்குக் கரை பூங்காவில் கடற்கரையை மக்கள் ரசிக்கும் காட்சி – அஞ்சல் அட்டை***

***1970-கள்***

***நிறம் தீட்டிய அஞ்சல் அட்டை***

***2008-04004***

***கிழக்குக் கரை பூங்கா நீச்சல் குளத்தைக் காட்சிப்படுத்தும் அஞ்சல் அட்டை***

**ரோலண்ட் குவெக்**

***1970களின் நடுப்பகுதி***

***வண்ணம் தீட்டப்பட்ட அஞ்சல் அட்டை***

***2008-04929***

***மரீன் பரேட் குடியிருப்புப் பேட்டை அஞ்சல் அட்டை***

***1983***

***வண்ணம் தீட்டப்பட்ட அஞ்சல் அட்டை***

***2008-04604***

*1970களில் உருவான மரீன் பரேட் குடியிருப்புப் பேட்டையும், 1972ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஈஸ்ட் கோஸ்ட் பூங்காப் பணிகளும் கடற்கரையையொட்டிய நில மீட்புப் பணிகளுடன் இணைந்து நடைபெற்றது. 1974-ஆம் ஆண்டு, ஈஸ்ட் கோஸ்ட் பூங்காவை விளையாட்டு, பொழுதுபோக்கு, உணவக வசதிகளுடன் கூடிய கடற்கரையை ஒட்டிய விடுமுறைக்கால விடுதியாக (beach resort) மாற்ற அரசு திட்டமிட்டது. பூங்காவில் 1976 ஆம் ஆண்டு ஒரு நீச்சல் குளம்*

*அமைக்கப்பட்டது. இன்றும், ஈஸ்ட் கோஸ்ட் பூங்கா மக்களிடையே பொழுதுபோக்குத் தலமாகப் பிரபலமடைந்துள்ளது.*

## 3305

***1976ஆம் ஆண்டின் சிங்கப்பூர் நகரக் காட்சி***

***லை குய் ஃபாங்***

***1977***

***ஆயில் பெயின்டிங்' பாணி ஓவியம்***

***2007-01093***

***சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் இஸ்தானா தொகுப்பிலிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து அடுத்த பத்தாண்டுகளில் சிங்கப்பூர் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் காட்சிப்படுத்துகிறது குய் ஃபாங் வரைந்த இந்த ஓவியம். மரினா சென்டர் உருவாக்கத்திற்கு பிண்ணனியாக அமைந்த மரினா பே நிலமீட்பின் கட்டங்கட்டமான வளர்ச்சிப் பணிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

## 3306

***மரினா ஸ்கொயர் அடித்தளம், கட்டுமானம்***

***லை குய் ஃபாங்***

***1980***

***'ஆயில் பெயின்டிங்' பாணி ஓவியம்***

***2007-01094***

***சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் இஸ்தானா தொகுப்பிலிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*லை குய் ஃபாங் வரைந்த முன்பு கண்ட நகர உருவ ஓவியம் மரினா பே நில மீட்புப் பணிகளின் தொலைதூரக் காட்சிகளை வெளிப்படுத்திய நிலையில், இந்த ஓவியம், மரினா பே பகுதியில் நடைபெறும் கட்டுமான பணிகளைக் காட்சிப்படுத்துகிறது. சில ஆண்டுகளில், இந்த இடத்தில் மரினா ஸ்கொயர் ஷாப்பிங் மால், பல பெரிய ஹோட்டல்கள் ஆகியவையும் திறக்கப்பட்டன. இது சிங்கப்பூரின் வளர்ச்சியில் முக்கியமான கட்டமாகும்.*

# 3400

## *பாகம் 4*
## *மணல் இடமாற்றம்*

*சிங்கப்பூர் பல ஆண்டுகள் மேற்கொண்ட நில மீட்பு நடவடிக்கைகள் நாட்டின் மேம்பாட்டுக்கும்  உள்கட்டமைப்புத் தேவைக்கும்  ஆதரவு தந்துள்ளன. அத்தகைய வளர்ச்சியை நிலைநாட்ட நில மீட்டெடுப்பில், சிங்கப்பூர் மிகவும் நிலைத்தன்மையான அணுகுமுறைகளை உருவாக்கி ஏற்றுக்கொண்டுள்ளது.*

*நில மீட்புப் பணியில் மணல் வகிக்கும் பங்கை, உள்ளூர் கலைஞர் சிம் சியினின் 'ஷிஃப்டிங் சாண்ட்ஸ்' புகைப்படத் தொடர், ஆவணப்படுத்துகிறது. அவரது தொடரிலிருந்து ஒரு பகுதி, இங்கே வழங்கப்படுகிறது. 2040களில் நிறைவடையும் போது, உலகின் மிகப்பெரிய தானியங்கி, அறிவார்ந்த மற்றும் நிலையான கொள்கலன் முனையமான  துவாஸ் துறைமுகத்துக்கான நிலத்தை மீட்டெடுப்பதிலும் கட்டுவதிலும் சிங்கப்பூரின் தற்போதைய திட்டங்களை எடுத்துக்காட்டுகிறது. துவாஸ் துறைமுகத்திலும், சிங்கப்பூரின் எதிர்கால மேம்பாடுகளிலும் நிலையான அணுகுமுறையை உறுதி செய்வதன் முக்கியத்துவம் ஆராய்ச்சி அடிப்படையிலான புதுமையான தீர்வுகளைத் தொடர வழிவகுத்துள்ளது.*

# 3401

## 1.

***மணல் இடமாற்றம் #5***

***சிம் சி யின்***

***மார்ச் 2017***

***பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது***

***2023-00186***

*இந்தப் படம் ‘உற்பத்தி செய்யப்படும் மணலாகக் கருதப்படும்’ நொறுங்கிய கருங்கற்கள் படகுகளில் சிங்கப்பூரின் ஈஸ்ட் கோஸ்டுக்கு வருவதைக் காட்டுகிறது. நில மீட்புப் பணிகள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மணலைச் சார்ந்திருந்தாலும், சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் செமாகாவ் குப்பை நிரப்பும் நிலத்திலிருந்து வரும் சாம்பல் உள்ளிட்ட மாற்றுப் பொருள்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். இது துவாஸ் நில மீட்புப் பணிகளில் சோதனை முயற்சியாகப் பயன்படுத்தப்படும்.*

## 2.

***மணல் இடமாற்றம் #9***

***சிம் சி யின்***

***ஏப்ரல் 2017***

***பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது***

***2023-00189***

*2040களில் கட்டி முடிக்கப்படவுள்ள துவாஸ் துறைமுகம் உலகின் மிகப்பெரிய கப்பல் கொள்கலன் முனையமாக இருக்கும் என திட்டமிடப்பட்டுள்ளது. இது பகுதியளவு மீட்கப்பட்ட நிலத்தில் கட்டப்படும். இப்புகைப்படம், துவாஸ் வட்டார நில மீட்புத் தளத்தில்*

*புதிய செயற்கை நிலத் தொகுதிகள் ஒன்றிணைக்கப்படுவதைக் காட்டுகிறது.*

**3.**
***மணல் இடமாற்றம் #17***
***சிம் சி யின்***
***மார்ச் 2017***
***பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது***
***2023-00193***

**4.**
***மணல் இடமாற்றம் #18***
***சிம் சி யின்***
***மார்ச் 2017***
***பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது***
***2023-00194***

*நீர் அடிக்கட்டுமானப் பேழைகள் நில மீட்புப் பணிகளுக்கான கடல் சுவர் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரு புகைப்படங்கள், துவாஸ் வட்டாரத்தில் உள்ள தளத்தில் நீர்அடிக்கட்டுமானப் பேழைகளைத் வடிவமைக்கும் செயல்முறையைக் காட்டுகின்றன. ஒவ்வொரு பேழையும், 10 மாடி வீடமைப்பு வளர்ச்சிக் கழகக் கட்டடத்தின் அளவைக் கொண்டது. இதனைக் கட்டுவதற்கு 12 மணிநேரச் சுழற்சியில் 800 ஊழியர்களின் உழைப்பில், ஏறத்தாழ ஒரு வாரகாலமாகிறது.*

**5.**
***மணல் இடமாற்றம் #2***
***சிம் சி யின்***

*மார்ச் 2017*

*பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது*

*2023-0018*

*மணல் இடமாற்றம் #4*

*சிம் சி யின்*

*பிப்ரவரி 2017*

*பருத்தித் துணிக் காகிதத்தில் அச்சிடப்பட்டது*

*2023-00185*

# 3402

***குடியேற்றம்: சிங்கப்பூர் டர்ஃப் கிளப், சிங்கப்பூரின் மறுமேம்பாடுகளின் கதை***

*நில மீட்பு, சிங்கப்பூரில் நிலப் பயன்பாட்டை மேம்படுத்தும் பல்வேறு வழிகளில் ஒன்று. மறுசீரமைப்பு நகர வளர்ச்சி ஆகியவை ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்டு, நிலப் பயன்பாடு மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. அத்துடன் மக்களின் பொதுவான நன்மைக்காக அதனைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதும் உறுதி செய்யப்படுகிறது. இந்தப் பிரிவு சிங்கப்பூர் டர்ஃப் கிளப், சிங்கப்பூரின் மறுமேம்பாட்டு வரலாற்றுடன் பின்னிப்பிணைந்த கதையை எடுத்துக்காட்டுகிறது.*

## 1.

***ஃபேரர் பார்க் ரேஸ் கோர்ஸ்***

***20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி***

***அஞ்சல் அட்டை***

***1995-03683***

## 2.

***சீன ஏற்றுமதி வெள்ளிக் கிண்ணம்***

***1875***

***வெள்ளி***

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப்பிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது***

## 3.

***புக்கிட் தீமா டர்ஃப் கிளப் - வான்வழிக் காட்சி***

***1950களில்***

***அஞ்சல் அட்டை***

***2001-04391***

**4.**

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப், புக்கிட் தீமா***

*1970களில்*

*அஞ்சல் அட்டை*

*2008-03914*

*சிங்கப்பூர் ஸ்போர்டிங் கிளப் 1924ஆம் ஆண்டில் சிங்கப்பூர் டர்ஃப் கிளப் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தொடக்ககாலப் பொது வீடமைப்புகள் திட்டதிற்காக 1927ஆம் ஆண்டு, டர்ஃப் கிளப் தனது ஃபேரர் பார்க் நிலத்தைச் சிங்கப்பூர் மேம்பாட்டு அறக்கட்டளைக்கு (தற்போதைய வீடமைப்பு வளர்ச்சிக் கழகம்) விற்பனை செய்தது. பின்னர், கிளப் புக்கிட் தீமாவிலிருந்த ஒரு பழைய தோட்டத்தை வாங்கி, அங்கு 1933ஆம் ஆண்டு புதிய ரேஸ் கோர்ஸைத் திறந்தது. ஸ்வான்- மேக்லாரன் வடிவமைப்பில், விரிவான, மேம்பட்ட வசதிகளுடன் மூன்றுமாடிக் கட்டடமாக அமைக்கப்பட்டது.*

**5.**

***சிங்கப்பூர் டர்பி***

***1988***

***வெள்ளி முலாம், பளிங்குக் கல்***

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப்டமிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*சிங்கப்பூர் டெர்பி எனும் பந்தயம் 1880 முதல் 1910 வரை இருந்த சிங்கப்பூர் ஸ்போர்ட்டிங் கிளப் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது 1959ஆம் ஆண்டு புக்கிட் தீமா வளாகத்தில் புதுப்பிக்கப்பட்டு, பின் 1999ஆம் ஆண்டு தடம் மூடப்படும் வரை முக்கியப் பந்தயமாக விளங்கியது.*

**6.**

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப் விளம்பரம்***

***1990களின் இறுதி***

***காகிதம்***

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப்பிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது***

**7.**

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப் டிரான்ஸிட்லிங்க் கார்டு கலெக்டர்ஸ் பேக்***

***1999***

***காகிதம்***

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப்பிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*1993ஆம் ஆண்டு புக்கிட் தீமாவிலிருந்த டர்ஃப் கிளப், அவ்விடம் குடியிருப்பு வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டதையடுத்து 1999 ஆம் ஆண்டில் கிராஞ்சி பகுதியிலுள்ள புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது. அண்மையில் 2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவ்விடத்தில் பொது வீடமைப்புத் திட்டம் தொடங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது - ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்குப்பின் வரவுள்ள, 20,000 வீடுகள் கொண்ட குடியிருப்புப்பேட்டையாக இது அமையும்.*

**8.**

***சிங்கப்பூர் தங்கக் கிண்ணம்***

***வெள்ளி தங்கம், மரம்***

***சிங்கப்பூர் டர்ஃப் கிளப் மூலம் கடனாகப் பெறப்பட்டது***

*182 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட சிங்கப்பூர் டர்ஃப் கிளப் 2027-இல் மூடப்படும் என கடந்த 2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. கிராஞ்சியிலுள்ள அந்த நிலம் சிங்கப்பூரின் விரிவான மறுமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டவும், வர்த்தகம், பொழுதுபோக்கு உள்ளிட்ட பிறவற்றுக்காகவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10,000 பார்வையாளர்கள் முன்*

*நடைபெற்ற மாபெறும் சிங்கப்பூர் தங்கக் கிண்ணப் பந்தயத்துடன் சிங்கப்பூரில் குதிரைப் பந்தயம் நிறைவுக்கு வந்தது.*

# 4000

## *அத்தியாயம் 4*
## *பலதர மக்களின் வருகை*

*சிங்கப்பூரை யார் கட்டியெழுப்பி இன்றைய நிலைக்கு வடிவமைத்தது? இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது என்பது 19ம் நூற்றாண்டில் இங்கு ஏற்கனவே இருந்த உள்ளூர் சமூகங்களையும், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வேறுபட்ட அலைகளாக இந்த கரைகளுக்கு வந்து சேர்ந்தவர்களையும் இங்கு குடியேறிய அவர்களின் வம்சாவளியினரையும் அங்கீகரிப்பதாகும்.*

*உலக வர்த்தகப் பாதைகள் சங்கமிக்கும் இடத்தில் சிங்கப்பூர் உள்ளதாலும் மற்ற இடங்களை ஒப்பிடுகையில் அதன் செழுமையும் அதிக வாய்ப்புகளை தேடி வந்த பலதரப்பட்ட பின்புலங்களைக் கொண்ட மக்களைக் கவர்ந்தது. 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டு முழுவதும் கடல்வழிப் பாதைகளில் பயணம் செய்து ஜான்ஸ்டன்'ஸ் பியர் அல்லது கெப்பல் துறைமுகம் வழியாக 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் பலர் வந்தனர். சிலர் இந்த இடத்திற்கு முதல் வகுப்பு கப்பல்களில் பயணம் செய்திருந்தாலும், பெரும்பாலானோர் மலிவான கட்டண இருக்கை பயணிகள். அவர்கள் தங்கள் உடைகளை தாண்டி மிகச்சிலவற்றோடு, ஒரு சிறந்த எதிர்காலத்திற்கான நம்பிக்கையுடன் வந்தனர். நாட்டை மேம்படுத்துவது , இயங்கச் செய்வது மற்றும் முன்னேற்றுவதற்கான கனவை நோக்கி புதிதாக வந்தவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களின் உழைப்பை, திறமைகளை பங்களித்தார்கள்.*

*இங்கு காட்டப்பட்டுள்ள முதல் தலைமுறை குடியேறிகளின் கதை 19ம் நூற்றாண்டிலிருந்து தற்போது வரை பரந்துள்ளது. இந்த தனிமனிதர்கள்*

*தங்களின் தினசரி வாழ்க்கை மற்றும் வேலைகளால் கூட்டாக சிங்கப்பூரின் தனித்துவமான நில அமைப்பையும் பல கலாச்சார சமூக அடையாளத்தையும் வடிவமைத்தார்கள்.*

# 4100

## *பாகம் 1*
## *தொடக்ககால பல கலாசார மக்கள்*

*19ஆம் நூற்றாண்டிலிருந்து, இங்கு பிரிட்டிஷ் வர்த்தக மையம் நிறுவப்பட்டதை தொடர்ந்து, சிங்கப்பூரில் பல்வேறு இன மக்கள் தோளோடு தோள் கொடுத்து பரபரப்பான துறைமுகத்தில் வேலை செய்தது அடிக்கடி குறிப்பிடப்பட்டது..*
*ஆங்கிலேய ஆய்வாளரும் எழுத்தாளருமான இசபெல்லா எல். பெர்ட் 1883ஆம் ஆண்டில் சிங்கப்பூரைப் பற்றி எழுதினார். "நகரம் வண்ணங்களுடனும் வண்ணமயமான ஆடைகளோடும் ஜொலிக்கிறது. லெவன்ட் முதல் சீனா வரை கீழை தேச ஆடைகள் தெருக்களில் மிதக்கின்றன – பட்டு, சாடின், பிரோகேட் மற்றும் வெள்ளை மஸ்லின் உடைகள் ஆடைகள்... பர்சிகள் தூய வெள்ளையில், யூதர்கள் மற்றும் அரேபியர்கள் அடர் செம்மையான பட்டு உடைகளில்; கிளிங்கர்கள் துருக்கிய சிவப்பு மற்றும் வெள்ளையிலும்; மும்பை வியாபாரிகள் பெரிய வெள்ளை தலைப்பாகைகளில் ... மலேசியர்கள் சிவப்புக் கைலிகளில், சீக்கியர்கள் தூய வெள்ளை மதராஸ் மஸ்லினில்... மற்றும் அனைத்து வகையான சீன மக்கள், நீலம் அல்லது காக்கி நிற பருத்தி உடையணிந்த கூலிகள் தொடங்கி, உயர் ஜரிகை பட்டாடை உடுத்திய செல்வந்த வியாபாரிகள் வரை..."**

*19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சிங்கப்பூரின் பன்முகத்தன்மை புகைப்படங்கள் மூலமும் கலைகள் மூலமும் ஆவணபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் படைப்புகள் கிழக்கத்தைய கண்ணோட்டத்தைக் பெரும்பாலும் காட்டினாலும் காட்டப்பட்டவை உள்ளத்தை கவர்வதாக இருந் தது.*

*இந்த மேற்கோளில் உள்ள ''கிளிங்கர்கள்'' மற்றும் ''சீனமேன்'' என்ற சொற்கள் தெற்கு இந்தியர்களையும் சீனர்களையும் குறிப்பதாக இருந்தாலும், இப்போது அவை பொதுவாக அவமரியாதையானவை என்று கருதப்படுகின்றன மற்றும் தேசிய அருங்காட்சியகத்தில் வரலாற்று ஆவணங்கள் தவிரப் வேறதிலும் பயன்படுத்தப்படவில்லை.

# 4101

***வருகைகளும் புறப்பாடுகளும்***

***காணொளி*** *(3 நிமிடம் 38 விநாடிகள்)*

*ஆவணங்களில் பதிவானவையும் தனிப்பட்டோரின் அனுபவங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட, இந்த காணொளி கடல்கடந்து வந்த பயணிகளின் சிறு தருணங்களையும் சிங்கப்பூருக்கு அவர்கள் வந்திறங்கியதையும் இங்கிருந்து புறப்பட்டதையும் காட்சிப்படுத்துகிறது.*

*நேர்காணல்களுக்கு நன்றி: வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்,*
*படங்கள் அன்பளிப்பு: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு.*
*ஆவணக்*
*காட்சிகளுக்கு அனுமதி வழங்கிய அமைப்புகளுக்கு நனறி:*
*தி பென் மியூசியம்*
*ஹன்ட்லி ஃபிலிம் ஆர்கைவ்ஸ்*
*பெரிஸ்கோப் ஃபிலிம்*

## 1.

***பயணப் பை***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***தோல், உலோகம்***

***2000-07311***

*இந்தப் பையில் உள்ள குறிப்பில், இது Mr. Koh Ah Kow என்பவரின் பயணத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்*

*பினாங்கு செல்லும் பயணத்தில் SS Kedah என்ற ஸ்ட்ரெய்ட்ஸ் ஸ்டீம்ஷிப் நிறுவனத்தின் கப்பலில் பயணித்தார். இந்த நிறுவனம் 1890ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நிறுவனமான Mansfield & Company மற்றும் சிங்கப்பூரை சார்ந்த ஸ்ட்ரெய்ட்ஸ் சீன வணிகர்கள் டான் ஜியாக் கிம், டான் கியோங் சைக் மற்றும் லீ செங் யான் ஆகியோரின் கூட்டு முயற்சியில் நிறுவப்பட்டது. இதன் தொடக்கக் காலங்களில், இந்த நிறுவனம் மலாயா தீபகற்பத்தின் மேற்குக் கரையில் டின் ஆர், விவசாயப் பொருட்களைக் கப்பல் மூலம் போக்குவரத்து செய்வதில் பெரும்பாலும் நிபுணத்துவம் பெற்றது. மேலும் சீனாவில் இருந்து ஊழியர்களின் பயணத்திற்கான வசதியையும் முனைப்புடன் செய்தது.*

**2.**

***ஜோன்ஸ் பிரதர்ஸ் & கோ பயண டிரங்க்***

***19ஆம் நூற்றாண்டின் முடிவிலிருந்து 20ஆம் நூற்றாண்டு ஆரம்பக்காலம் வரை***

***உலோகம்***

***2014-00292***

***Mrs Kum Kew Wells வழங்கிய பரிசு***

**3.**

***பயண டிரங்க்***

***1930கள்***

***உலோகம்***

***FL-0159***

*பொதுவாக 19ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை பயண டிரங்க்குகள் மரம் அல்லது உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன. கப்பல், ரயில் மற்றும் சாலை வழி மேற்கொள்ளப்படும் கடுமையான பயணங்களில் சேதமடையாமல் நிலைத்திருக்கும் வகையில் திடமான பூட்டுக்களுடன் இருந்தன. மிகவும்*

*திடமான டிரங்க்குகள் நீரால் பாதிக்கப்படாதவையாக இருந்தன. மேலும் மற்ற பயணப் பொருட்கள் அவற்றின் மேல் அடுக்கி வைக்கப்பட்டால் அவற்றை பாதுகாக்கும் பொருட்டு மேல் பகுதியில் பொறி அல்லது ரன்னர்கள் போன்ற பகுதிகள் இருந்தன.*

**4.**

***பயண டிரங்க்***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***உலோகம்***

***2002-00996***

***Seah Yee Chuan வழங்கிய பரிசு***

**5.**

***பயண டிரங்க்***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***உலோகம்***

***1994-00654***

***Fok Kwok Onn வழங்கிய பரிசு***

*இந்த இரு பயண டிரங்க்குகளும் சிங்கப்பூருக்குப் பயணம் செய்த பெண்களுக்குச் சொந்தமானவை. அவர்கள் தங்களின் தனிப்பட்ட பொருட்களை சேமிக்கவும் இவற்றைப் பயன்படுத்தினர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பல சீன மற்றும் இந்தியப் பெண்கள், முன்னதாகவே இங்கு குடிபெயர்ந்த ஆண்களுடன் ஆண்களைத் திருமணம் செய்துகொண்டு , சிங்கப்பூருக்கு வந்தனர்.*

**6.**

***பயண டிரங்க்***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

**உலோகம்**

***XXXX-09517***

*இந்த டிரங்க், அதன் தட்டில் காணப்படுவதுபோல, நன்கு பயணம் செய்த நெதர்லாந்தைச் சேர்ந்த ச்கோகர்ஸ் என்பவருக்குச் சொந்தமானதாக இருக்கலாம். ச்கோகர்ஸின் தொக்கில் பல ஐரோப்பிய ஹோட்டல்களின் ஸ்டிக்கர்களும் காணப்படுவதால் அவர் செல்வந்தராக இருக்கலாம் எனத் தெரிகிறது. . 1928ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் சுரபாயாவில் உள்ள ஒரு தையல்காரருக்குக் கொடுக்கப்பட்ட ஆடைகளின் நீண்ட பட்டியலும் உள்ளது – அதில் பேண்டலூன் (அல்லது கால்சட்டை) மற்றும் ஜாக்கெட்டுகள் உள்ளிட்டவை அடங்கும்.*

**7.**

***பயணப் பெட்டி***

***1900***

**தோல், பித்தளை**

***1992-00441-001***

**8.**

***பயணப் பெட்டி***

**தேதியிடப்படாதது**

***மரம்***

***2000-07279***

**9.**

***பத்திரிகை ஓட்டின் மீதமுள்ள தடங்களுடன் கூடிய பயண டிரங்க்***

**தேதியிடப்படாதது**

**உலோகம்**

***1996-00002***

***Goh Kuan Leong* வழங்கிய பரிசு**

## 10.

***ரத்தான் பயணப்பை***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***ரத்தான்***

***1995-02511***

***Yee Koon Seng வழங்கிய பரிசு***

## 11.

***பயணப் பெட்டி***

***1930கள்***

***மூங்கில்***

***XXXX-09233***

*இந்தப் பயண பெட்டிகள், டிரங்க் மற்றும் சூட்கேஸ் சீனாவிலிருந்து சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்தவர்கள் பயன்படுத்தியவை. மேலும் குடிபெயர்ந்தவர்களின் சமூக வகுப்புகளைப் பற்றிய ஆதாரமாக அவை விளங்குகின்றன. மரப்பெட்டி மற்றும் சாதாரண உலோக பெட்டிகள் மலிவான விலையிலும், அலங்கரிக்கப்பட்ட மூங்கில் பெட்டி, தோல் அம்சங்களுடன் கூடிய மேம்பட்ட ரகப் பெட்டிகள், அதிக விலையிலும் இருந்திருக்கலாம். பிரம்பு பயணப் பெட்டி பெரும்பாலும் வணிகர்கள் வைத்திருந்திருக்கலாம் . ஏனெனில் ஆரம்ப சூட்கேஸ்கள் என்பவை "சூட்டுகள்" எடுத்துச் செல்லும் பெட்டிகளாகவே இருந்தன.*

*புலம்பெயர்ந்தோர், குறிப்பாக ஊழியர்கள் அதிக உடமைகளைக் கொண்டிருக்கவில்லை. உடைகள், படுக்கை, பயணத்திற்குத் தேவையான உணவு உள்ளிட்டவற்றை மட்டுமே கொண்டு வந்தனர். இது அவ்வா று குடிபெயர்ந்தோர் கொண்டு வந்த சில*

*பொருள்களையும், குடிநுழைவின்போது அவர்கள் பெற்ற சில ஆவணங்களையும் காட்டுகிறது.*

## 4102

### 1.

***குயேஸ் என்றழைக்கப்படும் இந்தியப் போர்வை***

### 2.

**பயணத்திற்குத் தேவையான அரிசி**

*குறைந்த விலையுள்ள பயணச்சீட்டுகளுடன் பயணிப்போர் தங்களுக்கான உணவுகளைத் தாங்களே சமைத்துக்கொள்ள வேண்டும்.*

### 3.

**படுக்கையாகப் பயன்படுத்தப்பட்ட கோரை**

### 4.

***சாவோஜூ,சீனாவின் கிழக்கு குவாங்டாங் பகுதியைச் சேர்ந்த சட்டை***

***1920கள்***

***கைத்தறி***

***G-1067***

### 5.

***சீன பாணி சீட்டுக்கட்டு***

***தேதி குறிப்பிடப்படவில்லை***

***காகிதம்***

***XXXX-08936***

*20வது நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் வரை, கப்பலில் பயணம் செய்யும்போது பொழுதுபோக்க சீட்டுக் கட்டுகளையும் எடுத்து வந்தனர்.*

## 6.

*பெரின்சுலார் அண்டு ஒரியண்டல் ஸ்டீம் நேவிகேஷன் கம்பனியின் (P&O) பயணப்பை குறியீட்டு அட்டை*

*20ஆம் நூற்றண்டின் தொடக்கம்*

*காகிதம்*

*2008-01117*

## 7.

*சீனாவின் ஃபுஜியன் பகுதியைச் சேர்ந்த ரிக்ஷாக்காரர் சிம் ஆ போங்கிற்கு அளிக்கப்பட்ட நுழைவுச் சான்றிதழ்.*

*1938*

*காகிதம்*

*XXXX-02623*

## 8.

*இந்தோனீயாவிலிருந்து சிங்கப்பூருக்கு வந்த ஹோ ஞான் ஜோனுக்கு தரையிறங்க வழங்கப்பட்ட அனுமதி அட்டை*

*11 மார்ச் 1940*

*மறுஉருவாக்கம்*

*2002-01018*

*சாங் கிம் ஹுவாவின் பரிசு*

## 9.

*சீனாவின் குவாங்டாங் பகுதியைச் சேர்ந்த அமா ஆ சூய் ஹீ என்பவருக்கு சிங்கப்பூர்ச் சீனத் தூதரகம் வழங்கிய பதிவுச் சான்றிதழ்.*

*1950களில்*

*காகிதம்*

*1994-05027*

***யாப் கம் சுங்கின் பரிசு***

*இன்றைய காலகட்டத்தைப் போலவே, அக்காலப் பயணிகளும் சிங்கப்பூருக்குள் நுழைவதற்குப் போக்குவரத்து அனுமதி பெற வேண்டியிருந்தது. 1928 முதல், காலனித்துவ அரசாங்கம் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த விதிமுறைகளை அறிமுகப்படுத்தியது. அதன்படி 1933 முதல், புதிதாகக் குடியேறுபவர்கள் தரையிறங்கும் அனுமதியைப் பெற கட்டணம் செலுத்த வேண்டியது கட்டாயமானது. அந்த அனுமதிச் சீட்டை ஒரு மாதத்திற்குப் பிறகு, சான்றிதழாக மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. சீனாவிலிருந்து குடியேறியவர்கள், சிங்கப்பூரில் உள்ள சீனத் தூதரகத்தில் பதிவு செய்து, பதிவு சான்றிதழ் பெற வேண்டியதும் அவசியமாக இருந்தது*

## 10.

***இந்திய ஐந்து ரூபாய் நோட்டு***

***1930கள்–1940கள்***

***காகிதம்***

***NA-0058***

## 11.

***சீன ஐந்து யுவான் நோட்டு***

***1935***

***காகிதம்***

***NA-0149***

## 12.

***ஸ்ட்ரெய்ட்ஸ் செட்டில்மென்ட்சின் ஐந்து டாலர் நோட்டு***

*1916*

***காகிதம்***

*1998-00376*

## 13.

***ஜார்ஜ் வி இந்திய ரூபாய் நாணயம்***

*1917*

***வெள்ளி***

*N-0052*

## 14.

***யுவான் ஷிகாய் சீன டாலர்***

*1914*

***வெள்ளி***

*N-0032-A*

## 15.

***எட்வர்டு VII ஸ்டிரெயிட்ஸ் செட்டில்மெண்ட்ஸ் டாலர்***

*1908*

***வெள்ளி***

*N-0007-A*

*காலனித்துவ காலத்தில் சிங்கப்பூரில் பல்வேறு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. வேவ்வேறு நாடுகளிலிந்து குடியேறுவோர் வேலை கிடைக்கும்வரை செலவு செய்வதற்காகத் தங்களுடைய சொந்த நாட்டின் பணத்தைக் கொண்டு வந்தனர்.*

# 4103

*இந்தப் படங்கள் தொடக்க காலத்திலிருந்த சிங்கப்பூரின் பன்முகத்தன்மையைக் காட்டுகின்றன. 1819-ல் பிரிட்டிஷ் வர்த்தக மையம் நிறுவப்படுவதற்கு முன்பே, இங்கு மலாய் மக்கள், 'ஓராங் லாவட்' (மலாய் மொழியில் "கடல் மக்கள்"), சில சீன நாட்டினரும் இருந்தனர். ஆனால் காலனித்துவ காலத்திற்கு பிறகு பல நாடுகளிலிருந்து வரும் மக்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது.*

## 1.

***உராங்க் லாவட் நாணய மூழ்குநர்களின் புகைப்படம்***

**மேனர்ட் ஒவென் வில்லியம்ஸ்**

*1937*

**காகிதம்**

***2011-00946***

*உராங்க் லாவட் மக்கள் படகுகளில் வாழ்ந்தோர், சிங்கப்பூர் நதிகள் அவர்களது பூர்விக வீடுகளாக இருந்தன. 19 ஆம் நூற்றாண்டில் சிங்கப்பூர் பரபரப்பான துறைமுகமாக மாறியதைத் தொடர்ந்து, ஒராங் லாட் மக்களும் தங்கள் நீச்சல் திறமையைப் பயன்படுத்திப் பணம் ஈட்டி தங்கள் தேவைகளை ஈடுகட்டிக் கொண்டனர். உராங்க் லாட் சிறுவர்கள் பயணிகள் வீசும் நாணயங்களை எடுக்க நீந்துவார்கள். சிலர் பயணிகளைக் கவர கப்பலிலிருந்து குதித்து நீச்சலடிக்கும்போது சுருட்டு புகைப்பது, துடுப்பு-பந்து விளையாடுவது போன்றவை மூலம் மகிழ்வித்தனர்.*

## 2.

***பி & ஓ துறைமுக மேடை, சிங்கப்பூர் மக்களைக் காட்டும் படம்***

***ஜோசஃப் எட்வர்ட் அடோல்ஃப் ஸ்பியர்***

***சுமார் 1920கள்***

***வண்ண அச்சு***

***2007-50835***

*டச்சு நாட்டின் வரகலைஞர் ஜோ ஸ்பியரின் இந்தப் படம், கெப்பல் துறைமுகத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்களைக் காட்டுகிறது. ஸ்பியர், பகட்டான இக்கதாபாத்திரங்களின் இன வேறுபாடுகளைக் காட்ட வெவ்வேறு சரும நிறங்களைப் பயன்படுத்தியுள்ளார்.*

## 3.

***'ஜர்னல் டெஸ் வோயாஜ்ஸ்' எனும் பயணக் கட்டுரைப் பத்திரிகையிலிருந்து "தூரக் கிழக்கின் இனவியல்: சிங்கப்பூர் வகைகள்" எனும் தலைப்பில் அமைந்த கிறிஸ்டியன் வில்ஹெல்ம் ஆல்லர்ஸின் வரைபடங்களின் மறுஉருவாக்கம்***

***1913***

***கையால் வண்ணம் தீட்டிய அச்சு***

***2017-00664***

*பிரஞ்சு பத்திரிகையின் சிங்கப்பூர் மக்களைக் காட்டும் படங்கள் (மேற்பிறம் இடமிருந்து) துறைமுகத்தில் பணியாற்றும் இளம் ஆடவர், ஒரு மூத்த மாலாய் மீனவர், வெயில் நாளில் நின்று உரையாடும் இரு இளம் மாலாய் ஆடவர்கள், ஒரு இந்தியக் காவல்துறை அதிகாரி.*

## 4.

***கார்டே டி விசிடே புகைப்படங்கள்***

***ஆகஸ்ட் சாட்ச்லர்***

***1860கள்***

***ஆல்புமன் அச்சுப்படம்***

***2017-01033-002, 2017-01033-004, 2018-00702-005, 2018-00702-006, 2018-00702-008***

*பல ஐரோப்பியர்கள் சிங்கப்பூரில் வசிக்கும் மக்களில் பல தரப்பினரைப் புகைப்படங்கள் மூலம் படம்பிடிக்க விரும்பினர், பெரும்பாலும் அவர்களின் தோற்றத்தை மேம்படுத்திக் காட்டும் வண்ணம் படம்பிடித்தனர். கார்டே டி விசிடே (பிரெஞ்சு மொழியில் "முகவரி அட்டை" என்று பொருள்) எனும் இந்தப் புகைப்பட வடிவம் ஐரோப்பியர்கள் தங்களின் முகவரி அட்டைகளாகப் பயன்படுத்தவும், நண்பர்கள், குடும்பத்தினருக்கு அனுப்பவும், நினைவுப் பொருளாக வைத்திருக்கவும் காட்சிப்படுத்தவும் ஏதுவாக அமைந்தது. எனவே இப்புகைப்படங்கள் ஐரோப்பியர்களின் பார்வையில் சிங்கப்பூரில் வசிக்கும் மக்களின் பன்முகத்தன்மையைக் காட்டுகின்றன.*

**5.**

***கார்டே டி விசிடே புகைப்படம்***

***ஹென்றி ஷூரன்***

***1874***

***ஆல்புமன் அச்சு***

***2020-00588***

*இதுபோன்ற சில கார்டே டி விசிடே புகைப்படங்கள், 'அமாஹ்' எனப்படும் பராமரிப்புப் பணியாளரும் நெருக்கமாக இருப்பதைக் காட்டுகிறது. இது குடும்பத்தினர் நினைவுப்பொருளாக வைத்திருப்பதற்காக எடுத்திருக்கலாம்.*

**6.**

***"சிங்கப்பூரின் பூர்வீக மக்கள்" எனும் தலைப்பில் அஞ்சல் அட்டை***

***ஜி.ஆர். லாம்பர்ட் & கோ.***

***19ஆம் நூற்றாண்டு***

***காகிதம்***

*2011-02853*

*இந்த அஞ்சல் அட்டை சிங்கப்பூர்ப் புகைப்பட நிலையங்களிலும் தெருக்களிலும் எடுக்கப்பட்ட படங்களை காட்டுகிறது. இதில் வெவ்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் உள்ளனர்.*

## 7.

***ஒரு மலாய்க் குடும்பம்***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

*XXXX-15375*

## 8.

***ஒரு ஸ்ட்ரைட்ஸ் சீன குடும்பம்***

***1910களில்***

*ஜெலட்டின் வெள்ளி அச்சு*

*2015-00736*

***லீ கிப் லீ இணையரின் பரிசு***

***பெரனக்கன் அரும்பொருளகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டது.***

## 9.

***ஒரு இந்தியக் குடும்பம்***

***ஜி. ஆர். லாம்பர்ட் & கம்பனி***

***சுமார் 1890***

***காகிதம்***

*2001-03515*

# 4200

## *பாகம் 2*
## *நகர உருவா க்கம்*

*1819க்குப் பிந்தைய சிங்கப்பூர் உள்கட்டமைப்பின் பெரும்பகுதி இந்தியா மற்றும், சீன நாட்டிலிருந்து வந்த குடியேற்ற தொழிலாளர்களால் கட்டியெழுப்பப்பட்டது. இதில் சிலர் விருப்பப்படி வந்தவர்கள், பலர் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவோ குற்றவாளிகளாகவோ அழைத்துவரப்பட்டனர். குறிப்பாக 1825-க்கும் 1873-க்கும் இடைப்பட்ட காலத்தில் சாலைகளைப் பழுதுபார்த்தல், பாலங்கள் கட்டுதல், சுரங்கத்தில் கல் உடைப்பது உள்ளிட்ட மிகவும் கடினமான, உடலுழைப்பு தேவைப்படும் பணிகளை இந்தியக் குற்றவாளிகள்கள் மேற்கொண்டனர். முதலில் குடியேறியவர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்தபோதிலும், 1920-கள் முதல் 1930-கள் வரை சீன நாட்டிலிருந்து வந்த ‘சாம்சுய்’ பெண்களின் வருகை அதிகரித்தது., 1970-களில் வரைகூட அவர்களை கட்டுமானத் தளங்களில் பொதுவாகத் காணமுடிந்தது.*

*இந்த ஆரம்பகால புலம்பெயர்ந்தோரின் வாழ்க்கை, கடினமான பணிகள், நீண்ட வேலை நேரம், குறுகிய, நெருக்கடியான, சுகாதாரமற்ற ,பகிர்ந்த வாழ்விடங்கள் என சிரமம் மிகுந்ததாக இருந்தது. ஆனாலும், தங்கள் தாய்நாட்டை விட நல்ல ஊதியம் கிடைத்ததால், தங்களின் குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும் எனும் நம்பிக்கையால் உந்தப்பட்டு, மனவுறுதியுடனும், விடாமுயற்சியுடனும் வாழ்ந்தனர்.*

# 4201

***1900 களின் ஒரு கூலி அறையை காட்சிப்படுத்தும் முப்பரிமாண மாதிரி வடிவம்***

***மார் எஜ்வான், எல்மர் கெர்னேல், ஆர்தர் ஆகியோரின் கருத்துருவாக்கம்***

***சுமார் 1983***

***மரம், உலோகம்***

***2020-00340***

*சைனா டவுன் போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட பகுதிகளில், "கூலி கெங்" என்று அழைக்கப்படும் பல தூங்கும் அறைகளாகப் பிரிக்கப்பட்ட குடியிருப்புகள் கட்டப்பட்டன. தொழிலாளர்கள் மாதத்திற்கு $1.50 முதல் $4.50 வரை வாடகை கொண்ட அறையை வாடகைக்கு எடுப்பார்கள். வெவ்வேறு வேலை நேரம் கொண்டவர்கள் இணைந்து வாடகைத் தொகையைப் பகிர்ந்து கொள்வார்கள். இந்த மாதிரிவடிவமைப்பு கூலிகளின் வாழ்க்கை நிலையைச் சித்தரிக்கிறது. அவர்கள் அவ்வறைகளில் ஓய்வெடுப்பது, சாப்பிடுவது, அபின் புகைப்பது போன்றவற்றைக் காணலாம். தாங்கள் எதிர்கொண்ட உடல், மன வலிகளைக் குறைக்க அபின் உதவியது எனத் தொழிலாளர்கள் நம்பினாலும்,அந்த போதைப் பழக்கத்தினால் அவர்களது வேலை, தங்குமிடம் பறிபோகும் அபாயமும் இருந்தது.*

# 4202

## 1.

***அஞ்சல் அட்டை: சாம்சுய் பெண்கள் உணவருந்தும் காட்சி***

***தேதியிடப்படாதது***

***காகிதம்***

***XXXX-12939***

## 2.

***சீனக் கூலிகள் உணவருந்தும் காட்சியைக் காட்டும் புகைப்படம்***

***1900***

***காகிதம்***

***2001-05153***

*தொடக்ககாலத்தில் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் வருமனத்தில் மிகக் குறைந்த பகுதியை மட்டும் செலவழித்து, பெரும்பகுதியை தங்கள் சொந்த ஊருக்கு அனுப்பினார்கள். இதனால், அரிசிச்சோறு, ஊறுகாய் என அவர்களது உணவு எளிமையாக இருந்தது. சிங்கப்பூர் நதியைச் சுற்றி வேலை செய்த சீனக் கூலிகளிடையே ‘பக் குட் தேஹ்’ (ஹொக்கியன் மொழியில் "இறைச்சி எலும்புத் தேநீர்") பிரபலமான உணவாக இருந்தது. இது அவர்களின் உடன்நலனைப் பாதுகாப்பதுடன், உடல் வலிமை தருவதாக அவர்கள் நம்பினர். தற்போது வரை ‘பக் குட் தேஹ்’ சிங்கப்பூரின் பிரபலமான உணவாக இருக்கிறது.*

## 3.

***இந்திய, சீனத் தொழிலாளர் குழுக்கள்***

***ஆகஸ்ட் சக்ட்லர் என்பவருடையது***

***c.1870***

***அல்புமென் அச்சுப்படம்***

***1994-05110***

*இந்தத் தொழிலாளர்கள் ஒரு சுரங்கத்தைத் தோண்டிக் கொண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. படத்தின் இடதுபுறத்தில் வெள்ளை நிற உடையணிந்து ஒரு பெரிய குடையை ஏந்தியுள்ள இந்தியர் 'மாண்தோர்' என்றழைக்கப்பட்ட மேற்பார்வையாளர். வலதுபுறம், வெள்ளை நிற உடையில் குதிரையில் அமர்ந்துள்ளவர் ஐரோப்பிய மேற்பார்வையாளர். இவர்களுடன் ஒப்புநோக்க, பெரும்பாலான தொழிலாளர்கள் கோவணம், 'சரோங்' எனும் துண்டு போன்ற ஆடை, சேலை ஆகியவற்றை மட்டுமே அணிந்துள்ளனர். அவர்கள் வெறுங்காலுடன் வேலை செய்வதையும் பார்க்க முடிகிறது. ஆண்களுடன் குழந்தைகளும் வேலை செய்வதைக் காணலாம்.*

## 4.

***'ஓஷன் பில்டிங்' கட்டுமானப் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களின் புகைப்படம்***

***1920 கள் முதல் 1930-கள் வரை***

***மறுஉருவாக்கம்***

***1994-00114***

*1864ஆம் ஆண்டைச் சேர்ந்த பழைய கட்டுமானங்கள் அகற்றப்பட்டு கோலியர் கீயில் இரண்டாவது 'ஓஷன் பில்டிங்' கட்டப்பட்டது. இதில் சீன, மலாய், இந்திய, இந்தோனீசியத் தொழிலாளர்கள், பிரிட்டிஷ் பொறியாளர்கள் பணியாற்றினர். இப்புகைப்படத்தில் தொழிலாளர்கள் பலர் அக்கட்டட கோபுரத்தின் முன் நிற்பதைக் காணலாம்.*

# 4203

## 1.

***"சிங்கப்பூரில் சாலையைச் சமன்படுத்தும் எருதுவண்டிகள்"***

*1905*

***காகிதம்***

*1991-00494*

## 2.

***“சிங்கப்பூர்ச் சாலைகளைப் பழுதுபார்க்கும் பணிகள்” என்று தலைப்பிடப்பட்ட அஞ்சல் அட்டை***

*c.1910*

***காகிதம்***

*1991-00435*

## 3.

***கட்டுமானத் தளங்களில் பணியாற்றும் ‘சாம்சுய்’ பெண்களின் படங்கள்***

***சமயம்:** 1938–1939*

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

*2007-50928-067, 2007-50928-068, 2007-50928-069*

*கட்டுமானத் தளங் களில் பணியாற்றிய சாம்சுய் பெண்களைக் குறிக்கும் பிரிட்டிஷ் சொல்லாடலான "கான்கிரீட் லிஸீஸ்" எனும் தலைப்பில் அமைந்த புகைப்படத் திரட்டு. இவை சிங்கப்பூரில் பணியாற்றிய ராயல் விமானப்படை விமானியின் ஆல்பத்தில் காணப்பட்டன.*

*சம்சுய் பெண்களில் பெரும்பாலானோர் சீனாவின் தற்கால குவாங்டாங்கின் ‘சான்சுய்’ (கான்டோனீஸ் மொழியில் சாம்சுய்) மாவட்டத்திலிருந்து வந்தார்கள் என்பதால் அவர்கள் ‘சாம்சுய்’ என்று அழைக்கப்பட்டனர். மடித்துபோன்ற தோற்றத்தில் சிவப்பு நிறத்*

*தலைப்பாகை அணியும் வழக்கம் கொண்டிருந்தனர். இது அவர்களை வெப்பம், தூசி ஆகியவற்றிலிருந்து பாதுகாத்ததுடன் வேலையிட விபத்துகளின் வாய்ப்பைக் குறைக்கவும், கட்டுமான தளங்களில் அவர்களை எளிதாக அடையாளம் காணவும் உதவியது. பயன்பாடற்ற 'ரப்பர்' சக்கரங்களினாலான காலணிகளை அணிந்திருந்தனர் என்பதையும் இப்புகைப்படங்கள் காட்டுகின்றன.*

## 4.

***ஐந்து கட்டுமானத் தொழிலாளர் சங்கங்களின் ஆண்டு விழாக்கள், சீன முன்னோடியான லூ பான் அவர்களின் பிறந்த நா கொண்டாட்டம் ஆகியவற்றின் நினைவு மலர்***

***1960***

***காகிதம்***

***2008-01393***

*20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மரப்பட்டறைகளிலும் செங்கற்சூளையிலும் பணியாற்றிய ஊழியர்களின் பணிகள், கடினமான, ஆபத்தான, பணிச்சூழலையும் இப்பக்கங்கள் விவரிக்கின்றன. அந்த நேரத்தில் தொழில்நுட்பம் முன்னேறியிருந்தாலும், அதிக உடல் உழைப்பு தேவைப்பட்டது. தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை செய்தனர். முதலாளிகள் அவர்களது உழைப்பைச் சுரண்டி பெருலாபம் ஈட்டினாலும், ஊழியர்களுக்கு மிகச் சொற்பமான ஊதியம் மட்டுமே கிடைத்தது. இக்கசப்பான உண்மையப் இப்புகைப்பட விளக்கங்கள் தெரியப்படுத்துகின்றன.*

## 4204

***சீன கூலிகள் அணிந்த உடைகள்***
***20-ஆவது நூற்றாண்டின் இடைப்பட்ட காலம்***
***உடை/ துணி***
***1995-01556-001, 1995-01556-002***

*கூலிகள் (தொழிலாளர்கள்) பொதுவாக நீல நிறத்தில் எளிதில் கறைபடாத அடர் நிறங்களில் நடைமுறைக்கு ஏற்ற, உறுதியான ஆடைகளை அணிவதை வழக்கமாக வைத்திருந்தனர். முன்புறம் திறந்த பாணியில் இருந்த அச்சட்டை அவர்கள் அதனைத் திறந்தபடியோ, மூடியபடியோ அணிய ஏதுவாக இருந்தது. பணம் உள்ளிட்ட சிறு பொருள்களை வைத்துக்கொள்ள ஏதுவாக இந்தச் சட்டையில் ஒரு வைத்த உள்பை இருந்தது.*

***ஒரு தொழிலாளியின் தொப்பி***
***1950***
***மூங்கில்***
***XXXX-09892***
***ஆசிய நாகரிகங்கள் அரும்பொருளகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*நீண்ட நேரம் வெளியில் வேலை செய்த தொழிலாளர்கள் பொதுவாக வளைந்த மூங்கிலால் செய்யப்பட்ட இத்தொப்பிகளை அணிந்தனர்.*

## 4205

### 1.

***செங்கல் தயாரிக்கப் பயன்படும் வார்ப்பு அச்சு***

***19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம்***

***மரம், இரும்பு***

***2000-08305***

*இந்த இந்தச் செங்கல் தயாரிக்கும் வார்ப்பு அச்சு, 19 ஆம் நூற்றாண்டில் சிங்கப்பூரில் குடியேறிய மலபாரி (இந்தியாவின் தென்மேற்கு கடற்கரையைச் சேர்ந்த மக்களைக் குறிக்கும் சொல்) முஸ்லிம் மக்களால் பயன்படுத்தப்பட்டது. செங்கல் தயாரிப்பின்போது தேவைக்கு அதிகமான களிமண்ணைத் அகற்றுவதற்காக மீண்டும் மீண்டும் உராயப்படும்போது ஏற்படும் தேய்மானத்தைக் குறைக்க அச்சுகளின் மேற்பகுதியில் இரும்புப்பட்டி பொருத்தப்பட்டுள்ளது. கைகளால் செய்யப்பட்ட செங்கல், மணல்-மோல்டிங் அல்லது ஸ்லாப்-மோல்டிங் முறையில் செய்யப்பட்டன. களிமண் வார்ப்பு அச்சில் ஒட்டாமல் இருக்க மணல், தண்ணீர் ஆகியவை பயன்படுத்தப்பட்டன.*

### 2.

***பிராஸ் பாசா இந்திய சிறைக் கைதிகளால் உருவாக்கப்பட்ட செங்கல்***

***c.1853***

***களிமண்***

***2005-01160***

*"கி.பி. 1853" என்று பொறிக்கப்பட்ட இந்த செங்கல், 1841 முதல் 1860 வரை பிராஸ் பாசாவில் தங்கள் சொந்த சிறைச்சாலையைக் கட்ட காலனித்துவ அதிகாரிகளால் உத்தரவிடப்பட்ட இந்திய குற்றவாளிகள் செய்தவை . முதன்முதலில் 1825- இல் இந்தியக் குற்றவாளிகள் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டனர். அப்போது அவர்கள் தங்கவைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகள் சேர்ந்து 'கம்போங்' (அல்லது மலாய் மொழியில் "கிராமம்") உருவானது. குற்றவாளிகள் வெவ்வேறு வகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டனர். தொடர்ந்து குறிப்பிட்ட காலம்*

*நன்நடத்தையுடன் விளங்கினால் அவர்களுக்கு வகுப்பு உயர்வுடன், இலகுவான பணிகளும், கூடுதல் சலுகைகளும் அளிக்கப்பட்டன.*

## 4206

***லோ ஆ குவாய்,*** *ஒரு சம்சுய் பெண்ணாக அவரது பணியையும் சிரமங்களையும் பகிர்ந்துகொள்கிறார்.*

*நேர்காணலுக்கு நன்றி:*
*வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம்,*
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் (என்ஏஎஸ்)*

*படங்கள் அன்பளிப்பு:*
*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு,*
*திரு டீ ஹொங் செங், சான் மிங் எண்டர்பிரைசஸ் (என்எம்எஸ் தொகுப்பு),*
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம், குவோ ஷங்-வெய் தொகுப்பு, என்ஏஎஸ்*
*சிங்கப்பூர் பயணத்துறை மேம்பாட்டுக் கழகத்தின் தொகுப்பு, என்ஏஎஸ்*
*ரொனி பின்ஸ்லர் தொகுப்பு, என்ஏஎஸ்*

***எஸ்.வி.சண்முகம்****, சிங்கப்பூர் துறைமுக வாரியத்தில் எவ்வாறு பொருள்களை ஏற்றி, இறக்கும் தொழிலாளியானார் என்பதை விளக்குகிறார்.*

*நேர்காணலுக்கு நன்றி: வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் (என்ஏஎஸ்)*
*படங்கள் அன்பளிப்பு: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு,*
*தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, என்ஏஎஸ்*

***வான் ஹொங் சியோங்*** *தான் வேலை செய்த தொழிற்சாலைகளில் செங்கல் தயாரிக்கும் செயல்முறைகளை விவரிக்கிறார்.*

*நேர்காணலுக்கு நன்றி:*

*வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம்,*

*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம் (என்ஏஎஸ்)*

*படங்களுக்கு நன்றி:*

*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு,*

*திரு லிம் லாம் சான் (என்எம்எஸ் தொகுப்பு), தகவல், கலைகள் அமைச்சின் தொகுப்பு, என்ஏஎஸ்*

# 4300

## *பாகம் 3*
## *நகரப் பயணம்*

*19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் அதிக உடலுழைப்பு தேவைப்படும் போக்குவரத்து முறைகளை இயக்க புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தயாராக இருந்ததால், நகரத்தை சுற்றிப் பயணிப்பது வசதியாக இருந்தது. அப்போது, 'காரிஸ்' எனப்படும் குதிரை வண்டிகள், ரிக்ஷாக்கள் ஆகியவை முதன்மையான தரைவழிப் போக்குவரத்து முறைகளாக இருந்தன. பல பயணிகளுக்கு ரிக்ஷாக்கள், எளிதில் அணுகக்கூடிய மலிவு விலைத் தேர்வாக இருந்தன. வணிகர்களும், மற்றும் உணவுக்கடைக்காரர்களும் கூட தங்கள் பொருள்களைக் கொண்டு செல்ல அவற்றை வாடகைக்கு பயன்படுத்தினர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'டிராம்கள்' அறிமுகம் கண்டன. 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மட்டுமே பொதுப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தப் பலதரப்பட்ட போக்குவரத்து முறைகள் அதிகரித்த இணைப்புகள் மற்றும் வலுவான உள்ளூர் போக்குவரத்து அமைப்புகளுக்கும் பங்களித்தது, தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கும் ஆதரவளித்தன. ,நகரம் வளர்ச்சியடைந்து விரிவடைந்தபோது அன்றாடப் பயணங்களையும் எளிதாக்கின.*

## 4301

***‘சிங்கப்பூர் டிராக்ஷன் கம்பனி’ பேருந்து ஓட்டுநர் உடைகள்***
***20வது நூற்றாண்டின் மத்தியில்***
***துணி/உடை***
***G-0657-A, G-0657-B***

***‘சிங்கப்பூர் டிராக்ஷன் கம்பனி’ பேருந்து ஓட்டுநனரின் அடையாளப் பட்டி***
***1930–1945***
***உலோகம்***
***1995-06232***

*முதன்முதலில் சிங்கப்பூரில் ஏழு இருக்கைகள் கொண்ட "மஸ்கிட்டோ பேருந்துகள்" என்றழைக்கப்பட்ட சிறிய பேருந்துகள் பயன்பாட்டில் இருந்தன. அவற்றைப் பெரும்பாலும், சீனாவின் ஃபுஜியான் பகுதியிலிருந்து வந்த குடியேறிகள் ஓட்டினர். போருக்கு முந்தைய காலத்தில், 1925-களில் பிரிட்டிஷ் உரிமம் பெற்ற ‘சிங்கப்பூர் டிராக்ஷன் கம்பனி’ (STC) நிறுவப்பட்டபோது, அதன் ‘டிராலி’ பேருந்துகள், மோட்டார் பேருந்துகள் நகர மையத்தில் செயல்பாட்டுக்கு வந்தன. இதனால் ‘மஸ்கிட்டோ’ பேருந்துகள் நகருக்கு வெளியே செல்லவேண்டிய சூழ ஏற்பட்டது. ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது ‘சிங்கப்பூர் டிராக்ஷன் கம்பனி’ வாகனங்களுக்கு பெரிய இழப்புகள் ஏற்பட்டன. 1960 களில் கடும் வீழ்ச்சியைச் சந்தித்து, பின்னர் 1971-இல் அந்நிறுவனம் மூடப்பட்டது.*

## 4302

### 1.
***சிங்கப்பூர் நதியின் கேவனா பாலத்தின் மேல் காரி வாகனங்கள், ரிக்ஷாக்கள்***

*G.R. லாம்பர்ட் & கோ.*

*c.1890*

***ஆல்ப்யூமன் அச்சு***

*2007-50908*

### 2.
***காரி வாகனத்தில் ஐரோப்பிய பயணிகள், மலாய் ஓட்டுநர்***

*19ஆம் நூற்றாண்டின் இறுதி*

***ஆல்ப்யூமன் அச்சு***

*XXXX-15174-069*

*பெரும்பாலான காரி ஓட்டுநர்கள் மலாய் அல்லது இந்திய மக்களாளாக இருந்தனர். பயணிகள் பெரும்பாலும் ஐரோப்பியர்களாக இருந்தனர்.*

### 3.
***ரிக்ஷா இழுப்பவரும் அவரது பயணிகளும்***

*20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்*

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

*2008-01120*

### 4.
***ரிக்ஷா இழுக்கும் முதியவர் சாலையோரத்தில் ஓய்வெடுக்கும் காட்சி***

*1938–1939*

***ஜெலட்டின் வெள்ளி அச்சு***

*2007-50928-182*

*சிங்கப்பூரின் ரிக்ஷா இழுக்கும் தொழிலாளர்கள் பெரும்பாலும் தென் சீன நாட்டவர். அவர்கள் நகர்ப்புற பகுதிகளுக்குள் மலிவான போக்குவரத்து வசதி வழங்குவதில் முக்கியப் பங்கு வகித்தனர். ஆனால் இந்தப் பணிக்கு அதீத உடலுழைப்பு தேவைப்பட்டதால், பெரும்பாலானோர் ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்கு மட்டும் பணியாற்றிவிட்டு, சீனாவிற்கு திரும்பிச் சென்றனர். அக்காலகட்டத்தில் உடலின் வலிகளை எதிர்கொள்ள அபின் பயன்படுத்தும் பழக்கமும் பரவலாகக் காணப்பட்டது.*

**5.**

***சிங்கப்பூர்த் தெருவில் விழுந்துகிடக்கும் ரிக்ஷாத் தொழிலாளியைச் சித்தரிக்கும் அச்சுப்படம்***

***ஹூகோ வில்ஃபிரெட் பெடர்சன்***

***1908***

***வண்ண அச்சு***

***XXXX-01425***

*இந்தப் படம், ஹ்யூகோ வில்ஃபிரெட் பெடர்சனின் ‘டோர் டென் ஓஸ்ட்-இண்டிசென் ஆர்க்கிபெல்’ ("கிழக்கிந்திய தீவுக்கூட்டம் வழியாக") எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்தப் படம், ஒரு வரைகலைஞரின் ஐந்து வருட பயண அனுபவத்தைக் கூறும் ஒரு ஓவிய இதழாகும். பெடர்சனின் சித்தரிப்புகள் பெரும்பாலும் அனுதாபத்தை வரவழைக்கும் வண்ணமாக அமைந்துள்ளது . இந்த அச்சில், விழுந்துகிடக்கும் ரிக்ஷாக்காரர், வயதானவராக, தேய்ந்துபோன உடல், வெறும் கால்களுடன் காணப்படுகிறார் . கடும் வெப்ப நிலையில் தார் சாலையில் வெறுங்காலுடனோ பழைய சக்கரங்களினாலான 'ரப்பர்' செருப்புகளைப் பயன்படுத்துவதோ மட்டுமே வழியாக இருந்தது.*

## 6.

***"தி ரிகிஷா கூலி" ஸ்ட்ரெயிட்ஸ் புரோட்யூஸ், தொகுதி 3***

***1 ஏப்ரல் 1925***

***மறுஉருவாக்கம்***

***2007-00856***

*இந்தக் கவிதை, சிங்கப்பூர் உட்பட, நீரிணைக் குடியேற்றங்களில் (ஸ்ட்ரெயிட்ஸ் செட்டல்மெண்ட்ஸ்) உள்ள ஐரோப்பிய குடியேறிகளை மையமாகக் கொண்ட இதழான 'ஸ்ட்ரெய்ட்ஸ் புரொடியூஸிலிருந்து' எடுக்கப்பட்டது. இது ஒரு ரிக்ஷாக்காரரின் வாழ்க்கையின் கடினமான நிலைமைகளை விவரிப்பதுடன், ஐரோப்பிய ரிக்ஷா பயணிகளின் மனப்பான்மையையும் விமர்சிக்கிறது.*

## 7.

***லியன் லெங் கிம் என்பவரின் மூன்று சக்கர ரிக்ஷா ஓட்டுவதற்கான உரிமம்***

***1951***

***காகிதம்***

***1997-02922***

## 8.

***சிங்கப்பூர் மாநகராட்சி ஆணையம் அளித்த மூன்று சக்கர ரிக்ஷா ஓட்டுவதற்கான உரிமம்***

***1947***

***உலோகம், தோல்***

***2008-06076***

***சிங்கப்பூர் சீன வர்த்தக, தொழிற்சபையின் (SCCCI) பரிசு***

*சிங்கப்பூரின் தெருக்களில் 1914 ஆம் ஆண்டிலிருந்து மூன்று சக்கர ரிக் ஷாக்கள் அல்லது பெடல் ரிக்ஷாக்கள் இருந்தாலும், ஜப்பானிய ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து வந்த பெட்ரோல் தட்டுப்பாட்டின்*

*காரணமாகவும், 1947 இல் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் மனிதாபிமான அடிப்படையில் கை ரிக்ஷாக்கள் தடைசெய்யப்பட்ட பின்னரும் இவற்றின் புழக்கம் அதிகரித்தன. பெரும்பாலும் சீனர்கள் ஓட்டும் இந்த வகை ரிக்ஷாக்கள் விரைவாக இருந்தாலும் அதிக கட்டணங்களுடையதாக இருந்தன.*

## 9.

***ஒரு மூன்று சக்கர ரிக்ஷாத் தொழிலாளி, அவரது பயணி***

***1960களில்***

***மறுஉருவாக்கம்***

***RAFSA சேகரிப்பு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் அனுமதியுடன்.***

## 10.

***பேருந்துப் பயணச்சீட்டு***

***1960களில்***

***காகிதம்***

***1995-00223***

***மிஸ்டர் மோரிஸ் கெய்ஸர் அவர்களின் பரிசு***

***11.***

***பஸ் கான்டக்டர்கள் பயன்படுத்திய 'டிக்கெட் பஞ்ச்' கருவி***

***1940 - 1970களில்***

***உலோகம்***

***2007-55078***

*கட்டண அட்டை, தானியங்கி பணம்செலுத்தும் அட்டை அமைப்புகள் வருவதற்கு முன்பு, பயணிகள் பேருந்துப் பயணங்களுக்கு நேரடியாகப் பயணச் சீட்டுகளை வாங்க வேண்டியிருந்தது. 1980கள் வரை, பேருந்து நடத்துனர்கள் கட்டணங்களை வசூலித்து தகுந்த பயணச்சீட்டுகளை வழங்கினர். பயணிகள் ஏறும் பேருந்துநிறுத்தக் குறி எண்ணைக் குத்தி,*

*பயணித்த தூரத்தைக் கண்காணிப்பதன் மூலம் அச்சீட்டை மீண்டும் பயன்படுத்தாமல் தடுப்பார்கள்.*

# 4303

*லீ சூன் பா, சிங்கப்பூர் டிராக்‌ஷன் கம்பெனியில் தமது வாழ்க்கைத் தொழில் பற்றி பகிர்ந்துகொள்கிறார்.*

*நேர்காணலுக்கு நன்றி:*
*வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம்,*
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்*

*படங்கள் அன்பளிப்பு:*
*சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு,*
*எஃப்.டபிள்யு, யோர்க் தொகுப்பு, என்ஏஎஸ்,*
*பி. கிளாசன் தொகுப்பு, என்ஏஎஸ்,*
*தி தியேட்டர் பிராக்டிஸ் தொகுப்பு, என்ஏஎஸ்*

***லியோ டுவான் லீ,** , தாம் ரிக் ஷா இழுப்பவரானது பற்றியும் சந்தித்த சிரமங்களையும் விளக்குகிறார்*
*காணொளி அன்பளிப்பு: , மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

***சுப்பையா புலிக்குட்டி நாயுடு,** ஒரு மாட்டு வண்டி உரிமையாளராகவும் ஓட்டுநராகவும் இருந்தபோது நடந்த அனுபவங்களை விவரிக்கிறார்*

*நேர்காணலுக்கு நன்றி: வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்*
*படங்கள் அன்பளிப்பு: , சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தி ன் தொகுப்பு*

# 4400

## *பாகம் 4*
## *மக்கள் பாதுகாப்பு*

*சிங்கப்பூர் இன்று பாதுகாப்பு மற்றும் ஒழுங்கிற்குப் பெயர்போன நாடாகியுள்ளது. 1820 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் வர்த்தக மையம் தொடங்கப்பட்ட சிறிது காலத்திலேயே, சிங்கப்பூரின் காவல்துறை நிறுவப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், காவல்துறையில் நூற்றுக்கு மேற்பட்ட மலாய் மற்றும், இந்தியர்கள் முதன்மையாக பணியமர்த்தப்பட்டனர். தொடக்கத்தில் ஐரோப்பிய குடியேறிகளால் சிங்கப்பூர் தன்னார்வ ரைபிள் (Rifle) படையாக உருவாக்கப்பட்ட சிங்கப்பூர் தன்னார்வப் படை (SVC), உள்ளூர்ப் பாதுகாப்பிற்கு துணைசெய்தது.*

*அப்படை (SVC) 1965 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற பிறகு "மக்கள் பாதுகாப்பு படையாக" (பீப்பிள் டிபென்ஸ் ஃபோர்ஸ்) பரிணமித்து, தன்னார்வ சேவை அடிப்படையில் நம்பகமான பாதுகாப்பை வழங்கியது, அதற்கு அதன் வரம்புகள் இருந்தன. எனவே, 1967 ஆம் ஆண்டு தேசிய சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆண்களின் பங்கைக் கட்டாயமாக்கியதன் வழியாக பாதுகாப்பு திறன்களை விரைவாக விரிவாக்கி ஆண்களின் பங்கைக் கட்டாயமாக்கியது.*

*தீயணைப்பு, தீக்கெதிரான பாதுகாப்பு, சிங்கப்பூரின் நகர்ப்புற பாதுகாப்புக்கான மற்றொரு முக்கிய அம்சமாகும். நகரத்தின் தொடக்ககாலத்திலிருந்த மர, கூரைக் கட்டமைப்புகள் மிக எளிதில் தீப்பற்றக்கூடியவையாக இருந்தன. இதனால் 1960 கள் வரைகூட*

*நகரத்தை பாதுகாப்பதில் தீயணைப்பு வீரர்களின் தேவை அவசியமானதாக இருந்தது. முதல் சிங்கப்பூர் தீயணைப்புப் படை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நில உரிமையாளர்களால் நிறுவப்பட்டது. இது பின்னர் முறையான தொழில்முறைப் பிரிவாக மாறியது. இதன் மாற்றாகஇன்று, சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை, தீயணைப்பு, மீட்பு, அவசரகால மருத்துவ சேவைகள் என தீயணைப்பு சேவையோடு விரிவான சேவைகளை வழங்குகிறது.*

## 4401

*சிங்கப்பூர் க் காவல்துறையின் ஆரம்பகால வரலாற்றில் வளப்பற்றாக்குறையும், பணியாளர்கள் பற்றாக்குறையும் நிலவின. இதனால் அதிகரித்து வரும் குற்ற விகிதங்களையும், ரகசிய சங்கங்களின் செல்வாக்கையும் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. சிதற்குத் தீர்வுகாண 1881 ஆம் ஆண்டு சைனாடவுனில் உள்ள பேர்ல்ஸ் ஹில்லில் சீக்கிய காவல் படையை நிறுவப்பட்டது. இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சீக்கியர்கள், காலனித்துவ அரசாங்கத்தால் விசுவாசமானவர்களாகவும் நம்பகமானவர்களாகவும் கருதப்பட்டதால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமைதியைப் பேணுதல், பொது ஒழுங்குச் சீர்குலைவு தொடர்பான சம்பவங்களைக் கையாளுதல், அத்துடன் சில வெளிநாட்டுப் பணிகளும் இந்தக் குழுவிற்கு வழங்கப்பட்டன.*

### 1.

***ஸ்ட்ரெயிட்ஸ் செட்டல்மெண்ட்ஸ் காவல்துறை லத்தி/ தடி, லால் சிங் உடைமை***

***1930கள்–1940கள்***

***மரம், உலோகம்***

***2023-00487***

***அத்மா சிங் அவர்களின் பரிசு***

*இத்தடிகள் வல்துறை அதிகாரியின் முறையான சீருடைகளுக்கு துணையாக இருந்ததுடன், பணிக்கு வெளியே சாதாரண உடையில் இருக்கும்போது கூட, அதிகாரத் தோற்றத்தை அளித்தன.*

**2.**

***சிலாட் சாலை சீக்கியக் கோயில் (அக்கோவில் பொதுவாக காவல்துறை குருத்துவாரா என்று அழைக்கப்பட்டது ) அதிகாரிகளுடன் சீக்கியக் காவல் படையினர் நிறுகும் புகைக்ப்படம்***

***2 டிசம்பர் 1931***

***காகிதம்***

***2000-03698***

*முதலில் காவல் குருத்வாரா சீக்கிய காவல் படையினரின் முகாம்களுக்கு அருகில் அமைந்திருந்தது. இருப்பினும், புதிதாக வந்த சீக்கிய குடியேறிகளுக்குத் தங்குமிடத்துடன் கூடிய ஒரு பெரிய வழிபாட்டுத் தலத்தின் தேவைப்படுவதை உணர்ந்ததால், துறைமுகம், ரயில் நிலையத்திற்கு அருகில் புதிய குருத்வாரா, தங்குமிடத்தைக் கட்டுவதற்காக சிலாட் சாலையில் ஒரு நிலத்தை அச்சமூகத்தினர் தேர்ந்தெடுத்தனர். 1924 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய காவல் குருத்வாரா, சிலாட் சாலை சீக்கிய கோயில், முதன்மையாக சிங்கப்பூர், மலாயாவில் உள்ள காவல் படையின் சீக்கிய உறுப்பினர்கள் திரட்டிய நிதியின் மூலம் கட்டப்பட்டது.*

**3.**

***சிங்கப்பூர் காலனியின் ஓய்வூதியம் பெற்ற லால் சிங்கின் விளக்க அட்டை***

***29 ஜூன் 1948***

***மறுஉருவாக்கம்***

***2023-00490***

***அத்மா சிங் அவர்களின் பரிசு***

*லால் சிங் 1931 ஆம் ஆண்டு சீக்கிய காவல் படையில் சேர்வதற்காகச் சிங்கப்பூர் வந்தார். காவல் துறைக்சூழியராகப்பணியாற்றிய காலத்தில்,*

*சிங்கப்பூர், ஹாங்காங், கிறிஸ்துமஸ் தீவுகளுக்கு இடையே நீராவி கப்பல் மூலம் கைதிகளை கொண்டு செல்லும் பணிகளில் ஈடுபட்டார் சிங்.*

## 4.

***ஓய்வூதியத்தை சிங்கப்பூருக்கு அனுப்பக்கோரி காவல் ஆணையருக்கு அனுப்பப்பட்ட கடிதம்.***

***10 ஏப்ரல் 1948***

***காகிதம்***

***2023-00496***

***அத்மா சிங் அவர்களின் பரிசு***

*இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அதிகமானோர் பணியிலிருந்து விலகியதால் சீக்கியக் காவல் படை கலைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களுக்கு இந்தியாவுக்குத் திரும்புவதற்கான பயணச்சீட்டு, மூன்று மாத ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்பட்டது. அவர்களின் உள்ளூர் முகவரிக்கு ஓய்வூதியமும் அனுப்பப்பட்டது. சிங் இந்தியாவிற்குச் சென்றுவிட்டு விரைவில் சிங்கப்பூருக்குத் திரும்பினார். பல புலம்பெயர்ந்தோரைப் போலவே, தனது குடும்பத்துடன் இங்கு குடியேற முடிவு செய்ததால், தனது ஓய்வூதியத்தை சிங்கப்பூர் முகவரிக்கே அனுப்புமாறு இந்தக் கடிதம் மூலம் கோரினார்.*

## 5.

***மக்கள் தற்காப்புப் படையின் ஆணைபெறாத அதிகாரிகளுக்கான முதல் அறிமுகப் பயிற்சியில் எடுக்கப்பட்ட புகைப்படம்***

***மக்கள் தற்காப்புப் படைப் பயிற்சி நிலையம், மாஜு முகாம்***

***1968***

***காகிதம்***

***2021-01170***

***திரு சீட் ஆ பாவின் அன்பளிப்பு***

*மக்கள் தற்காப்புப் படை 1965-ஆம் ஆண்டில் ஒரு பகுதிநேரத் துணை இராணுவப் பாதுகாப்புப் படையாக நிறுவப்பட்டது. தன்னார்வலர்களால் இயக்கப்பட்ட இந்த அமைப்பு, முழுநேர சிங்கப்பூர் இராணுவத்துக்கு ஆதரவான பின்னிருப்புப் போர் அணியாகச் செயல்படும் நோக்கத்தில் அமைக்கப்பட்டது. இது பெரிய முழு நேர இராணுவத்தைப் பராமரிப்பதற்கான தேவையைக் குறைக்க உதவியது. முன்பிருந்த சிங்கப்பூர் தன்னார்வப் படையிலிருந்து தோன்றியதால், 1967-ஆம் ஆண்டில் கட்டாய தேசிய சேவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாகவே மக்கள் தற்காப்புப் படை செயல்பாட்டில் இருந்தது.*

## 4402

### 1.

***இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் லால் சிங்குக்கு வழங்கப்பட்ட விருதுகள்***

*1939–1945*

***உலோகம், துணி***

*2023-00488*

***அத்மா சிங் அவர்களின் பரிசு***

*ஜப்பானிய ஆக்கிரமிப்பின் போது, லால் சிங் காவல்துறை ஊழியராகத் தொடர்ந்து பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின் போது எவ்வாறு பங்காற்றினார் என்பது தெரியவில்லை என்றாலும், இந்த பதக்கங்கள் அவர் பாராட்டத்தக்க வகையில் செயல்பட்டிருப்பார் என்பதைக் குறிக்கிறது.*

### 2.

***மடக்குக் கைப்பிடியுடன் கூடிய சத்தமெழுப்புப் கருவி - காவலர்கள் பயன்படுத்தியது***

***19ஆம் நூற்றாண்டின் கடைசி பகுதி***

***மரம், ஈயம்***

*XXXX-10989*

***ஆசிய நாகரிகக் காட்சியகத்திலிருந்து கடனாகப் பெறப்பட்டது***

*19 ஆம் நூற்றாண்டில், எச்சரிக்கை எழுப்பவும் உதவிக்கு அழைக்கவும் இதுபோன்ற மரத்தாலான கருவிகளைக் காவலர்கள் பயன்படுத்தினர். விரைவாக சுழற்றும்போது, இதன் மர நாக்கு சக்கரத்தில் மோதி உரத்த ஒலியை எழுப்புகிறது. ஈயம் பொருத்தப்பட்டு கனமாக இருப்பதால் இதனைத் தற்காலிக ஆயுதமாகவும் பயன்படுத்த முடிந்தது. 20 ஆம் நூற்றாண்டில், இவற்றுக்கு பதிலாக விசில்கள் பயன்பாட்டுக்கு வந்தன.*

*எடுத்துச் செல்ல எளிதாகவும் அதிக தூரத்திலிருந்தும் கேட்கக்கூடியதாகவும் இருந்ததால் விசில்கள் புழக்கத்துக்கு வந்தன.*

**3.**

***"ஒரு வெளியேற்றப்பட்டவனின் வரலாறு" – ஜே. ஹெச். டைட் எழுதியது, ஸ்ட்ரெயிட்ஸ் புரொடியூஸ், தொகுதி 7***

***1928–1929***

***காகிதம்***

***2007-00858***

**4.**

***சிங்கப்பூரில் இருந்து வெளியேற்றப்பட்ட இரு சீனக் குடியேறிகள்***

***1908***

***கண்ணாடி விளக்குபட வில்லை***

***2009-03481***

*சிங்கப்பூரிலிருந்து வேண்டாத நபர்களை பிரிட்டிஷ் நிர்வாகம் நாடுகடத்தியது. முக்கியமாக சீனாவிலிருந்து புலம்பெயர்ந்தோரில் ரகசியச் சங்கத் தலைவர்களாக இருந்தோர், அரசியல் முறைகேடுகளில் ஈடுபட்டோர் நாடுகடத்தப்பட்டனர். இடதுபுறத்தில் உள்ள அரிய புகைப்படம் நாடுகடத்தப்பட்ட டான் ஹாங் சூ, சிம் ஹே ஆகியோரின் படங்களைக் காட்டுகிறது. ஸ்ட்ரெய்ட்ஸ் புரொடக்ஸில் வெளியிடப்பட்ட அதன் விளக்கப்படக் கதை, சில சீனக் குடியேறிகள் எவ்வாறு இ வ்வகைப் பிரச்சினைகளில் சிக்கியிருக்கலாம் என்பதைப் பற்றிய ஒரு பார்வையை நகைச்சுவை கலந்து முன்வைத்தது.*

**5.**

***சிங்கப்பூர் தன்னார்வப் படை வீரர் அவரது மோட்டார் சைக்கிளுடன்***

***சுமார் 1910கள்***

***கண்ணாடிப் பலகையிலிருந்து அச்சு***

***XXXX-14493***

## 6.

***சிங்கப்பூர் தன்னார்வப் படை உறுப்பினர்களின் கௌரவப் பட்டியல், இரண்டாம் உலகப் போர் 1939–1945***

***சுமார் 1945***

***காகிதம், தோல்***

***1995-01964***

***சிங்கப்பூர் தன்னார்வப் படை கேப்டனின் தொப்பி (அடையாள வில்லையுடன்)***

***சுமார் 1890***

***துணி, தோல், உலோகம்***

***1996-01941***

*தொப்பி வில்லையில் உள்ள முழக்கவரியான "In Oriente Primus" என்பது "கிழக்குப் பகுதியில் முதலாவது" என்று பொருள்படும். ஏனெனில், சிங்கப்பூர் தன்னார்வப் படையே (SVC) இந்த பகுதியில் முதன்முறையாக அமைக்கப்பட்ட அத்தகைய படையாகும். அது 1854-ஆம் ஆண்டு ஹோக்கியன்-டியோச்சூ கலவரங்களை அடுத்து காவல்துறைக்கு உதவுவதற்காக ஐரோப்பியக் குடியிருப்பாளர்களால் நிறுவப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர்வரை சேவையாற்றுவதற்குத் தகுதிபெறாமலிருந்தபோதிலும், சீன, அரபு, செட்டி மலாக்கா, மலாய் சமூகங்கள் 1889-ஆம் ஆண்டில் படைக்கு ஆயுதங்களை வாங்க நிதி உதவி செய்தன. 1901-ஆம் ஆண்டில் ஒரு சீனப் பட்டாளமும் ஐரோப்பாசியப் பட்டாளமும், 1910-ஆம் ஆண்டில் ஒரு மலாய்ப் பட்டாளமும் 1922-ஆம் ஆண்டில் ஸ்காடிஷ் பட்டாளமும் இணைக்கப்பட்டன.*

*சிங்கப்பூர் தன்னார்வப் படை உதவிய முக்கியச் சம்பவங்களில், 1915-ஆம் ஆண்டு சிப்பாய் கிளர்ச்சி, இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியப் படையெடுப்பின்போது முக்கியக் கட்டமைப்புகளைப் பாதுகாத்தல், 1954 முதல் 1956 வரை தேசிய சேவை சட்டத்தின்கீழ் புதிய வீரர்களுக்குப் பயிற்சி அளித்தல், 1960களின் கொன்ஃப்ரொன்டாசி காலத்தில் கட்டமைப்புகளைக் பாதுகாத்தல் ஆகியவை அடங்கும்.*

## 4404

### 1.
***தீயணைப்பு நிலையத்தின் முன்னிலையில் தீயணைப்பு வீரர்கள்***

***சுமார் 1906***

***காகிதம்***

***1995-00597***

*சிங்கப்பூரின் ஆரம்பகாலங்களில் மரம், அட்டப் கட்டிடங்களில் தீ ஆபத்துகள் தொடர்ந்து இருந்தன. 1869-க்கு முன், தீயைக் கையாள்வதற்கான பணி பல்வேறு குழுக்களால் மேற்கொள்ளப்பட்டது, அவற்றில் காவல்துறையினர், இராணுவத்தினர், கைதிகள்கூட இருந்தனர். சிங்கப்பூரின் முதல் தீயணைப்பு வீரர்களில், 1869ல் தன்னார்வமாக ஒரு படையை அமைக்க முனைந்த அக்காலத்து முக்கியச் சொத்து உரிமையாளர்கள் உள்ளடங்கி னர். எனினும், இந்த படை வெறும் 15 ஆண்டுகள் மட்டுமே நீடித்தது. 1888-ஆம் ஆண்டில் சிங்கப்பூர் தீயணைப்பு படையின் கொடியில் ஒரு தொழில்முறைச் சேவை நிறுவப்பட்டது.*

### 2.
***சிங்கப்பூர் தீயணைப்பு படையின் பொத்தான்***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்***

***உலோகம்***

***1999-02734-003***

*இந்த பொத்தான் சிங்கப்பூரின் பழமையான சின்னமான தேங்காய் பனைமரம் முன் சிங்கத்தைக் காட்சிப்படுத்துகிறது. இது சிங்கப்பூர் தீயணைப்பு படையின் சின்னமாகப் பயன்பட்டது. இந்த சின்னத்தின் ஒரு பதிப்பு சிங்கப்பூர் தன்னார்வப் படையின் வில்லைகளிலும்*

*பயன்படுத்தப்பட்டது, பின்னர் 1948-ஆம் ஆண்டில் சிங்கப்பூர் நகரத்திற்கான மரபுச் சின்னத்திலும் பயன்படுத்தப்பட்டது.*

## 3.

***சிங்கப்பூர் தீயணைப்புப் படையின் பொத்தான்***

***நாள் குறிப்பிடப்படவில்லை***

***உலோகம்***

***2000-03207***

*இந்த பொத்தான் உலகின் பல பகுதிகளிலும் தீயணைப்புப் படைகள் பயன்படுத்திய பிரபலமான வடிவத்தைக் காட்டுகிறது. இரண்டு கோடாரிகளின் நடுவில் அமைந்துள்ள தலைக்கவசம் தீயணைப்பு வீரரின் கருவிகளைக் குறிக்கின்றது.*

## 4.

***கேலாங் பகுதியில் ஒரு பெரும் தீச்சம்பவம், மீட்புப் பணிகள்***

***1933***

***காகிதம்***

***2003-00434***

*இந்த புகைப்படங்கள், முன்னணி வணிகர் டான் கா கீ, கேலாங்கில் வைத்திருந்த ரப்பர், சவர்க்காரத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் பயமின்றி செயல்படும் தீயணைப்பு வீரர்களைக் காட்சிப்படுத்துகின்றன.* மலாயா ட்ரிபியூன் *செய்தித்தாள் "சிங்கப்பூர் தீயணைப்பு படையின் ஐரோப்பிய, ஆசிய உறுப்பினர்களின் துணிச்சலான ஒத்துழைப்பின்மூலம் தீ கட்டுப்படுத்தப்பட்டது" என்றும் தொடக்கத்தில் "நூறு அடி உயரத்துக்கும் மேலாகப் பற்றி எரிந்த தீயையும் அடர்ந்த கரும்புகையையும்" காட்டிலும் அருகிலிருந்த கட்டடங்கள் காப்பாற்றப்பட்டன என குறிப்பிட்டது. அந்த தீ, புகையைப்*

பொருட்படுத்தாது தீயணைப்பாளர்கள் எரிகிற கட்டடங்களை நெருங்கி தீயை அணைத்ததாக செய்தித்தாள் கூறியது.

## 4405

***காவல்துறை ஊழியரின் உடை***

***20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் இடைப்பட்ட காலம் வரை***

***துணி/ உடை***

***1996-01806-001, 1996-01806-002***

**ஸ்ட்ரெயிட்ஸ் செட்டல்மெண்ட்ஸ் காவல்துறை ஊழியரின் இடுப்புப் பட்டி**

***19ஆம் நூற்றாண்டின் இறுதி***

**தோல், உலோகம்**

***2009-02270***

*சிங்கப்பூரில் 1960கள் வரை, வெப்பமண்டல காலநிலைக்கு ஏற்றவாறு காக்கி சீருடைகளுடன் கூடிய அரைக்கால் சட்டை காவல்துறை ஊழியர்கள் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டனர். 1880களில் நிறுவப்பட்ட உயர் சீக்கியப் படையில், புதிதாக இணைபவர்கள் குறைந்தது 175 செ.மீ உயரமும், 96.5 செ.மீ.யும் மார்பளவையும் கொண்டிருக்க வேண்டும் என்று விதி இருந்தது.*

# 4500

## *பாகம் 5*
## *பிறர்மீது பரிவு*

*ஒரு சிறந்த வாழ்க்கையை நாடி சிங்கப்பூருக்கு வந்தவர்களில் சிலர், பிறரின் வாழ்க்கையை மேம்படுத்தும் பராமரிப்பு சார்ந்த தொழில்களைத் தேர்ந்தெடுத்தனர் அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவற்றில் சேர்ந்தனர்.. அவர்களில் பலர் மற்ற பெண்களை ஆதரித்த பெண்களாவர்.*

*உதாரணமாக, வீட்டு வேலைகளைச் செய்து குழந்தைகளையும் பராமரித்த 'அமாஹ்'களும் மற்றும் தாயின் ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொண்ட பிரசவ உதவி மருத்துவர்களும் ஆவர். 'அமாஹ்'களில் ஒரு குழுவினர், குவாங்டோங்கிலிருந்து வந்த பெண்மணிகளான 'மாஜியே'கள் (சீனத்தில் "தாய் மற்றும் சகோதரி" என்று பொருள்). அவர்கள் "சோர் ஹை" (அல்லது "தலையை வாருதல்") சடங்கில் கூந்தலைப் பின்னி அல்லது கொண்டையாகக் கட்டி, திருமணம் செய்துகொள்ளாமல் வாழ உறுதிபூண்டனர். சிங்கப்பூரில் அவர்கள் நேர்மையாகவும் கடினமாகவும் உழைப்பவர்களாகப் புகழப்பட்டனர், பலர் ஒரே குடும்பத்துடன் பல தசாப்தங்களுக்குத் தங்கியிருக்கின்றனர். ' ஆயா' என்றழைக்கப்பட்ட மலாய், இந்திய இல்லப் பணியாளர்களும் இருந்தனர். இன்று பல்வேறு ஆசிய நாடுகளிலிருந்து வரும் வெளிநாட்டு இல்லப் பணியாளர்கள் தொடர்ந்து தேசத்தின் ஊழியரணியின் ஒரு முக்கிய தூணாக சிங்கப்பூரின் குடும்பங்களையும் அவற்றின் பராமரிப்புத் தேவைகளையும் ஆதரித்து (குறிப்பாக அனைத்து பெரியவர்களும் முழுநேரம் பணியாற்றும் குடும்பங்களில்) பணி செய்கிறார்கள்.)*

# 4501

## 1.

*“ஜீன்’ஸ் அமாஹ்” எனும் கவிதை, ‘ஸ்ட்ரெய்ட்ஸ் புரொடியூஸ்’ எனும் நையாண்டிப் பத்திரிகை, பாகம் 4 - 6*

*1925–1927*

*பிரதி*

*2007-00857*

## 2.

*சீன அமாஹ்களைத் தங்களுடைய முதலாளிகளின் குழந்தைகளுடன் காட்டும் அஞ்சல் அட்டை*

*சுமார் 1905*

*காகிதம்*

*1996-02687*

## 3.

*மாஜியே லியாங் குன் தொவின் சீப்பு*

*20ஆம் நூற்றாண்டின் மத்தியில்*

*மரம்*

*2017-00898*

*டாக்டர் மார்க் லூரவின் பரிசு*

## 4.

*மாஜியே லியாங் குன் தொவின் முடிகவ்வி*

*20ஆம் நூற்றாண்டின் மத்தியில்*

*நெகிழி*

*2017-00899*

*டாக்டர் மார்க் லூரவின் பரிசு*

*மாஜியே லியோங் குன் தொ "சுயமாகத் தலைவாரும் பெண்"ணாக மாறுவதற்கு "சோர் ஹெய்" எனும் சடங்கை மேற்கொண்டார். பிரம்மச்சாரியாக வாழ உறுதிபூண்டார். 1936-ஆம் ஆண்டில் அவர் லூ குடும்பத்தில் சேர்ந்தார். ஜப்பானிய ஆக்கிரமிப்பின்போது அவர் லூ குடும்பத்திலிருந்து பிரிந்திருந்த காலம் தவிர 1987-ஆம்ஆண்டில் அவரின் இறப்புவரை அவர்களுடன் பணியாற்றினார். அந்த குடும்பம் அவரை சிறந்த சமையல்காரராக நினைவுகூர்கிறது. லியோங் அணிந்த உடைகள் இங்கு மனித உருவப்படிவத்தில் காணப்படுகின்றன.*

**5.**

***சி ஜிங்கின் முதல் மகன் பிங் வாய் (Ping Wai) உடன் மாஜியே சகோதரி மே***

***1954***

***காகிதம்***

***2002-00863-092***

***வூ சிஜிங்கின் பரிசு***

**6.**

***சி ஜிங்கின் இரண்டாவது மகன் ஹூவே வையுடன் மாஜியே சகோதரி சுவி, ஹூவே வையின் இரண்டாவது பிறந்தநாளன்று***

***1959***

***காகிதம்***

***2002-00863-095***

***வூ சிஜிங்கின் பரிசு***

*இந்த மாஜியேக்களை சி ஜிங் (இங் சூ லுவியின் புனைப்பெயர்) என்ற சிங்கப்பூரில் பிறந்த பிரபல பெண் எழுத்தாளரும், அவருடைய கணவர் ஹுவாங் டா லீயும் தங்கள் குழந்தைகளைப் பராமரிக்கப் பணியமர்த்தினர். இரு மாஜியேகளும் கருப்பு, வெள்ளை சாம்ஃபூக்களை அணிந்துள்ளனர்.*

## 4502

***மாஜியே லியாங் குன் தோவின் சாம்ஃபூ மேலாடை, காற்சட்டை***

***20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி***

***பருத்தி, பட்டு***

***2017-00889, 2017-00895***

***டாக்டர் மார்க் லூவின் பரிசு***

*20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் நடுப்பகுதி வரை சிங்கப்பூரின் பெண் இல்லப் பணியாளர்களில் பெரும்பாலானவர்கள், குவாங்டோங்கிலிருந்துவந்த 'அமாஹ்'கள், 'மாஜியே'களே. குவாங்டோங் பகுதியின் பட்டுத் தொழில்துறை வீழ்ச்சிகண்டபின் தோட்டங்களிலும் வறுமையிலும் கஷ்டப்படுவதிலிருந்து தப்பிக்க அவர்கள் தம் இல்லங்களை விட்டுவிட்டு சிங்கப்பூர் வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் எளிமையான கருப்பு, வெள்ளை சாம்ஃபூக்களை அணிந்திருந்தனர். நாளடைவில் அதுவே அவர்களின் அடையாளமாக உருவெடுத்தது.*

*மாஜியே லியோங் அவர்களின் கதைப் பற்றி அருகிலுள்ள காட்சிப் பேழையில் படிக்கவும். அங்கு அவரது சீப்பும் சிகைக் கிளிப்பும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.*

***(மனித உருவப்படிவத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது)***

***பாரம்பரிய சீன ஒட்டுவேலைச் செய்யப்பட்ட குழந்தைத் தாங்கி***

***சுமார் 1950கள்***

***துணி***

***1999-01370***

***திருவாட்டி லிலியன் லீயின் அன்பளிப்பு***

*இதுபோல கையால் செய்யப்பட்ட குழந்தைத் தாங்கிகள் ‘மெய் டாய்’ (mei tai) என்றும் அறியப்பட்டன (காண்டொனீஸ் மொழியில் “சுமக்கும் பட்டை” என பொருள்படும்). கைகளைப் பயன்படுத்தாமல் குழந்தைகளைத் தூக்க பெண்கள் இவற்றை உபயோகித்தனர்.*

*குழந்தைத் தாங்கியின் பட்டைகள் வழக்கமாக இறுக்கிக் கட்டப்படுவதற்குப் பதிலாக ஒன்றோடொன்று முறுக்கப்பட்டன. இதனால் நாளில் எப்பொழுது தேவைப்பட்டாலும் விரைவாகவும் எளிதாகவும் மாற்றங்கள் செய்யலாம்.*

## 4503

### 1.

***டாக்டர் பெஞ்சமின் ஷியர்ஸ் உடன் ஓங் லீ டின் உட்பட பயிற்சிபெற்றுவந்த பிரசவ உதவி மருத்துவர்கள்***

***1940கள்***

***காகிதம்***

***2018-00726***

***திரு லியோங் குவாய் வாஹின் பரிசு***

*இந்த புகைப்படத்தில், கண்டாங் கெர்பாவ் மருத்துவமனையில் (இன்று கேகே மகளிர், சிறார் மருத்துவமனை என அறியப்படுகிறது) டாக்டர் பெஞ்சமின் ஷியர்ஸ் (இறுக்கமாக, இடது பக்கத்தில் நான்காவது) தலைமையில் பயிற்சிபெற்றுவந்த பிரசவ உதவி மருத்துவர்க் குழு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. டாக்டர் ஷியர்ஸ் மகப்பேறு, பெண் நலவியலில் புகழ்பெற்றவர். பின்னர் சிங்கப்பூரின் இரண்டாவது அதிபர் வந்தார். அந்த பிரசவ உதவிப் பெண்களில் ஒருவரான ஓங் லீ டின் (இரண்டாவது வரிசை, வலப்பக்கம்) ஜப்பானிய ஆட்சி காலத்தில் ஒரு பிரசவ உதவி மருத்துவராகப் பதிவுசெய்யப்பட்டார்.*

**2.**

***பிரசவ உதவி மருத்துவர் ஓங் லீ டின்னின் பெயர் அட்டை***

***1960கள்***

***காகிதம்***

***2018-00719***

***திரு லியாங் குவாய் வாஹ் பரிசு***

## 3.

***பிரசவ உதவி மருத்துவர் ஓங் லீ டின்னின் பதிவேடு***

***1945–1959***

***காகிதம்***

***2018-00724***

***திரு லியாங் குவாய் வாஹ் அவர்களின் பரிசு***

*ஓங் லி டின் என்பவர் ஹேவ்லாக் ரோட்டிலிருந்த 'ஸ்டேட் கிளினிக்'கில் ஒரு பிரசவ உதவி மருத்துவராகப் பணியாற்றினார். அவர் அந்த மருந்தகத்தில் பிரசவ உதவிகள் அளித்ததோடு பிரசவ உதவி மற்றும் பிரசவத்திற்குப் பிறகான பராமரிப்பை நாடிய தனியார் வாடிக்கையாளர்களையும் பராமரித்தார். அவர் தான் பராமரிப்பு வழங்கியோர் குறித்த அனைத்து விவரங்களையும் தனது பதிவு புத்தகத்தில் பதிவுசெய்தார்.*

*பெண்கள் பிரசவத்திற்கு மருத்துவமனைகளையே அதிகமாக நாடத் தொடங்கியதிலிருந்து தனியார் பிரசவ உதவி மருத்தவர்களின் சேவைக்கான தேவை குறைந்தது. ஓங் மருத்துவமனைக்கு மாறாமல், 'ஸ்டேட் கிளினிக்'கிலேயே தாதியாகத் தொடர்வதைத் தேர்ந்தெடுத்தார். சுமார் 1990ல் அவர் ஓய்வு பெறும்வரை அங்குதான் பணியாற்றிவந்தார்.*

## 4504

***அய்னான் பிந்தி முகம்மது யாசின்,*** *(துக்காங் உருட்) பாரம்பரிய உடல் பிடிப்பாளரான அவர், எவ்வாறு அந்த தொழிலில் எப்படி நுழைந்தார் என்பதைப் பகிர்ந்துகொள்கிறார்.*

*நேர்காணலுக்கு நன்றி:*
*வாய்மொழி வரலாற்றுப் பதிவு நிலையம்,*
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகம்*
*படங்கள் அன்பளிப்பு: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் தொகுப்பு,*
*தேசிய உலகக் கலாசாரங்களின் அரும்பொருளகம்*

***ஹுவாங் யுவரோங்***, *ஒரு தாயாக, ஒரு சகோதரியாக இல்லத்தைக் கவனித்துக்கொள்ளும் 'மாஜே'வாக வேலை செய்ததையும் அதன் பணிகளையும் விவரிக்கிறார்.*
*காணொளிக்கு நன்றி: மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

***ஒவ்யாங் ஹுவான்யான்***, *டான் கா கீ, லீ குவான் யூ ஆகியோரின் குடும்பங்களில் மாஜேவாக பணியாற்றிய அனுபவங்களை விவரிக்கின்றார்.*
*காணொளி அன்பளிப்பு: , மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

***வந்தனா அகர்வால்***, *மருத்துவமனையில் காயத்துக்குக் கட்டுபோடுபவராகப் பணியாற்றிய தண்டனைத் தொழிலாளியான குன்னக் மிஸ்த்ரீ என்பவரைப் பற்றிய தமது ஆராய்ச்சியை பகிர்ந்து கொள்கிறார்*

# 4600

## *பாகம் 6*
## *சமகாலக் குடியேறிகளின் அனுபவங்கள்*

*சிங்கப்பூரில் குடியேற்றம் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது. அண்மைய ஆண்டுகளில் அதன் மக்கள்தொகையில் 40 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் பிறந்தவர்கள். ஒவ்வொரு வருடமும் சிங்கப்பூர்க் குடியுரிமை எடுக்கும் கிட்டத்தட்ட 22,000 பேரும் அவர்களில். உள்ளடங்குகின்றனர். சிங்கப்பூரின் வாழ்வாதாரம் தற்போது, முந்தைய காலங்களைப் போலவே, குடியேறிகளையும் அவர்கள் கொண்டுவரும் பல்வகைத் திறன்களையும் கண்ணோட்டங்களையும் வரவேற்பதைப் பொறுத்தது. இவர்கள் பல துறைகளில் நம் சமூகத்திலும் பல தொழில் சார்ந்த பொருளாதாரத்திலும் முக்கியப் பங்குகள் வகித்துவருகின்றனர்.*

*ஒவ்வொரு குடியேறித் தலைமுறையும் தனித்துவமான சவால்களை எதிர்கொண்டாலும், அக்காலக் குடியேறிகளின் பல முக்கிய அனுபவங்கள் - குடும்பத்தையும் நண்பர்களையும் விட்டுப்பிரிந்து வெகு தொலைவில் புதிய வாழ்வைக் கனவுகளோடும் கஷ்டங்களோடும் தொடங்குவது தற்போதுள்ள குடியேறிகளுக்கும் பொதுவானதாக அமைகின்றன. குடியேற்றத்தைப் பற்றியும் நம் சமூகத்தில் ஒருங்கிணைந்து பங்கு வகிக்கும் “வெளிநாட்டார்” பற்றியும் உங்கள் சொந்தக் கருத்துக்களை ஆராய்ந்தபடி சிங்கப்பூருக்கு அண்மையில் வந்து பங்காற்றிவரும் சில குடியேறிகளின் வாழ்க்கைகளுக்குள் ஒரு கண்ணோட்டம் பெறுங்கள்.*

## 4601

**1.**
***உளியால் வெட்டுதல்***

***சுவா தியாக் மிங்***

***c.1960கள்–1970கள்***

***காகிதம்***

***2011-02237***

**2.**
***"நிலைத்தளத்திலிருந்து கட்டப்பட்டது, ஒவ்வொரு முறையும் ஓர் அடுக்கு"***

***லோக் ஹொங் செங்***

***1970, 2015ல் அச்சிடப்பட்டது***

***காகிதம்***

***2016-00738***

*இந்தப் புகைப்படங்கள், நமது நவீன வாழ்க்கையின் அங்கமாக இருக்கும் பெரிய கட்டடங்களைக் கட்டுவதில் உள்ள கடுமையான உடல் உழைப்பையும் ஒத்துழைப்பையும் காட்சிப்படுத்துகின்றன. மேம்பட்ட உபகரணங்களும், விரிவான பாதுகாப்பு விதிமுறைகளும் இருந்தாலும் குறிப்பாக உயரத்தில் பணியாற்றும் போது, இன்றளவும் இப்பணிகளால் எழும் அபாயங்களையும் காட்டுகின்றன.*

*லோக்கின் புகைப்படத்தில் ஊழியர்கள் தோ பாயோ புதிய நகரத்தின் வீடமைப்பு வளர்ச்சிக் கழக (HDB) கட்டடத்தின் கூரையில் நிற்கின்றனர். இது சிங்கப்பூரின் சுதந்திரத்திற்கு பின்னர் விரைவில் முடிக்கப்பட்ட வீவகவின் முதல் முழுமையான வட்டார நகரமாக உருவாக்கப்பட்டது.*

## 3.
## ***வெளிநாட்டு ஊழியர் தங்குமிட தொடரிலிருந்து புகைப்படங்கள்***

***எட்வின் கூ***

***2020***

***மின்னிலக்கக் கோப்பிலிருந்து இங்க்ஜெட் அச்சு***

***2022-01035-027, 2022-01035-012***

*சிங்கப்பூரின் ஊழியரணி தொடர்ந்து வெளிநாட்டுப் பணியாளர்களை அதிகளவில் சார்ந்துள்ளது. இந்தத் தொடரில் சிங்கப்பூர் புகைப்படக் கலைஞர் 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய கொவிட்-19 பெருந்தொற்றுகாலத்தில் சிங்கப்பூரில் உள்ள வெளிநாட்டு ஊழியர்களின் வசிப்பிட ஏற்பாடுகளைப் பதிவு செய்துள்ளார். அவர்களது தங்கு விடுதிகள் பெரும்பாலும் நிரம்பியிருந்தது மட்டுமல்லாமல் சுகாதாரமற்றவையாகவும் இருந்தன. இது அவர்கள் மத்தியில் கொவிட்-19 பரவலுக்கு காரணமானது.*

*இதுபோன்ற தங்குவிடுதிகளிலும் தாதிமை இல்லங்கள் போன்ற உயர் அபாயம் இருந்த சூழல்களில் ஏற்பட்ட தொற்றுகளால் 7 ஏப்ரல் முதல் 1 ஜூன் 2020 வரை நாடு முழுவதும் "சர்கிட் பிரேக்கர்" அறிவிக்கப்பட்டது. இருப்பினும், பொதுமக்களுக்கு முடக்கம் நீக்கப்பட்டதும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டும் வெளிநாட்டு ஊழியர்கள் தொடர்ந்து தங்கள் தங்குவிடுதிகளிலும் வேலையிடங்களிலும் மட்டுமே இருக்க முடிந்தது. அவர்களது கைத்தொலைபேசிகள் மட்டுமே வெளி உலகுடன் தொடர்புகொள்ளும் வழியாக இருந்தன.*

*இந்த ஊழியர்களின் துயரமும், வசிப்பிட அவல நிலைகளும் தெரிய வந்த போது, வெளிநாட்டு ஊழியர்கள் சிறப்பாக நடத்தப்பட வேண்டும் என்று சிங்கப்பூரில் பலர் கோரினர். பின்னர், சுகாதாரம், உணவு மற்றும்*

*தங்குமிடத் தரங்கள் மீது கடுமையான விதிகள் மற்றும் அதிக இடம் கொண்ட அரசு கட்டியுள்ள தங்குவிடுதிகள் கட்டப்பட்டன.*

**4.**

***“சைனாடவுன் பகுதியில் உள்ள ஓரறை வாடகை வீட்டில் காவ் ஜியெ” மா ஜி தொடரிலிருந்து***

***சார்மைன் போ***

***2016***

***சில் பரிடா காகிதத்தில் இங்க்ஜெட் அச்சு***

***2022-00020***

**5.**

***“தமது இல்லத்திற்கு வெளியில் வா ஜியெ” மா ஜி தொடரிலிருந்து***

***சார்மைன் போ***

***2016***

***சில் பரிடா காகிதத்தில் இங்க்ஜெட் அச்சு***

***2022-00039***

*இந்த புகைப்படங்கள், சைனாட்டவுனில் ஓரறை வீடுகளில் தனியாக வாழும் ஓய்வு பெற்ற மாஜியேகள் காவ் ஜியெ, வா ஜியெ இருவரின் வாழ்க்கையைப் பதிவு செய்கின்றன. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் நடுப்பகுதிவரையில் சீனாவின் குவாண்டோங்கிலிருந்து சிங்கப்பூருக்கு வந்த மகளிர் அலையின் அங்கமாக அவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களுக்காகவும் தாய்நாட்டில் உள்ள தங்கள் குடும்பங்களுக்காகவும் இல்லப் பணிப்பெண்களாகப் பொருளீட்டினர். பொதுவாக கடுமையான முறையில் எவரையும் சாராமல் வாழும் பல மாஜியேகள், தங்களது முதலாளிகளின் குடும்பங்களுக்குச் சேவையாற்ற முடியாத அளவு வயதாகிவிட்டால் ஓய்வு பெறுவார்கள். சீனாவில் உள்ள*

*தங்கள் மூதாதையரின் கிராமத்திற்குச் சென்றோ முதியோர் இல்லங்களிலோ சிங்கப்பூரிலிருந்த இதுபோன்ற வாடகை வீடுகளிலோ அவர்கள் ஓய்வுப் பெறுவார்கள். பலர் தங்களது முன்னாள் முதலாளிகளுடன் கடிதங்கள், தொலைபேசி அழைப்புகள், சந்திப்புகள் மூலம் தொடர்பில் இருந்தனர்.*

**6.**

***இல்லப் பணிப்பெண் சுகியானி வாரியோமிஹார்ஜோ தமது மகள் ரோலாவுடன் இந்தோனீசியாவின் கிராமத்தில் உள்ள தமது இல்லத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம். "தி லாங் ரோடு ஹோம்"  தொடரிலிருந்து.***

***சிம் சி யின்***

***2007***

***காட்டன் ரேக்கில் இங்க்ஜெட் அச்சு***

***2021-00685***

**7.**

***இந்தோனேசிய இல்லப் பணிப்பெண் ஸ்ரீ இண்டர்சி டர்சன், யோக்யகர்தாவிலுள்ள தமது இல்லத்திற்குச் செல்ல  சாங்கி விமான நிலையத்தில் வந்திறங்கும் புகைப்படம். "தி லாங் ரோடு ஹோம்" தொடரிலிருந்து.***

***சிம் சி யின்***

***2007***

***காட்டன் ரேக்கில் இங்க்ஜெட் அச்சு***

***2021-00683***

*இல்லப் பணிப்பெண்களாக வெளிநாடுகளில் வேலை செய்யும் மகளிரில் பலர் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும் என்ற நம்பிக்கையில் உள்ள தாய்மார்கள். தங்கள் வேலையில் தங்கள் முதலாளிகளின் பிள்ளைகளைப் பராமரிக்கும் அதே வேளையில் தாங்கள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிந்திருப்பதால் தங்களின் பிள்ளைகள் அவர்களிடமிருந்து விலகி இருப்பதும் சில தருணங்களில் புறக்கணிக்கப்படுவதும் தங்களின் நோக்கத்திற்கு முரணாக உள்ளது.*

*சில இல்லப் பணிப்பெண்கள் அதிக வருமானம் ஈட்டுவதற்காக வெளிநாட்டில் நீண்ட காலமாக இருந்தாலும், மற்றவர்கள் தங்கள் குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிந்த பிறகு வீடு திரும்பத் தெரிவு செய்கின்றனர். உதாரணமாக, ஸ்ரீ இண்டர்சி டர்சன் ஆறரை ஆண்டுகள் சிங்கப்பூரில் பணியாற்றிய பிறகு தங்கள் குடும்பத்தின் வீடு புதுப்பிக்கப்பட்டதும் வீடு திரும்பினார். மேலும், சுகியானி வாரியோமிஹார்ஜோ, தன் குடும்பத்தின் கடன்களை அடைப்பதற்காக வெளிநாட்டில் இருந்த காலங்களுக்கிடையில் தன் மகள் ரோலாவுடன் நேரம் செலவிட முயன்றார்.*

## 8.

***ஏஞ்சல்ஸ் ஆஃப் மெர்சி* தொடரிலிருந்து புகைப்படங்கள்**

***பாப் லீ***

***2020***

***மின்னிலக்கக் கோப்பிலிருந்து இங்க்ஜெட் அச்சு***

***2022-01028-029, 2022-01028-004***

*இந்த புகைப்படத் தொடர் கொ விட்-19 பெருந்தொற்றின் சவாலான காலத்தில் சிங்கப்பூரில் தாதிகளின் தினசரி பணிகளைக் காட்சிப்படுத்துகிறது. அவர்கள் அதிகப்படியான பணிகளுடன் போராடி,*

*பல அடுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உடைகளை அணிந்துகொண்டு, தொற்று அபாயத்தைத் தொடர்ந்து எதிர்கொண்டனர். சிங்கப்பூரில் பணியாற்றும் தாதிகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி பிலிப்பீன்ஸ், மலேசியா, மியான்மார், இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள்.*[4] *குடும்பங்கள் வெளிநாட்டில் இருந்தவர்களுக்கு, பயணங்கள் முற்றிலும் தடைபட்டதாலோ கடுமையான கட்டுப்பாடுகள் இருந்ததாலோ அன்புக்குரியோரை நீண்ட காலத்திற்குப் பிரிந்து இருந்தது இரட்டிப்பு சவாலாக இருந்தது.*

## 4602

***கெல்வின் கருணியவான் விட்ஜஜா*** *என்ற இந்தோனீசிய சீனர், சிங்கப்பூரில் வளர்ந்ததாலும் தேசிய சேவை ஆற்றி யதாலும் தமது கண்ணோட்டம் எப்படி மாறியது என்பதை விவரிக்கிறார்.*

*சிறப்பு நன்றி: திரு. கெல்வின் கருணியவான் விட்ஜஜா*

*ஃபஸ்லி இலாஹி ருபெல், வெளிநாட்டு ஊழியரான இவர், சிங்கப்பூரில் தமது ஆரம்பகால அனுபவங்களையும் சவால்களையும் நினைத்துப்பார்க்கிறார்.*

*காணொளி அன்பளிப்பு : மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

*லீ சன்ஜீ என்ற முன்னாள் மாஜே, பணி ஓய்வு பெற்ற பிறகு தமது வாழ்க்கையைப் பற்றி பகிர்கின்றார்.*
*காணொளி அன்பளிப்பு: மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

*மொஹார் கான் என்ற வெளிநாட்டு கட்டுமானத் தொழிலாளி, கொவிட்-19 பெருந்தொற்றின்போது ஊழியர்களின் அனுபவங்களைப் பற்றி, "வீட்டில் இருக்கவும்" என்ற தலைப்பிலான தமது கவிதையைப் பாடுகிறார்.*

*காணொளி அன்பளிப்பு: மீடியாகார்ப் பிரைவேட் லிமிடெட்*

*ரொபினா “பிங்” நவட்டோ, தொண்டூழியரும் முன்னாள் இல்லப் பணியாளருமான இவர், தமது எண்ணங்களை அவரது கவிதையின் வழி வெளிப்படுத்துகிறார்.*

*சிறப்பு நன்றி: குமாரி ரொபினா "பிங்" நவட்டோ*

*லூ யம் சம், ஒரு சம்சுய் பெண்ணாகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின் தமது வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்துகொள்கிறார்.*

*காணொளி அன்பளிப்பு: ரிபப்ளிக் பலதுறைத் தொழிற்கல்லூரி, வர்த்தகப் பள்ளியின், மக்கள் தொடர்பு பட்டயக் கல்வி மாணவர்கள்*

# 5000

## *அத்தியாயம் 5*
## *அலைகளின் உருவாக்கம்*

*தன் வரலாறு முழுவதும், சிங்கப்பூர் சிறியதொரு தீவாக இருந்தபோதிலும் எப்போதும் தன்னளவை மீறிய சாதனைகளை எட்டியுள்ளது. இதுவரை விளக்கப்பட்டபடி, பரந்த உலகத்துடன் வரலாற்றுப் பின்னணியில் தொடர்புகளை ஏற்படுத்தி சிங்கப்பூர் ஆற்றை வர்த்தகத்திற்கும் கலாசாரத்திற்கும் அடிநாதமாகக்கொண்டு இத்தகைய மிகச்சிறந்த சாதனைகள் படைத்துள்ளதை இக்கண்காட்சி வெளிப்படுத்தியுள்ளது,*

*சிங்கப்பூர் தன் அளவில் சிறியதாயிருந்தாலும் தன் நிலப்பரப்பளவை விரிவுபடுத்த இடையறாது முயற்சி செய்ததோடு, திறந்த அணுகுமுறையுடன் மக்கள் வரத்தைக் கட்டியெழுப்ப இன்றைய சிங்கப்பூரை வடிவமைத்த மக்களை இருகரங்களால் ஏற்றுக்கொண்டுள்ளது. இன்னும், சிங்கப்பூர் கதையென்பது அதன் சுதந்திரத்திற்குப் பிந்தைய வளர்ச்சியும் மேம்பாடும் எனும் அம்சங்களால் விளக்கப்படுகிறது. இந்த இறுதிப்பிரிவில், சிங்கப்பூர் அனைத்துலக நகர-நாடாகவும், சிங்கப்பூரர்கள் அனைத்துலக மனப்பான்மையுடைய குடிமக்களாகவும் இருந்து, வட்டார மற்றும் அனைத்துலக அளவில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதையும், அலைகளை உருவாக்கியதையும் ஆராயப்போகிறோம்.*

## 5001

***எவரஸ்ட்*** *சிகரத்தில் பறக்கும்* ***சிங்கப்பூர்க் கொடி***

***25 மே 1998***

**ரேயொன்**

***2001-06103***

*உலகின் உயரமான மலையை வெற்றிகரமாக சிங்கப்பூர் அணி ஏறியதைக் குறிக்க இந்தக் கொடி 1998ஆம் ஆண்டு மே 25ஆம் தேதி எவரஸ்ட் சிகரத்தின் உச்சியில் நாட்டப்பட்டது. சிங்கப்பூர் நேரப்படி காலை 8.30 மணிக்கு சிங்கப்பூர் எவரஸ்ட் அணியைச் சேர்ந்த எட்வின் சியு, கூ சியு சியாவ் ஆகிய இரண்டு உறுப்பினர்கள் 8,848 மீட்டர் உயரமுள்ள மலையை ஏறி அனைத்துலக உயரங்களைக் கடக்க சிங்கப்பூர் கொண்டுள்ள வெல்ல முடியாத ஆற்றலை வெளிப்படுத்தினர்.*

# 5100

## *பாகம் 1*
## *அனைத்துலக மேடை*

*சிங்கப்பூர் அரசதந்திரத்தில் தலைமைத்துவம் வகிக்கும் நாடாகவும் வட்டார அளவிலும் உலக அளவிலும் முக்கிய நிகழ்ச்சிகளை நடத்த நம்பிக்கையான, பாதுகாப்பான இடமாகவும் அடையாளம் காணப் பட்டுள்ளது.*

# 5101

## 1.
***ஐக்கிய நாட்டு நிறுவனத்தில் சிங்கப்பூரின் கொடி** ஏற்றம்.*

***1995***

***காகிதம்***

***2010-01524-023***

*1965ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாட்டு நிறுவனக் கட்டடத்தின் முன் சிங்கப்பூர்க் கொடி முதன்முறையாக ஏற்றப்பட்டது. ஆகஸ்ட் 9ஆம் தேதி சுதந்திரம் பெற்ற ஒரு மாதம் சற்றே கடந்து சிங்கப்பூர் ஐக்கிய நாட்டு நிறுவனத்தில் இணைந்த நாளை இது குறிக்கிறது. இரண்டாம் உலகப் போர் முடிந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுசரிக்கும் விதமாக இந்தப் புகைப்படத்தின் பிரதிகள் சிங்கப்பூரில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பையில் சேர்க்கப்பட்டது.*

## 2.
***லீ குவான் யூவும் காமன்வெல்த்தும் எழுதியது அலெக்ஸ் ஹோரசே***

***1969***

***காகிதம்***

***2007-52593***

*இந்த நூல், அரசியல் நிருபரும் வாழ்க்கை வரலாற்றாசிரியருமான அலெக்ஸ் ஹோரசேவால் எழுதப்பட்டது. இதில் காமன்வெல்த் உறுப்பு நாடுகள் 1969ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி லண்டனில் நடத்திய 17வது கூட்டத்தையும் அதில் நடந்தவற்றையும் விவரிக்கிறது. குறிப்பாக, அப்போதைய பிரதமர் லீ குவான் யூ ஆற்றிய பங்கில் நூல் கவனம் செலுத்துவதோடு மாநாட்டில் அவர் ஆற்றிய உரைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நூல் அனைத்துலக ஊடகங்கள் நிகழ்வுகள்*

*பற்றி வெளியிட்ட சிறப்பம்ச செய்திகளையும் விமர்சனங்களையும் கூட உள்ளடக்கியிருந்தது.*

## 3.

***மாபெரும் சிம்பாப்வே காமன்வெல்த் வெள்ளி**க் கோப்பை*

*1991*

**உலோகம்**

***2022-00403***

***கௌரவ மூத்த அமைச்சர் கோ சொக் டொங் அலுவலகத்தின் அன்பளிப்பு***

## 4.

***காமன்வெல்த் பேராளர்களின் தலைவர்கள் சிங்கப்பூர்**இல் **நடைபெற்ற காமன்வெல்த் அரசாங்கத் தலைவர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டனர்***

***14 ஜனவரி 1971***

***மறுவுருவாக்கம்***

***தகவல், கலைகள் சேகரிப்பு அமைச்சு, வழங்கியோர் சிங்கப்பூர் தேசிய** ஆவணக் **காப்பகம்***

*ஐக்கிய நாட்டு நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட ஒரு மாதங்களுக்குள் 1965 அக்டோபர் 15ஆம் தேதி சிங்கப்பூர் காமன்வெல்த் அமைப்பின் 22 ஆவது உறுப்பு நாடானது. 1971 ஜனவரியில் காமன்வெல்த் அரசாங்கத் தலைவர்களுக்கான கூட்டத்தை சிங்கப்பூர் முதல்முறையாக ஏற்று நடத்தியது. "புதிதாக சுதந்திரமடைந்த ஒரு நாட்டிற்கு ஒரே மாதிரியான அரசாங்க அமைப்புகளை கொண்ட நாடுகளுடனும் ஒரே பின்னணியைக் கொண்ட அவற்றின் தலைவர்கள், அதிகாரிகளுடனும் காமன்வெல்த் அமைப்பு இணைப்புகளை வழங்கியது," என்று விளக்கமளித்தார் அப்போதைய பிரதமர் லீ குவான் இயூ. "குறிப்பாக, இந்தக் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட காமன்வெல்த் கொள்கை பிரகடனம்*

*காமன்வெல்த்தின் அடையாளம், பண்புகள், இலக்குகள் ஆகியவற்றை வரையருத்தது".*

**5.**

***திரு லீ குவான் யூக்கு வழங்கப்பட்ட ஆசியான்ம் சாதனை மில்லேனிய விருது 2001***

***10 செப்டம்பர் 2001***

***2021-00770***

***மலாய் மரபுடைமை நிலையத்திலிருந்து கடன் பெற்றது***

***லீ சியன் லூங்கின் அன்பளிப்பு***

*சிங்கப்பூர், தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பை (ஆசியான்) தோற்றுவித்த ஓர் உறுப்பு நாடு, 1967ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட அது வட்டார அளவில் பொருளியல், சமூக, கலாசார ரீதிகளிலான ஒருங்கிணைப்பை ஊக்கிவிப்பதற்காக தொடங்கப்பட்டது. இந்தத் தளத்திலிருந்து ஆசியான் வர்த்தக மன்றமாக தனியார் ஆசியான் வர்த்தகங்களுக்கான ஒரு கூட்டமைப்பாக உருவெடுத்தது. சிங்கப்பூரின் உருமாற்றத்தில் முன்னணி பங்கு வகிப்பையும் மற்றும் ஆசியானுக்கான பங்களிப்பையும் அங்கீகரிக்க 2001ஆம் ஆண்டு அந்த அமைப்பு இந்த ஆசியான் சாதனை ஆயிரமாண்டு ( மில்லெனிய ) விருதை அப்போதைய மூத்த அமைச்சர் லீ குவான் யூவுக்கு வழங்கியது.*

**6.**

***முதல் இளையர் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான சுடர்***

*2010*

***அலுமினியம் உலோகங்கள்***

***NAS2011-00091-001***

*2010ஆம் ஆண்டு தொடக்கம் கண்ட இளையர் ஒலிம்பிக் விளையாட்டுகளை சிங்கப்பூர் ஏற்று நடத்தியது. கிட்டத்தட்ட பத்து நகரங்கள் விளையாட்டுகளை ஏற்று நடத்த விருப்பம் தெரிவித்திருந்தபோதும் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் சிங்கப்பூர் வெற்றி பெற்றது. கிரீஸிலிருந்து சிங்கப்பூர் வரை 2,400 வீரர்கள் ஐந்து நகரங்களைக் கடந்து ஏந்திவந்த இந்தச் சுடர் திறப்பு விழாவை தொடங்கிவைக்க பயன்பட்டது. அதையடுத்து ஒலிம்பிக் விளையாட்டுகளின் முதலாம் ஆண்டு நிறைவையின்போது அனைத்துலக ஒலிம்பிக் குழுவின் அப்போதைய துணைத் தலைவர் திரு இங் செர் மியாங் அப்போதைய மதியுரை அமைச்சர் லீ குவான் யூவிடம் சுடரை வழங்கினார்*

## 7.

***2018ஆம் ஆண்டு வடகொரிய- அமெரிக்க உச்சநிலைச் சந்திப்பின்போது வழங்கப்பட்ட பாதுகா**வளர் அனுமதி **ப்பு அட்டைகள்***

*2018*

***பிளாஸ்டிக்***

***2018-01191-001 & 002***

***சிங்கப்பூர்க் காவல்துறையின் அன்பளிப்பு***

*2018ஆம் ஆண்டு ஜூன் 12ஆம் தேதி அமெரிக்க அதிபர் டோனல்டுடிரம்ப்புக்கும் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னுக்கும் இடையே நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பை சிங்கப்பூர் ஏற்று நடத்தியது. சந்திப்பின்போது இருநாட்டுத் தலைவர்களும் வாஷிங்டனுக்கும் பியோங்யாங்குக்கும் இடையே புதிய உறவை நிறுவ உறுதி பூண்டனர். பாதுகாப்பான நிர்வாகத்துக்குப் பெயர் பெற்றதாலும் உயர் மட்ட அனைத்துலக நிகழ்ச்சிகளை நடத்துவதில்*

அனுபவம் உள்ளதாலும் தலைவர்கள் சந்திக்க சிங்கப்பூர் தேர்வுசெய்யப்பட்டது. பேராளர்களைக் கவனித்துக்கொள்ள நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இந்த அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன.

# 5200

## *பாகம் 2*
## *மனமார்ந்த உழைப்பு*

அனைத்துலக சுகாதார நெருக்கடிகளிலும் பேரிடர்களிலும் சிங்கப்பூர் உள்ளூரிலும் அனைத்துலக அளவிலும் மனிதநேய முயற்சிகள் உட்பட பாதிக்கப்பட்டோருக்கு உதவியுள்ளது.

# 5201

## 1.

***துணிச்சல் நட்சத்திரப் பதக்கம்***

***2003***

***வெள்ளி***

***2004-00487***

***தேசியச் சுகாதாரப் பராமரிப்பு குழுமத்தின் அன்பளிப்பு***

*2003ஆம் ஆண்டு துணிச்சல் விருது (இப்போது சுகாதாரப் பராமரிப்பு மனிதநேய விருதுகள் என்று அறியப்படுகிறது) பெற்றோருக்கு மொத்தம் 1,715 'துணிச்சல் நட்சத்திர' வெள்ளி பதக்கங்கள் வழங்கப்பட்டன - சார்ஸ் (SARS) நோயால் பாதிக்கப்பட்டோரை நேரடியாகப் பராமரித்த சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள், அவர்களில் பெரும்பாலோர் டான் டொக் செங் மருத்துவமனையை சேர்ந்தவர்கள். துணிச்சலான அவர்களுடைய முன்னணி முயற்சிகளால், இந்தச் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் உள்ளூரிலும் அனைத்துலக அளவிலும் சார்ஸ் தொற்றுநோயை கட்டுப்படுத்த உதவினர்.*

## 2.

***2020ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி முதல் சிங்கப்பூரருக்குச் செலுத்தப்பட்ட ஃபைசர்-பையோன்டெக் கொவிட்-19 தடுப்பு மருந்து இருந்த குப்பி***

***2021ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் தேதி அப்போதைய பிரதமர் லீ சியன் லூங்குக்கு இரண்டாவது முறை போடப்பட்ட ஃபைசர்-பையோன்டெக் கொவிட்-19 தடுப்பு மருந்து இருந்த குப்பி***

***கண்ணாடி, உலோகம், தாள்***

***2021-00775 and 2021-00776***

***சுகாதார அமைச்சின் அன்பளிப்பு***

*2020ஆம் ஆண்டு கொவிட்-19 தொற்றுநோய் உலகை உலுக்கியபோது சிங்கப்பூரில் போடுவதற்கு அனுமதிக்கப்பட்ட முதல் தடுப்பூசி ஃபைசர்-பையோன்டென் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் தேதி முதல் தடுப்பூசி ஒரு சிங்கப்பூரருக்குப் போடப்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் சிங்கப்பூர் அண்டை நாடுகளுக்கும் தீவிரமாக உதவியது. ஜூன் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலக தடுப்பு மருந்து உச்சநிலைச் சந்திப்பில் அனைத்து நாடுகளும் 'தடுப்பூசியை பன்முகத்தப்படுத்துதல்' என்ற திட்டத்தின்கீழ் பங்காளித்துவத்தை வலுப்படுத்தவேண்டும் என்று அப்போதைய பிரதமர் லீ சியன் லூங் அழைப்புவிடுத்தார்.*

*அப்போதிலிருந்து சிங்கப்பூர் 100,000க்கும் அதிகமான அஸ்ட்ராஸெனிக்கா கோவிட்-19 தடுப்பு மருந்தை பாத்தாம், இந்தோனீசியாவில் உள்ள ரியாவ் தீவுகளுக்கு வழங்கியது. அதோடு 100,000 மோடெர்னா தடுப்பு மருந்துகளைப் புருணைக்கும் கிட்டத்தட்ட 100,000 ஃபைசர்-பையோன்டெக் தடுப்பு மருந்துகளை ஜோகூருக்கும் சிங்கப்பூர் கொடுத்தது. எதிர்கால பொதுச் சுகாதார நெருக்கடிகளுக்குத் தயாராக ஆசியானின் கூட்டு முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் சிங்கப்பூர் ஆசியான் நிதியிருப்புக்கு $7.9 மில்லியன் மதிப்பிலான மருத்துவப் பொருள்களை வழங்கியது.*

## 3.

***ஃப்லையிங் ஈகல் என்ற சுனாமி மீட்புப் பணியில் டாக்டர் அங் செங் பின் சிங்கப்பூர் கொடியுடன் அணிந்திருந்த கைப்பட்டை; சுனாமி நிவாரண பணி 2004 பதக்கம்***

***2004***

***வெள்ளி, துணி***

***டாக்டர் அங் செங் பின்னின் அன்பளிப்பு***

*2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி சுமத்ரா கடற்கரையோரங்களில் 9.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து பல சுனாமிகள் எழுந்ததில் பல நாடுகளில் குறைந்தது 225,000 பேர் உயிரிழந்தனர்.*

*டாக்டர் அங் செங் பின் கே.கே. மகளிர் சிறார் மருத்துவமனையின் மாதவிடாய் நிரந்தர நிற்புப் ( மெனோபாஸ்) பிரிவு, குடும்ப மருத்துவச் சேவை பிரிவு ஆகியவற்றின் தலைவர். அவர் பினாங்கில் குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்தபோது அவர் தங்கியிருந்த இடத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த ஒரு கிராமம் சுனாமியில் அழிந்தது. நடந்ததைக் கண்டு துக்கமடைந்த டாக்டர் அங் மீட்புப் பணிகளில் ஈடுபட விரும்பினார். மெர்சிரிலிஃப் என்ற அமைப்பின் தொண்டூழியரான அவர் சிங்கப்பூர் ஆயுதப் படையின் ஃபிலாயிங் ஈகல் மீட்புப் பணியில் இணைக்கப்பட்டு ஒரு தாதி, ஒரு குழந்தை மருத்துவர், ஒரு பொது மருத்துவர், மருத்துவ ஊழியர்கள் ஆகியோருடன் பண்டா அச்சேக்கு அனுப்பப்பட்டார். ஒரு வகுப்பறையில் வைத்து அந்தக் குழு ஒவ்வொரு நாளும் 300க்கும் அதிகமானோருக்குச் சிகிச்சை அளித்தனர்.*

# 5300

## *பாகம் 3*
## *புத்தாக்கத்துக்கான துணிவு*

*சிங்கப்பூர் 1960களிலிருந்து துரிதமான தொழில்மயமாகும் பாதையில் சென்றதால் உள்ளூர் ஆராய்ச்சியாலும் வட்டார ரீதியிலும் அனைத்துலக அளவிலும் மேம்பாட்டு முயற்சிகள் சென்றடைவதால் புத்தாக்கத்துக்கான உணர்ச்சி மேலோங்கியது. புத்தாக்கத்துக்கான திடத்துடன் உள்நாட்டு ஆராய்ச்சியிலும் மேம்பாட்டிலும் சிங்கப்பூர் 1960களில் மேற்கொண்ட துரிதமான தொழில்மயமாக்கும் நடவடிக்கைகள், வட்டார அளவிலும் உலகிலும் நேர்மறை விளைவுகளை ஏற்படுத்தின.*

## 5301

### 1.

***இரும்பு,**மற்றும் **எஃகு ஆலை***

***டான் லிப் செங்***

***1970***

*நிற அச்சுப்படம்*

***2008-00163***

*புகைப்படக் கலைஞர் டான் லிப் செங்கால் எடுக்கப்பட்ட தேசிய இரும்பு மற்றும் எஃகு ஆலையின் இந்தப் புகைப்படம் அப்போதிருந்த அறிவியல், தொழில்நுட்ப அமைச்சு '2 மில்லியனுக்கான அறிவியலும் தொழில்நுட்பமும்' என்ற தலைப்பில் வெளியிட்ட நூலின் அட்டை படமாகப் பயன்படுத்தப்பட்டது. இளம் நாடான சிங்கப்பூரின் முன்னேற்றத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் எவ்வளவு முக்கியம் என்பதை அந்த நூல் வலியுறுத்தியது. இன்று வரை, டானின் அட்டை படம் தொழில்துறைக்கும் முன்னேற்றத்திற்கும் தீவிர புத்தாக்க உந்துதலாக இருக்கும் பிரிக்கமுடியாத இணைப்பை வெளிப்படுத்துகிறது.*

### 2.

***புலாவ் புக்கோமில் அமைந்த ஷெல் சுத்திகரிப்பு நிலையத்தின் வெளிப்புற மற்றும் உள்புறக் காட்சிகள்***

***டேவிட் டேய்***

***1960s***

***ஜெலட்டின் வெள்ளி அச்சுப்படங்கள்***

***2005-00673 and 2005-00680***

***வெரீனா டேயின் அன்பளிப்பு***

*பிரபல பன்னாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான ஷெல், 1961 ஜூலை 26ஆம் தேதி, புலாவ் புக்கோமில் சிங்கப்பூரின் முதல் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் திறந்தது. இது சிங்கப்பூரை பெட்ரோக்கெமிக்கல் துறையின் வட்டார நடுவமாக மாற்றும் பயணத்தின் மைல்கல்லாக ஆக்கியது. 1953 முதல் 1978 வரை தஞ்சோங் கதோங்கில் ~~ஷில்~~ வெஸ்ட்லேக் புகைப்பட சேவையை நடத்திய சிங்கப்பூர்ப் புகைப்படக் கலைஞர் டேவிட் டேய் எடுத்த இப்புகைப்படங்கள், சுத்திகரிப்பு நிலையத்தின் ஆரம்பகாலக் காட்சிகளைப் ஆவணப்படுத்தின. சுத்திகரிப்பு நிலையத்தின் வெளிப்புற உள்புறக் காட்சிகளைக் காட்டும் இப்புகைப்படங்கள் அக்காலத்தில் இருந்த நவீன வசதிகளை வலியுறுத்துகின்றன.*

## 3.

***ஹொான் சுய் சென்னின் ஃபேர்சைல்டு கைக்கடிகாரம்***

***1975***

***உலோகம், பிளாஸ்டிக்***

***2021-01187-001***

***ஹொான் குடும்பத்தின் அன்பளிப்பு***

## 4.

***ஃபேர்சைல்டு கழுத்துப்பட்டை சின்னங்கள்***

***1980s***

***உலோகம்***

***2022-00005, 2022-00006 and 2022-00007***

*சிங்கப்பூரின் ஒரு முன்னோடி பகுதிமின்கடத்தி நிறுவனமான ஃபேர்சைல்ட் 1987ஆம் ஆண்டு தேசிய பகுதிமின்கடத்தி நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டது. அதுமுதல் சிங்கப்பூர் பகுதிமின்கடத்தி உற்பத்தியில் அனைத்துலக நடுவமாக உருவெடுத்தது. அனைத்துலக*

*அளவில் உற்பத்தியான சில்லுகளில் பத்து விழுக்காடு மற்றும், அனைத்துலக அளவில் தயாரிக்கப்பட்ட பகுதிமின்கடத்தி உற்பத்தி கருவிகளில் 20 விழுக்காடு ஆகியவற்றுக்கு சிங்கப்பூர் பங்காற்றியது. 1975ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் தேதி தோ பாயோவில் சிங்கப்பூரின் இரண்டாவது ஃபேர்சைல்ட் தொழிற்சாலைஅதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டபோது இந்தத் தங்க மின்னிலக்கக் கைக்கடிகாரம் சிங்கப்பூரின் அப்போதைய நிதியமைச்சரான திரு ஹொான் சுய் சென்னுக்கு வழங்கப்பட்டது.*

## 5.

***'சிங்கப்பூர் அறிவியல் பூங்கா' என்ற தலைப்பைக் கொண்ட அஞ்சல் அட்டை***

***1980s***

***காகிதம்***

***2008-05123***

*1984ஆம் ஆண்டு திறக்கப்பட்ட சிங்கப்பூர் அறிவியல் பூங்கா, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மூலம் தொழில்துறை வளர்ச்சியை முன்னெடுக்கும் அறிவியல் வளாகத்தை அமைப்பதற்கான ஜூரோங் நகரமன்றத் (தற்போது ஜேடிசி கார்ப்பரேஷன் என்று அறியப்படுகிறது) திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அனைத்துலக தொழில்நுட்ப நிறுவனங்களை ஈர்க்க வரிச் சலுகைகளும் மற்றும் மானியங்களும் வழங்கப்பட்டன.*

## 6.

***புத்தாக்கத் தொழில்நுட்ப ஒலிப்பெருக்கி 16 ஒலி அட்டை***

***1995***

***Fibreglass, silicon, copper***

***இழைக் கண்ணாடி, சிலிக்கான், செம்பு***

***2024-00387***

***லைனஸ் குவா டெங் கூன்னின் அன்பளிப்பு***

*சிங்கப்பூரர்களின் மின்னணுத் தொழில்நுட்ப நிறுவனமான கிரியேட்டிவ் டெக்னாலஜி, 1989 ஆம் ஆண்டு 'சவுண்ட் பிளாஸ்டர்' என்ற ஒலி அட்டையை அறிமுகப்படுத்தியதால் பிரபலமாக அறியப்படுகிறது. அந்த ஒரு ஒலி அட்டை  தனிப்பட்ட கணினிகள் தத்ரூபமான ஒலியை உருவாக்குதை சாத்தியமாக்கியது. தற்போது உலகளவில் 100 மில்லியனுக்கும் அதிகமான 'சவுண்ட் பிளாஸ்டர்' அட்டைகள் கணினிகளில் பொருத்தப்பட்டுள்ளன, அது கிரியேடிவ் டெக்னாஜி நிறுவனத்தை தனிப்பட்ட கணினி பொழுதுபோக்கில் முன்னணி நிறுவனமாக்கியது. இது மைக்ரோசாஃப்ட் கார்ப்பரேஷன், ஆப்பிள் இன்க் போன்ற அனைத்துலகப் பெருநிறுவன வரிசையில் நாஸ்டாக் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட முதல் சிங்கப்பூர் நிறுவனம் ஆகும்.*

## 5302

***அகச்சிவப்புக் கதிர்களைக் கொண்டு காய்ச்சலைப் பரிசோதிக்கும் கருவி***
***2003***
***இரும்பு, கண்ணாடி, பிளாஸ்டிக்***
***தற்காப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைப்பின் அன்பளிப்பு***

*சார்ஸ் நோயின் முக்கிய அறிகுறிகளில் ஒன்றான காய்ச்சலைப் பெருங்கூட்டத்தில் பரிசோதனை செய்ய அகச்சிவப்புக் கதிர்களைக் கொண்டு காய்ச்சலைக் கண்டறியும் கருவியை சிங்கப்பூரின் தற்காப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைப்பு (டிஎஸ்டிஏ) வழிநடத்திய குழுவால் கண்டுபிடிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் தேதி, அப்போதைய சுகாதார அமைச்சர் லிம் ஹெங் கியாங் சிங்கப்பூரைப்*

*பாதித்த சார்ஸ் நெருக்கடியைக் கையாள டிஎஸ்டிஏயின் உதவியை நாடினார்.*

*சிங்கப்பூர் ஆயுதப் படையிடமிருந்து இரவல் பெற்ற ராணுவ அகச்சிவப்புக் கதிர்களைப் பயன்படுத்தும் கேமராவைப் பயன்படுத்தி எஸ்டி இலெக்டிரோனிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து 36 மணி நேரத்துக்குள் டிஎஸ்டிஏ குழு முன்மாதிரியைத் தயாரித்தது. ஒரு வாரத்திற்குள் IFss கருவி சாங்கி விமான நிலையத்தில் பயன்பாட்டிற்கு வந்து பயணிகளின் வெப்பத்தை சோதிக்க தேவைப்படும் மனித ஆற்றலை மூன்றிற்கு இரண்டு என்ற விகிதத்தில் குறைத்தது மற்றும் சார்ஸ் நோய் வாய்ப்பு உள்ளவர்களை வேகமாக தனிமைப்படுத்த உதவியது.*

*2003ஆம் ஆண்டு டைம் சஞ்சிகையில் சிறந்த கண்டுபிடிப்புகளில் ஒன்றாகப் பட்டியலிடப்பட்ட அகச்சிவப்புக் கதிர்களைப் பயன்படுத்தும் பரிசோதனைக் கருவி பெருங்கூட்டத்தின் வெப்பநிலையைப் பரிசோதிக்க உலகின் முதல் அகச்சிவப்புக் கதிரை அடிப்படையாகக் கொண்டதால் அனைத்துலக கவனத்தை ஈர்த்தது. இன்று அதிக மக்கள் கூட்டம் உள்ள பல பொது இடங்களில் பரிசோதனை செய்ய அத்தகைய கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.*

# 5400

## *பாகம் 4*
## *உள்ளூர் தொடங்கி உலகமெங்கும்*

*சிங்கப்பூர் அடையாளத்தின் தனித்துவக் குறியீடுகளாக இருக்கும் மொழியும் உணவும், உலகளவில் அங்கீகாரம் பெற்றுப் பிரபலமடைந்து வருகின்றன. சிங்கப்பூரின் ஆங்கில மொழிப்பண்பாகக் கூறப்படும் 'சிங்கிலிஷ்', ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதியில் இடம்பெற்றுள்ளது. சிங்கப்பூரின் 'ஹாக்கர் சென்டர்' எனும் உண்வங்காடி நிலைய உணவுக் கலாசாரம் யுனெஸ்கோவின் மனிதகுலத்தின் தொட்டுணரமுடியாத கலாசார மரபுடைமைப் பிரதிநிதித்துவப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.*

# 5401

## 1.

***“டாக்கிங் காக்: தி மூவி” திரைப்பட விளம்பரப் பதாகை***

*2002*

***காகிதம்***

*2007-056689*

*“டாக்கிங் காக்: தி மூவி” - ஜொய்ஸ்லின் வூ, காலின் கோ ஆகியோர் எழுதி, தயாரித்து, இயக்ககிய திரைப்படம் ஆகும். இதே பெயரைக் கொண்ட இணையதளம் பிரபலமடைந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இந்த நகைச்சுவை திரைப்படம், சிங்கிலிஷில் அமைந்த நான்கு ஓவியங்களை கொண்டது. 2002 ஆம் ஆண்டு சிங்கப்பூர் அனைத்துலகத் திரைப்பட விழாவில் முதல் முறையாக திரையிடப்பட்டது. அதன்பின், 2003 ஆம் ஆண்டு ஃப்ரான்ஸில் உள்ள ‘பெஸ்டிவல் டு ஃபிலிம் ஏசியாட்டிக் தி டோவெல் ’ திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டது.*

## 2.

***“மகான் & மசாக் வித் மைக்ரோசாஃப்ட் 2004” என்ற தலைப்பில் காகிதப் பை***

*2004*

***காகிதம்***

*2009-02796*

*20ஆம் நூற்றாண்டின் மத்தியில் சிங்கப்பூரில் பிரபலமாக இருந்த வடிவத்தில் தயாரிக்கப்பட்ட இக்காகிதப் பை, ‘மகான் & மசாக்’ எனும் தலைப்பில் நடைபெற்ற ‘மைக்ரோசாஃப்ட்’ நிறுவனத்தின் சிங்கப்பூர்க் கிளையின் வாடிக்கையாளர் பாராட்டு நிகழ்ச்சிக்காக தயாரிக்கப்பட்டது.*

*தலைப்பு ''சாப்பிடுதல்'',மற்றும் ''விளையாடுதல்'' என்பதை குறிக்கும் மலாய் வார்த்தைகள் அவை 'சிங்கிலிஷ்' அகராதியில் சேர்ந்தன. பையின் பின்புறம், சிங்கப்பூரின் தேசிய மொழிகளான மலாய், ஆங்கிலம், சீனம், தமிழ் மொழிகளில் 'நன்றி' எனும் சொல் இடம்பெற்றிருந்தது.*

**3.**

***சிங்கிலிஷ் நிரந்தர நாட்காட்டி***

***டான் கோ***

***2013***

***காகிதம், உலோகம்***

*இது, 'சிறந்த சிங்கப்பூர் நினைவுப் பொருள்கள்' எனும் தலைப்பில் தேசிய மரபுடைமைக் கழகம் உருவாக்கிய விற்பனை பொருள் தொடரின் ஒரு பகுதியாக டான் கோ வடிவமைத்த சிங்கிலிஷ் நிரந்தர நாட்காட்டி. சிங்கப்பூரில் உள்ள சீனக் குடும்பங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் நிலவு ஆண்டு அடிப்படையிலான நாள்காட்டி ஒருவருடைய நாள் முழுதும் பயன்படும் சமகால 'சிங்கிலிஷ்' சொற்களைக் கொண்ட நாள்காட்டி இது.*

**4.**

***சிங்கப்பூர் ஆங்கில அகர வரிசையில் அமைந்த குளிர்சாதனத்தில் அழகுக்காக ஒட்டப்படும்ம் காந்தங்கள்***

***சூப்பர்மாமா***

***2023***

***உலோகம், நெகிழி***

***2025-00007***

*இவை, 'சூப்பர்மாமா' எனும் சிங்கப்பூரைச் சேர்ந்த வடிவமைப்பு நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட தொடர் காந்தங்களுல்*

*தேர்ந்தெடுக்கப்பட்ட சில. ஏ தொடங்கி ஸெட் வரை ஆங்கில அகர வரிசையில் 'சிங்கிலிஷ்' எளிய சொற்களைக் காட்டும் காந்தங்கள். இவை, 'சிங்கிலிஷ்' எவ்வாறு பல்வேறு மொழிகளையும் கலாசாரங்களையும் தனித்துவமாக இணைத்து, உள்ளூர் முதல் உலக அளவில் பிரபல மொழி வழக்காக உருவெடுத்துள்ளது என்பதைக் காட்டுகின்றன.*

**5.**

***யுனெஸ்கோவின் மனிதகுலத்தின் தொட்டுணர முடியாத கலாசார மரபுடைமைப் பிரதிநிதித்துவப் பட்டியலில் 'ஹாக்கர்' எனும் உணவங்காடி நிலையக் கலாசாரத்தைச் சேர்க்க, சிங்கப்பூரின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கில் தேசிய மரபுடைமைக் கழகம் தயாரித்த விளம்பரப் பொருள்கள்.***

***2020***

***காகிதம்***

**6.**

***சிங்கப்பூரின் 'ஹாக்கர்*** *உணவங்காடி*

***கலாசாரத்தை நினைவுகூரும் 2 வெள்ளி நாணயம்***

***2021***

***நிக்கல் பூசப்பட்ட துத்த**நாகம்*

*16 டிசம்பர் 2020-ல் யுனெஸ்கோவின் மனிதகுலத்தின் தொட்டுணர முடியாத கலாசார மரபுடைமைப் பிரதிநிதித்துவப் பட்டியலில் சேர்க்கப்பட்ட போது சிங்கப்பூரின் 'ஹாக்கர்' எனும் உணவங்காடி நிலையக் கலாசாரம் உலக அங்கிகாரத்தை பெற்றது. சிங்கப்பூரின் முயற்சிக்கு ஆதரவளிக்க இவ்விளம்பரப் பொருள்கள் தேசிய மரபுடைமைக் கழகத்தால் படைப்பாற்றலுடைய வழிகளில் தயாரிக்கப்பட்டன, எங்கும் கிடைக்கும் உணவங்காடி நிலையங்களில் மேசைகளை முன்பதிவு செய்யப் பொதுவாகப் பயன்படுத்தப்படும்*

*‘டிச்யூ’ பாக்கெட்டுகள் மற்றும் சிங்கப்பூர் உணவங்காடி நிலையச் சமையலின் பன்முகப் பண்பாட்டுத் தன்மையை காட்டும் விளக்கக்காகிதங்கள் போன்றவை. உணவங்காடி சமையல் திறமைகளை போற்றுவது, சிங்கப்பூரின் பலகலாச்சார சமூகம், எப்படி உணவங்காடி மையங்கள் அனைத்து சமூகத்திற்கும் இடமளித்து பணிசெய்கிறது என்பதை நினைவுகூறும்  விதமாகவும், சிங்கப்பூர் நாணயசாலை நினைவு நாணயத்தை வடிவமைத்து வெளியிட்டது,.*

## 7.

***தி குக்கிங் ஆஃப் சிங்கப்பூர் - கிறிஸ் யியோ, ஜாய்ஸ் ஜூ***

***1993***

**காகிதம்**

***2010-02593***

*ஹாங்காங்கில் பிறந்து, சிங்கப்பூரில் வளர்ந்து கல்வி கற்ற சமயற்கலை வல்லுநரும் உணவக உரிமையாளருமான கிறிஸ் யியோ, 1987 ஆம் ஆண்டு சான் பிரான்சிஸ்கோவில் 'ஸ்ட்ரெய்ட்ஸ் காஃபே' எனும் உணவகத்தைத் திறந்தார். அதன் மூலம் சிங்கப்பூர் உணவுவகைகளை அமெரிக்கர்களுக்கு அறிமுகப்படுத்தினார். 1993 ஆம் ஆண்டு, சான் பிரான்சிஸ்கோவின் சைனாடவுனைச் சேர்ந்த, சீன மற்றும் தெற்காசிய சமையல் நிபுணரான ஜாய்ஸ் ஜூவுடன் இணைந்து, இப்புத்தகத்தையும் எழுதினார்.*

## 8.

***"சிங்கப்பூர் உள்ளூர் உணவு" எனும் தலைப்பில் அஞ்சல் அட்டை***

***1980s***

**காகிதம்**

***2008-05450***

*இந்த அஞ்சல் அட்டை, அனைத்துலகப் பார்வையாளர்களுக்குப் பொரித்த ஹொக்கைன் மீ, பக் குத் தே, சாத்தே, மீ ரிபஸ் ஆகிய சில பாரம்பரிய உள்ளூர் உணவு வகைகளை அறிமுகம் செய்கிறது. இவை புகழ்பெற்ற சமையல் புத்தக எழுத்தாளர் திருமதி லியாங் யீ சூவால் பரிந்துரைக்கப்பட்டது, அவர் 1977 ஆம் ஆண்டு வெளியான "சிங்கப்பூர் குக்கிங்" எனும் அவரது நூலால் அறியப்பட்டவர்.*

# 5500

## *பாகம் 5*
## *அலையை உருவாக்கியோர்*

*கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் சிங்கப்பூரர்கள் தனித்துவமான வழிகளில் உலகிற்குத் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளனர். வட்டார, அனைத்துலக அரங்கில் அங்கீகரிக்கப்படுவதைத் தாண்டி, பல்வேறு துறைகளில் முன்னோடிகளாக இருப்பதனாலும், சிறப்பாக வழிநடத்துவதன் மூலமும், சிங்கப்பூரர்கள் தங்களுக்கே உரிய பாதையில் சென்று உலகளவில் பெரும் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.*

*இந்த இரு சுவர்களும், 'சமகால சிங்கப்பூர் சேகரிப்பு' முயற்சிக்காக வழங்கப்பட்ட கலைப்பொருள்களில் சிலவற்றைக் காட்டுகின்றன. இவை, உலகளவில் தாக்கத்தை உருவாக்கிய சிங்கப்பூரர்களை முன்னிலைப்படுத்துவதுடன், விளையாட்டு முதல் இசை, உடையலங்காரம் வரை, வழக்கமான பாதையைத் தாண்டிப் பிற துறைகளில் அவர்கள் செய்த சாதனைகளுக்கு முக்கியத்துவம் செலுத்துகின்றன.*

** உலகளவில் தாக்கம் ஏற்படுத்திய சிங்கப்பூரர்களைக் காட்சிப்படுத்தும் இம்முயற்சிக்கு நீங்களும் பங்களிக்கக்கூடிய கதைகள் அல்லது பொருள்கள் இருக்கின்றனவா? ' சமகால சிங்கப்பூர் சேகரிப்பு' முயற்சியின் ஒரு பகுதியாக, கீழுள்ள குறியீட்டின் வழியாக எங்களைத் தொடர்புகொள்ள அழைக்கிறோம்.*

## 5501

***மெக்ஸிமிலியன் மேடரின் பாரிஸ் ஒலிம்பிக் போட்டி எண் அடையாள அட்டை***

***2024***

***செயற்கைப் பொருள்கள்***

***2024-01040***

***மெக்ஸிமிலியன் மேடரின் அன்பளிப்பு***

*'கைட் ஃபாய்லிங்' எனும் புதிய நீர் விளையாட்டு 2024 பாரிஸ் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முறையாக அறிமுகம் கண்டது. மெக்ஸிமிலியன் மேடர், சிங்கப்பூரின் முதல் அனைத்துலகக் ‘கைட் ஃபாய்லிங்’ வீரராவார். 2024ஆம் ஆண்டு தனது 17 வயதில் ஒலிம்பிக் பதக்கம் வென்ற இவர், அவ்விளையாட்டில் பதக்கம் வென்ற ஆக இளம் வீரராகத் திகழ்ந்தார். 2024 ஆகஸ்ட் 9ஆம் தேதி, சிங்கப்பூர் தேசிய தினத்தன்று பாரிஸில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், வெண்கலம் வென்ற அவர், அப்போட்டியில் இந்த ஆடையை அணிந்திருந்தார்.*

## 5502

***2008 பீஜிங் பாராலிம்பிக் போட்டிகளில் யிப் பின் ஷியூ வென்ற தங்கப்பதக்கம்***

***2008***

***தங்கம் பூசப்பட்ட வெள்ளி, ஜேடு***

***யிப் பின் ஷியூவிடமிருந்து கடனாகப் பெற்றது***

*சிங்கப்பூரைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை யிப் பின் ஷியூ, 2008 பீஜிங் உடற்குறையுடையோர் ஒலிம்பிக் விளையாட்டுகளில் சிங்கப்பூருக்கான முதல் பாராலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்றார். 2008 செப்டம்பர் 15ஆம் தேதி, 50 மீட்டர் மல்லாந்து பாணி நீந்தும் இறுதிப்போட்டியை*

*57.92 வினாடிகளில் முடித்து உலகச் சாதனையை முறியடித்து வென்றார். உணர்ச்சிகள், நடவடிக்கைகளைப் பாதிக்கும் நரம்பியல் கோளாறு காரணமாக, 13 வயதிலிருந்து சக்கர நாற்காலியிலிருக்கும் யிப், இதுவரை ஐந்து முறை பாராலிம்பிக் போட்டிகளில் வென்றுள்ளார். தற்போது இரு உலகச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர். அவரது ஊக்கமளிக்கும் பயணமும் வெற்றியும் அவரது அடிகளை பின்பற்ற மற்றவர்களுக்கு பாதையை வெளிச்சமிடும்.*

## 5503

***ஒரு இனிய நாள்***

***1968***

***டான் லிப் செங்***

***கோடாக்ரோம், கோடலித் திரைப்படக் காட்சியமைப்புகளின் வண்ண அச்சு படம்***

***2008-00161***

*1960களில் தொடங்கி சிங்கப்பூரில் வண்ணப் புகைப்படத் தொழில்நுட்பங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் உள்ளூர்ப் புகைப்படக் கலைஞர் டான் லிப் செங். பலவித வண்ண ஒளிபுகும் 'ஸ்லைடுப்' படங்களை ஒன்றிணைத்து ஆழமும் தாக்கமும் கொண்ட இப்புகைப்படங்களை தயாரித்தார். 1970ஆம் ஆண்டு, அவர் ராயல் ஃபோட்டோகிராஃபிக் சொசைட்டியின் (FRPS) உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1971ஆம் ஆண்டில், புகைப்படக் கலைக்கான அனைத்துலகக் கூட்டமைப்பால் (FIAP) தங்கப் பதக்கம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்ட முதல் சிங்கப்பூரரானார்.*

## 5504

**1.**

***மார்கரெட் லெங் டானின் ஜெய்மார் பொம்மை பியானோ***

***1960s***

***மரம், பிளாஸ்டிக், உயர் கார்பன் உருக்கம்***

***மார்கரெட் லெங் டானிடமிருந்து கடனாக பெற்றது***

## 2.

*சிங்கப்பூர் இசைக்கலைஞர் மார்கரெட் லெங் டான், பொம்மைப் பியானோ வாசிப்பில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இது டான் வாங்கிய முதல் பொம்மை பியானோ, 1993 ஆம் ஆண்டு நியூயார்க் நகரின் ஈஸ்ட் விலேஜில் உள்ள ஒரு பழைய பொருள்கள் கடையில் இதனை 45 அமெரிக்க டாலர்கள் கொடுத்து வாங்கினார். அதே ஆண்டு, நியூயார்க் நகரில் உள்ள லின்கன் மையத்தில் நடைபெற்ற ஜான் கேஜ் நினைவு நிகழ்ச்சியில், அவர் இக்கருவி கொண்டு தனது முதல் நிகழ்ச்சியைப் படைத்தார். அதில் அவர் 1948 ஆம் ஆண்டு ஜான் கேஜ் இயற்றிய "ஸ்யூட் ஃபார் டாய் பியானோ" எனும் இசைத்தொகுப்பை வாசித்தார். இதுவே அவரது பொம்மை பியானோ இசைப்பயணத்தைத் தொடக்கிவைத்து, இன்றும் அவர் இத்துறையின் சிறந்த கலைஞராக தொடர்ந்து அறியப்படுகிறார்.*

## 5505

***லோ கியன் யூவின் லீ நிங் ஜெர்சி***
***2021***
***செயற்கைப் பொருள்கள்***
***2023-01245***
***லோ கியன் யூவின் அன்பளிப்பு***

*லோ கியன் யூ, பீ.டபிள்யூ.எஃப் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பில் வெற்றி பெற்ற முதல் சிங்கப்பூர் வீரர். 2021ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்ற போட்டியில், ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் அவர் பெற்ற வரலாற்று சிறப்புமிக்க வெற்றிக்காக இந்த உடை வழங்கப்பட்டது. உலகத் தரவரிசையில் 22வது இடத்தில் இருந்த லோ, 14வது தரவரிசையில் இருந்த இந்திய வீரரான ஸ்ரீகாந்த் கிடாம்பியை, 43 நிமிடப் போட்டியில் தோற்கடித்தார். காலிறுதி போட்டியில் காலில்*

*ஏற்பட்டிருந்த சுளுக்கையும் பொருட்படுத்தாமல், இந்தச் சாதனையை அவர் நிகழ்த்தினார்.*

## 5506

***பிருசல் நகரின் ரேடியோ, தொலைக்காட்சி கட்டிடத்தில் இசை நிகழ்ச்சி நடத்தும் சூ ஹோய்***

***1950s–1960s***

***ஜெலட்டின் வெள்ளி அச்சுப்படம்***

***1996-00829***

***சூ ஹோயின் அன்பளிப்பு***

*சிங்கப்பூர் இசைக் கலைஞர் சூ ஹோய், தனது 24 வயதில் 1958ஆம் ஆண்டு பெல்ஜியன் தேசிய இசைக்குழு நிகழ்ச்சியை நடத்தி, ஐரோப்பிய தேசிய இசைக்குழு நிகழ்ச்சியை நடத்திய முதல் ஆசியர் எனும் சிறப்பைப் பெற்றார். சூ ஹோய் சிங்கப்பூர் சிம்பனி இசைக்குழுவை (SSO) அதன் முதல் இசை இயக்குநராகப் பதவி வகித்தார். 24 ஜனவரி 1979 அன்று அக்குழுவின் தொடக்கவிழா இசை நிகழ்ச்சியை அவரே வழிநடத்தினார். தற்போது, அக்குழு உலகின் சிறந்த இசைக்குழுக்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.*

## 5507

***ஷெய்னா இங்கின் ஸ்டார்ம் மார்வல்-எஸ் பவுலிங் பந்து***

***2021***

***Resin***

***ரெசின்***

***2024-00011***

***ஷெய்னா இங்கின் அன்பளிப்பு***

*சிங்கப்பூரைச் சேர்ந்த பவுலிங் வீராங்கனை ஷெய்னா எங், 2011 முதல் நடக்கும் உலக டென்பின் பவுலிங் சாம்பியன்ஷிப்பில் பெண்கள்*

*ஒற்றையர் பிரிவில் ஆறு போட்டிகள் கொண்ட தொடரில் சாதனையைத் தக்கவைத்துள்ளார். 2015ஆம் ஆண்டு, அபு தாபியில் நடைபெற்ற உலக பெண்கள் பவுலிங் சாம்பியன்ஷிப்பில், சிங்கப்பூரின் முதல் தங்கப் பதக்கத்தை அவர் வென்றார். இந்தப் பவுலிங் பந்தைப் பயன்படுத்தி, 2021ஆம் ஆண்டில் துபாயில் நடைபெற்ற சர்வதேச பவுலிங் கூட்டமைப்பு (**ஐபிஎஃப்**) சூப்பர் உலக சாம்பியன்ஷிப்பில் பெண்கள் ஒற்றையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.*

## 5508

***2006 ஆம் ஆண்டின் பூசான், தென் கொரியாவில் நடைபெற்ற டபிள்யூ.டி.பி.ஏ உலக டென்பின் பந்துருட்டு (பவுலிங்) போட்டிகளில் ரெமி ஓங்க் வென்ற தங்கப் பதக்கம்***

***2006***

**உலோகம், நைலான்**

***2024-00013***

***ரெமி ஓங்கின் அன்பளிப்பு***

*ரெமி ஓங்க் உலக டென்பின் பந்துருட்டு போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் ஆறு போட்டிகள் தொடரின் சாதனையைப் 2006 ஆம் ஆண்டு முதல் தக்கவைத்துள்ளார், பூசானில் இந்தத் தங்கப் பதக்கத்தை அனைத்து பிரிவு பட்டத்தோடு வென்றபோது பெற்றார். அந்தக் காலத்தில், அனைத்துலகப் போட்டியில் சிங்கப்பூரின் முன்னணி பந்துருட்டு வீரராக இருந்த அவர், 2002 ஆம் ஆண்டு பூசானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுகளில் சிங்கப்பூர் ஆண்கள் பந்துருட்டுக் குழுவின் கேப்டனாக இருந்தார். அதில் அவர் ஆண்கள் ஒற்றையர், மூவர், மாஸ்டர்ஸ் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்றார்.*

## 5509

***டெரி ஹீ மற்றும் ஜெசிகா டானின் லீ நிங் விளையாட்டு உடைகள்***

***2022***

***செயற்கைப் பொருள்கள்***

***2023-00601 and 2023-00600***

***டெரி ஹீ மற்றும் ஜெசிகா டானின் அன்பளிப்பு***

*டெரி ஹீ, ஜெசிகா டான் ஆகியோர் காமன்வெல்த் விளையாட்டு விழாவில் பேட்மிண்டன் இரட்டையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற முதல் சிங்கப்பூரர்கள். 2022 ஆகஸ்ட் 8ஆம் தேதி பர்மிங்கஹாமில் நடந்த கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில், இக்கணவன் மனைவி இணையர் இங்கிலாந்தின் மார்கஸ் எலிஸ், லாரன் ஸ்மித்தை தோற்கடித்தனர், அரையிறுதியில், மலேசியாவின் முதலிடம் பெற்ற இணையான டான் கியான் மெங், லாய் பே ஜிங் ஆகியோரை வென்ற பின்.*

## 5510

***"எமிலி ஆஃப் எமரால்ட் ஹில்" நிகழ்ச்சிப் புத்தகம்***

***1986***

***காகிதம்***

***2014-01145-001***

***ஸ்டெல்லா கானின் அன்பளிப்பு***

***பெரனக்கன் அரும்பொருளகத்திடமிருந்து கடனாகப் பெற்றது***

*சிங்கப்பூர் நாடக ஆசிரியர் ஸ்டெல்லா கானின் "எமிலி ஆஃப் எமரால்ட் ஹில்" மேடை நாடகம், அனைத்துலக கலை விழாவில் நிகழ்த்த அழைக்கப்பட்ட முதல் சிங்கப்பூர் நாடகம். 1986 ஆம் ஆண்டு பன்னாட்டு நிறுவனமான ஷெல் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் மூலம், முன்னணி நடிகை மார்கரெட் சான் மற்றும் ஒரு நாடகக் குழுவை*

*அதே வருடம் பின்னர் எடின்பரா ஃபிரிஞ் கலை விழாவில் சிங்கப்பூரைப் பிரதிநிதிக்க நிதி திரட்டப்பட்டது.*

## 5511

***சுயப் படம்***

***சாங் சீயோக் டின்***

***1989***

***டிரைபாயிண்ட், ஒற்றைபதிப்பு***

***GI-0216***

***சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்திலிருந்து கடனாகப் பெற்றது***

*2005 ஆம் ஆண்டு தனது 35 கலைப்படைப்புகளை நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் காட்சிப்படுத்தியதன் மூலம், அக்கூடத்தில் படைப்புகளைக் காட்சிப்படுத்திய முதல் சிங்கப்பூர்ப் பெண் கலைஞர் எனும் பெயரைப் பெற்றார் சாங் சீயோக் டின். "சுயப் படம்" எனும் தலைப்பில் அமைந்த அப்படைப்புகள், 1988 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்தில் ஏறத்தாழ முழு பார்வைத் திறனையும் இழந்த பிறகு சாங் உருவாக்கிய படைப்பாகும்.*

## 5512

***ஜோசப் ஸ்கூலிங் கையொப்பமிட்ட 'மிசுனோ GX சோனிக் III' நீச்சல் அரைக்கால் சட்டை***

***2016***

***நைலான், லைக்ரா***

***2024-00077***

***ஜோசப் ஸ்கூலிங்கின் அன்பளிப்பு***

*ஒலிம்பிக் தங்க பதக்கம் வென்ற முதல் சிங்கப்பூர் நீச்சல் வீரர் ஜோசப் ஸ்கூலிங். 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் தேதி ரியோ டி*

*ஜெனிரோவில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டியின் ஆண்கள் 100 மீட்டர் வண்ணத்துபூச்சி பாணி நீச்சல்' இறுதிப்போட்டியில் அவர் இந்த நீச்சல் சிற்றுடுப்பை அணிந்திருந்தார். ஸ்கூலிங் 50.39 வினாடி என்ற  அதீத வேகத்தில் வெளிப்பட்டார், புதிய தேசிய, ஆசிய, ஒலிம்பிக் சாதனையையும் படைத்தார் மற்றும் மிகஅதிக இடைவெளியில் வெற்றி பெற்றார் 1972-இல் அமெரிக்க நீச்சல் வீரர் மார்க் ஸ்பிட்ஸிற்கு பிறகு.*

## 5513

***"செஞ்சிங் ஆஃப் தி கார்ட்" மாலை உடை***

***பென்னி ஓங்***

***c.1980s***

***துணி***

***2007-52542***

***பென்னி ஓங்கின் அன்பளிப்பு***

*பென்னி ஓங், லண்டனில் தனிப்பட்ட ஆடை வடிவமைப்பு நிறுவனத்தைத் தொடங்கிய முதல் சிங்கப்பூர் வடிவமைப்பாளர். 1974 ஆம் ஆண்டு 'சென்ட்ரல் ஸ்கூல் ஆஃப் ஆர்ட் அண்ட் டிசைனில்' (தற்போது சென்ட்ரல் செயிண்ட் மார்டின்ஸ்) பட்டம் பெற்ற ஓராண்டுக்குப் பிறகு, அவர் தான் வடிவமைத்த முதல் ஆடைத் தொகுப்பை 'லண்டன் டிசைனர் கலெக்ஷன்ஸ்' கண்காட்சியில் அறிமுகப்படுத்தினார். பென்னி ஓங் 1980 களில், மறைந்த வேல்ஸ் இளவரசி டயானா உட்பட பல உலகப்புகழ்பெற்ற வாடிக்கையாளர்களுக்கு உடைகள் வடிவமைத்தார். இந்த இரண்டு துண்டுகளால் ஆன உடை, பக்கிங்காம் அரண்மனையில் அரசரின் காவலர்கள் அணியும் விழா ஆடைகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமகைப்பட்டுள்ளது.*

## 5514

***ஷாந்தி பெரேராவின் கையொப்பமிடப்பட்ட 'நைகி ஏர் சூம் மேக்ஸ்ஃப்லை' காலணிகள்***

***2023***

***செயற்கை பொருட்கள், நுரை, கார்பன் நார், ரப்பர்***

***2023-01416***

***ஷாந்தி பெரேராவின் அன்பளிப்பு***

*1974ஆம் ஆண்டுக்கிப் பின் முதன்முறையாகச் சிங்கப்பூர் வீராங்கனை ஷாந்தி பெரேரா, 2 அக்டோபர் 2023 அன்று ஹாங்சோவில் நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டியில், சிங்கப்பூருக்கான தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். பெண்களுக்கான அந்த 200 மீட்டர் இறுதிப்போட்டியில், இவர் இக்காலணிகளை அணிந்து வெற்றி பெற்றார். இதற்கு ஐந்து வாரங்களுக்கு முன், அவர் தடகள உலக சாம்பியன்ஷிப்பில் அரையிறுதிச் சுற்றை எட்டிய முதல் சிங்கப்பூரராக உருவெடுத்திருந்தார்.*

## 5515

***"12 ஸ்டோரீஸ்" திரைப்பட விளம்பரப் பதாகை***

***1997***

***காகிதம்***

***2007-56691***

*1997 ஆம் ஆண்டு மதிப்புமிக்க கேன்ஸ் திரைப்பட விழாவின் "அன் செர்டேன் ரிகார்ட்" பிரிவில் பங்கேற்ற எரிக் கூவின் "12 ஸ்டோரீஸ்" என்ற திரைப்படம், அந்த விழாவில் திரையிடப்பட்ட முதல் சிங்கப்பூர்த் திரைப்படமாகும். 1990களில் சிங்கப்பூரில் தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பை மீட்டுருவாக்கம் செய்து, அவை பிற உள்ளூர் திரைப்படங்களும் அனைத்துலக மேடைகளில் காட்சிப்படுத்தப்பட*

*வழிவகுத்தார் கூ. 2010 ஆம் ஆண்டு, பூ ஜுங்ஃபெங்கின் "சாண்ட்காஸில்" திரைப்படம் கேன்ஸ் விழாவின் "விமர்சகர்கள் வாரம்" பிரிவில் திரையிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டு திரையிடப்பட்ட அன்டனீ செனின் "இலோ இலோ" திரைப்படம், கேன்ஸ் விழாவில் வழங்கப்படும் "கேமரா டி' ஓர்" விருதை வென்ற முதல் சிங்கப்பூர்த் திரைப்படமாகும்.*

# 6000

## *முடிவுரை*

*எதிர்காலத்தில் என்ன நடக்கும்? சிங்கப்பூர் எந்தெந்தப் பாதைகளில் செல்லப்போகிறது?*

*இந்தக் கண்காட்சி எடுத்துக்காட்டியதுபோல், சிங்கப்பூர் தொடர்ந்து சூழல்களுக்கு ஏற்ப தகவமைத்துக்கொண்டு, புத்தாக்கத்தைத் தழுவி, போட்டித்தன்மைமிக்கதாகவும் தொடர்புத்திறனுடனும் இருப்பது அவசியம். அதோடு நமது பன்முகத்தன்மையைக் கொண்டாடி, தனித்துவமிக்க கலாசாரத்தையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பாதுகாத்து, அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உறுதிசெய்ய வேண்டும். நம்மிடம் உள்ள நிலத்தாலும் கடல்களாலும் நீடித்த நிலைத்தன்மையுடனான பாதையில் பயணத்தை அமைத்து இன்றைய தலைமுறைக்கும், வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் சுற்றுப்புறத்தை பொறுப்புடன் பாதுகாத்துத் தருவதை உடனடியாக செய்யவேண்டியுள்ளது.*

*இந்த வெவ்வேறு தேவைகளை எவ்வாறு சமநிலைப்படுத்துகிறோம் என்பதில்தான் நமது எதிர்காலம் பெரிதும் சார்ந்துள்ளது. சிங்கப்பூர் இதுவரை கடந்துவந்தப் பயணத்தைப் பார்க்கும்போது, நமக்கு நம்பிக்கையுடன் இருக்கத் தகுந்த காரணங்கள் உள்ளன. நமது சிறிய பரப்பளவும் வட்டார, உலகளாவிய நடைமுறைகளைத் தாண்டி, சிங்கப்பூர் நிலைப்பெற மட்டுமல்லாமல் தழைக்கவும் எப்போதும் ஒரு வழியைக் கொண்டுள்ளது.*

சிங்கப்பூரின் கதை இன்னும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் நீங்கள் கொண்டுள்ள விருப்பங்கள், நம்பிக்கையை வெளிப்படுத்தி, எதிர்காலம் எப்படியிருக்கலாம் என்பதைப் பற்றிய ஒரு விரிவான கண்ணோட்டத்தை வழங்குகின்றன. இந்தப் பயணத்தில் எங்களுடன் சேர்ந்ததற்கும் பங்கேற்றதற்கும் மிக்க நன்றி!